www.tamilarangam.net


WOMEN'S EDUCATION & RESEARCH CENTRE

# சரிநிகர்

இதழ் 101 ஜூலை11 - ஜூலை.24 , 1996 விலை 7.00




மத்திய கிழக்குக் கனவுகள்!



ஜே.வி.பியும் இனப்பிரச்சினையும்!







# மீளாச் சிறையும் மாளாத் துயரும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பத்திரிகையாளரின் இரகசியத் தன்மை ப்ாதுகாக்கப்பட வேண்டும்

பத்திரிகையாளரின் செய்திசேகரிப்பு ரகசியத்தன்மையை கேள்விக்குள்ளாக்கி ஊறுவிளைவிக்கும் செய்கைக்கு எதிராகவும்,இலங்கை சுயாதீனத் தொலைக்காட்சிச் சேவையை தனியார் மயப்படுத்தும் திட்டத்துக்கு எதிராகவும் சுதந்திர ஊடக இயக்கம் இரு அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. (கடந்த 2.7.96ல் வெளியிட்டுள்ள அறிக்கையில் லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த ரமணி பாகொட பிரேமதிலக எனும் பெண் பத்திரிகையாளரின் செய்தி தொடர்பான இரகசிய ஆதாரங்கள் ANCLன் செயலாற்றுப் பணிப்பாளரால் பலவந்தமான முறையில் கோரப்பட்டது தொடர்பாக தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இது பத்திரிகையாளரின் அடிப்படை உரிமைகளையும் இரகசிய செய்தி ஆதாரத்தன்மையையும் மதிக்காத ஒரு செயலென்றும், இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கோரியுள்ள சுதந்திர ஊடக இயக்கம் இது தொடர்பாக அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கவிடம் முறையிட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அந்த அதிகாரிக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் குறித்த அந்தப் பத்திரிகையாளர் தனிப்பட்ட பாதிப்புகளுக்குள்ளாகக் கூடாதெனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

5.7.96 விடுத்துள்ள அறிக்கையில் இலங்கை சுயாதீன தொலைக்காட்சி சேவை தனியார் மயப்படுத்தப்படுவதற்கு எதிராக குரல் எழுப்பியுள்ளதுடன் அது தொடர்பாக சகல நடவடிக்கையையும் எதிர்த்து இதில் அக்கறையுடையவர்களுடன் சேர்த்து செயற்பட அழைப்பும விடுத்துள்ளது.

பரந்துபட்ட கருத்தியல் அரசியல் கண்ணோட்டங்களைப் பிரதிபலிக்கின்ற சுதந்திர அதிகாரம் பெற்ற குழுவொன்று சுயாதீன தொலைக்காட்சி சேவையை நிர்வகிக்க வேண்டுமென்ற கோரிக்கையை சுதந்தர ஊடக இயக்கம் முன்வைத்து வந்திருப்பதாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தனியார் வசமுள்ள மின்னியல் சாதனங்கள் போதிய வெற்றியையோ; தரத்தையோ கொண்டிராத நிலையில் தனியார்மயமாக்குவதானது துன்பம் தருகின்ற தவறாகும். இது எவ்விலை கொடுத்தாவது காக்கப்பட வேண்டுமெனவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணம் பாஸ்

யாழ்ப்பாணத்தில் இருந்து வட மராட்சிக்குள் செல்வோர் அச்சுவேலியில் 'பாஸ்' எடுக்கவேண்டும் அதேபோல வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் வருவோரும் வல்வையில் "பாஸ்" எடுக்கவேண்டும். இது படையினரின் புதிய விதி.

கடந்த 8ம் திகதி மினி பஸ்ஸில் யாழ் நகரில் இருந்து பருத்தித்துறைக்கு பயணமான பயணிகள் புத்தூரில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டனர்.

அவர்கள் யாழ்ப்பாணம் வந்து அங்குள்ள இராணுவ அலுவலகத்தில் 'பாஸ்' கேட்டனர். தமக்கு அப்படி ஒரு அறிவித்தலும் வரவில்லை, வடமராட்சிக்கு ஏன் 'பாஸ்'? எமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதி தானே? இப்படி அங்குள்ள படையினர் கேட்டனர்.

வடமராட்சி பகுதியில் பாணுக்கும் தட்டுப்பாடு. பேக்கரிகளுக்கு மா வழங்கப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்தே பாண் வாங்கிச் செல்கின்றனர்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நிறுவப்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சதொச) மோசடி ஊழல் நிறைந்து செயற்படுகிறது. அரிசிக்காக அதிகாலை 5 மணிக்கு மக்கள் கியூவில் வந்து நிற்பார்கள். ஆனால் இடையில் வருவோர், செல்வாக்கு உள்ளவர்கள் அரிசியை வாங்கிச் செல்கின்றனர்.

இங்கு பணிபுரியும் ஊழியர்கள் சிலருக்கு 50ரூபா கொடுத்தால் பத்து கிலோ அரிசிவரை வாங்கலாம் மற்றும்படி ஒருவருக்கு இரண்டு கிலோ அரிசியே விநியோகிக்கப்படுகிறது. ஒரு கிலோ அரிசி 20 ரூபா.

கியூவில் வருவோரை ஒழுங்குபடுத்தும் புாது காப்பு ஊழியரும் 'சம்திங்' பெற்று அரிசி வாங்க அனுமதிக்கிறார்.

கியூவில் நிற்போர் முன்பாக அவர்கள் பார்க்கவே இந்த விளையாட்டுகள் இடம்பெறுகின்றன. யாரிடம் சொல்வது? யார் முறையிடுவது? எல்லோரும் மௌனிகள்!

புதிய நேரப்படி 9.30க்கு திறக்கப்படும் சதொச பகல் போசனத்துக்காக நண்பகல் 12.30க்கு மூடப்பட்டு 2மணிக்கு திறக்கப்படுகிறது. ஆனால் மாலை 4.30க்கு மூடப்பட்டு விடும்.

கொளுத்தும் வெய்யிலில் கால் கடுக்க நாவற்குழி, உடுவில், மானிப்பாய் போன்ற இடங்களில் இருந்து வருவோர் ஏமாற்றத்துடனே திரும்புகின்றனர். சோறு இல்லாது பல குடும்பங்கள் தற்போது வாழுகின்றன. அமைச்சர்கள் வருகின்றனர். அதிகாரிகள் வருகின்றனர் எமது அரிசி பிரச்சினை தான் தீர்ந்த பாடில்லை.

தெற்கே வெள்ளப்பெருக்கு அல்லது இயற்கை அழிவு ஏதாவது ஏற்பட்டால் அங்குள்ள மக்களுக்கு பல்வேறு நிவாரணங்கள் வழங்குவதற்கு அரசு முன் நிற்கும். நாம் தமிழர்கள். இரண்டாம் தரப்பிரஜைகள் எப்படியும் செய்யலாம் என்று அரசு எண்ணுகிறது. மேலும் புலிகள் எம்மை ஆட்டிப்படைத்து விட்டனர். இப்போது சதொச எம்மை ஆட்டிபடைக்கிறது எனவும் மக்கள் கூறுகின்றனர்.

இது பற்றி யாழ். அரசாங்க அதிபருக்கும் முறையிட்டோம். அவர் சொல்கிறார் 'நான் என்ன செய்ய? எனக்கு அதிகாரம் இல்லை' என்று. ஆத்திரம் கொண்ட மக்கள் சதொச ஊழியர்கள், முகாமையாளரிடம் தமது நிலைமையை எடுத்துக் கூறினர். நீங்கள் செய்கிறதை செய்யுங்கள் சதொசவை மூடுவோம் ஜனாதிபதிக்கு எழுதுங்கள் நாம் ஒருவருக்கும் பயமில்லை என்கிறார்கள்.

அரிசியை பல் நோ.கூ. சங்கக் கிளைகளின் மூலம் விநியோகித்தால் கியூ, மற்றும் பிரச்சினைகள் தோன்றா. எல்லோருக்கும் அரிசி கிடைக்கும்.

தமிழ் எம்.பிக்கள், தமிழ்க்குழுக்கள் யாழ்ப்பாணம் பயணம் என்று பத்திரிகையில் செய்தி வெளியாகின. அவர்களுக்கு யாழ். மக்களின் அரிசி பிரச்சினை தெரியாததா?

இளவாலையிலும் ஒரு சதொச உண்டு. அங்கேயும் கியூ. அரிசியை போதியளவு கப்பல்கள் மூலம் அனுப்பி தனியார் வர்த்தகர்கள் மூலமும் விநியோகிக்கலாம். இதேபோலவே மாவுக்கும் தட்டுப்பாடு. மக்களைப் பட்டினி போட்டு ரசிப்பதில் இந்த அரசுக்கு என்ன தான் இன்பமோ?

*– மரிமைந்தன்*

## மாதுரி திக்ஷித்தும் அரசின் நல்லெண்ணமும்

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது புதிதாக ஒலி, ஒளி நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

பலாலியிலிருந்து இவை ஒலி/ஒளிபரப்பாகின்றன.

சந்திக்குச் சந்தி தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டு இந்த ஒளிபரப்புகள் (கவனிக்கவும் அந்த இடங்களில் மின்சாரம் இருந்தால் மட்டும்) காட்டப்படுகின்றன.

ரூபவாஹினி, ஐ.ரி.என். நிலையங்களின் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவுகளுக்கு, போதியளவு நிகழ்ச்சிகளை வேறு நாடாக்களில் பதிந்து தரும்படி கேட்கப்பட்டுள்ளது.

ரூபவாஹினி பொதுவான நிகழ்ச்சிகளையும் ஐரிஎன் திரைப்படங்களையும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளன.

தமிழ்த் திரைப்படங்கள் மட்டுமல்ல, போதுமானளவு ஹிந்தித்திரைப் படங்களையும் அனுப்பும்படியும் யாழ் மக்கள் ஹிந்தித் திரைப் படங்களையே விரும்புவதாகவும் இப்போது கேட்கப்பட்டுள்ளதாம். (அதுவும் மாதுரி டிக்ஸித்தின் படங்கள் என்றால் நல்லதாம்) யாழ் மக்களுக்கு ஹிந்திப் படங்களில் அப்படி என்ன ஆசை? தமிழ்ப் படங்களை விட!

பிற்குறிப்பு – 1: இந்த ஹிந்திப்படங்கள் ஏற்கனவே சிங்களத்தில் சப்டைட்டில் செயயப்பட்டபடி உள்ளனவாம். எனவே படத்தைப் பார்த்தபடி சிங்களத்தில் விளங்கிக் கொள்ளலாமாம்.

பிற்குறிப்பு – 2 இந்தப் படங்கள் யாழ் மக்களின் உள ்ளங ் கவருவதற ் காகவே ஒளிபரப்பப்படவுள்ளனவாம் யாழ்ப்பாணத் தமிழ் மக்களை வெனறெடுக்கும் குயுக்தி வாழ்க!

இவ்வாறான குயுக்திகளை அரசிற்கு அள்ளி வழங்கும் தொண்டரடிப் பொடிகளும் வாழ்வாங்கு வாழ்க!

## பத்திரிகையாளர்களுக்குத் தடை

யாழில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் பின்னர் இரத்மலானை விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்ட சடலங்களையும், காயம் அடைந்தவர்களையும் பார்வையிடவும் செய்தி சேகரிக்கவும் சென்ற அரச, தனியார் பத்திரிகையாளர்களுக்கு கட்டிடத்துக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி எவரையும் உள்ளே விட முடியாது என அங்குள்ள விமான நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

எனினும் குறிப்பிட்ட சிலருக்கும் உறவினர்களுக்கும் அனுமதி மறுக்கப்படவில்லை.

அரசதகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தொடர்பு சாதன அடையாளஅட்டையை ஏற்றுக்கொள்ள முடியாது என பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

*திவயின 96.7.5*

## வடபகுதி எல்லை மீள்வரைவு!

வடபகுதியின் எல்லைகளை புதிதாக மாற்றம் செய்யும் அதிகாரத்துடன் கூடிய வடபகுதி அபிவிருத்தி அதிகார சபை ஒன்றை அரசு விரைவில் நிறுவ உள்ளது.

இது இப்போது செயற்பட்டுவரும் வடபகுதி புனருத்தாரணம் தொடர்பான அதிகார சபைக்குப் புறம்பான நிறுவப்படும் நிறுவனமாகும்.

இதன் தலைவர் பதவிக்கு வடபகுதி சமாதான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் தலைவர் ராஜன் ஆசீர்வாதத்தின் பெயர் பிரேரிக்கப் பட்டுள்ளது.

தென்பகுதி அபிவிருத்தி அதிகார சபையொன்றை நிறுவுவதற்கான சட்டமூலம் ஒன்றை கடந்த சில தினங்களுக்கு முன்பு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அச்சட்ட மூலத்தின்படி அதிகாரச் சபை ஜனாதிபதியின் கீழ் இருப்பதுடன் முடிவெடுக்கும் அதிகாரங்கள் அனைத்தும் அதிகார சபைக்கு இருக்கும்.

இவ்வாறான அதிகாரங்களுடன் கூடிய வடபகுதிக்கு நிறுவப்படவுள்ள அதிகாரசபைக்கு பொ.ஐ.மு. வின் தேர்தல் வாக்குறுதியினூடாக உத்தேச எல்லைகளை மாற்றம் செய்யும் அதிகாரம் வழங்கப்படவிருக்கிறது. வடபகுதி உடனடியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென எல்லா இடங்களிலிருந்தும் யோசனை தெரிவிக்கப்பட்டிப்பதாலும் அதற்காக விஷேட உதவி கிடைக்க உள்ளதாலும் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் ஒரே வழி அதிகார சபையை நிறுவுவதே என ஜனாதிபதி எண்ணுகிறார்.

அரசியல் தீர்வுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது நாளுக்கு நாள் பிற்போடப்பட்டு வருவதாலும் அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்கு பலத்தை பெற முடியாததாலும் வடபகுதி பிரச்சினைக்கு சிறந்த தீர்வு அதிகார சபையே என அரசாங்கம் கருதுகிறது.

எல்லைகளை மாற்றி அமைக்கும் அதிகாரத்துடன் கூடிய அதிகார சபையொன்றை அமைக்கும் சட்டமூலத்தை ஒரு வாக்கினாலாவது நிறைவேற்றிக்கொள்ளக்கூடியதாய் இருக்கும்.

எவ்வாறாயினும் வடபகுதி அபிவிருத்தி அதிகார சபையொன்று நிறுவப்படுவதை த.வி.கூட்டணி எதிர்க்கிறது எனக் கூறப்படுகிறது.

*லக்பிம 19960630*

## தமிழ் புத்திஜீவிகள் கொலைத்திட்டம்!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்து வெளிநாட்டுப் பத்திரிகைகள் சஞ்சிகளுக்கு கட்டுரைகளை வழங்குவதிலும் புத்தகங்களை அச்சிடுவதிலும் ஈடுபட்டுள்ள தமிழின புத்திஜீவிகள் சிலரைக் கொலை செய்வதற்காக உளவு பார்க்கவும் அக் கொலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தவும் ஈடுபடுத்தப்பட்டிருந்த யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தமிழ் விரிவுரையாளர் ஒருவர் இராணுவ அதிகாரிகள் குழுவொன்றினால் கொழும்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை விமர்சனம் செய்து தமிழ் புத்திஜீவிகள் பலகாலமாகவே வெளிநாட்டுப் புத்தகங்கள் சஞ்சிகைகளுக்கு கட்டுரை வழங்கியும் புத்தகங்கள் எழுதி வெளியிட்டதாலும் புலிகள் இயக்கம் சர்வதேச ரீதியாக அபகீர்த்திக்குட் பட்டுள்ளாதால் இவர்களை கொலைசெய்ய புலிகள் இயக்கம் முடிவு எடுத்திருப்பதாக விசாரணைகளில் இருந்து தகவல் வெளிவந்துள்ளதாக பாதுகாப்புப் பிரிவு தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எதிராக செல்லும் தேசத்துரோகிகளாகத் கருதப்படும் இப்புத்திஜீவிகள் சிலரை கொலை செய்ய வேண்டும் என புலிகளின் தலைவர்கள் தீர்மானித்திருப்பதால் அக் கொலைகளை நடத்தி முடிக்க உளவு பார்த்து திட்டம் தீட்டுமாறு புலிகளின் உளவுப் பிரிவுக்கு தலைமையிடம் இருந்து உத்தரவு கிடைத்துள்ளதை அடுத்து கைதாகியுள்ள இவ்விரிவுரையாளரையே அத்திட்டத்திற்கு பயன் படுத்தியதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

தமிழ் புத்திஜீவிகள் சிலர் தொடர்பாக உளவு பார்த்துத் தகவல் ஒன்று சேர்க்கப்பட்ட பின்பு அவர்களை கொலை செய்வதற்காக புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களில் சிலர் தம்மைக்காண வரவிருந்ததாகவும் ஆனால் இப்புலி உறுப்பினர்களில் பெயர்களோ இவர்கள் நடமாடும் இடங்கள் தொடர்பாகவோ எதுவும் தனக்குக் கூறத்தெரியவில்லை எனவும் சந்தேக நபர் விசாரணைகளின் போது தெரிவித்திருப்பதாக தெரியவருகின்றது.

சந்தேக நபரான விரிவுரையாளருடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்த தமிழர்கள் மூவரை விசாரணை செய்வதற்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்து இருப்பதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

*லங்காதீப 19960703*

தொடர்புகளை வைத்திருந்த தமிழர்கள் மூவரை

## பிரபாகரன் வில்பத்துவில்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயத்தத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இதுவரைகாலமும் மறைந்திருந்த வடபகுதியிலிருந்து வில்பத்து பெருங்காட்டுக்கு வந்துள்ளதாக இரகசிய தகவல்கள்கிடைத்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ரிவிரெச இராணுவ நடவடிக்கையின் ஊடாக பிரபாகரனின் அரசாக கருதப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாடு முழுமையாகவே இராணுவத்தின் பிடிக்குட்பட்டதாலும் எதிர்காலத்தில் கிளிநொச்சி முல்லைத்தீவு, ஆகிய புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களின் மீதும் இராணுவத் தாக்குதல்கள் நடத்தப்பட இருப்பதாலும் பிரபாகரன் இவ்வாறு தான் இருக்கும் இடங்களை மாற்றியுள்ளதாகத் தகவல் வட்டாரங்கள் கூறுகின்றன.

புத்தளம், மதவாச்சி, வவுனியா, மன்னார் ஆகிய பகுதி வில்பத்து காட்டில் இரகசியமாக வாழ்வதற்கு காரணங்கள் பல இருப்பதாக புத்தளம் பொலிஸ் கூறுகிறது.

வில்பத்து காடு தொடர்பாக எவருமே சந்தேகம் கொள்ளாமை உணவு, மற்றும் வசதிகள் பெற்றுக்கொள்ளும் வசதி, வடபகுதி மக்கள் புலிகள் இயக்கம் தொடர்பாக இப்போது கடும் கோபத்துடன் இருப்பதாலும் பிரபாகரன் இவ்வாறு தன் நிரந்தர இருப்பிடத்தை மாற்றியிருக்கலாம் என பொலிஸ் நம்புகிறது.

இதே சமயம் உடப்பு, முந்தல் போன்ற பகுதிகளில் புலிகளுக்கு சொந்தமான வெடிமருந்துகள், எரிபொருள் மற்றும் வேறு பொருட்கள் உட்பட படகு உபகரணங்களும் பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டதாலும் பிரபாகரன் வில்பத்துவில் நடமாடித்திரிவதாக பாரிய சந்தேகம் ஒன்று எழுந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

***திவயின 19960630***

## பெரும் புலிகளும் குட்டிப் புலிகளும்!

கொழும்பையும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் நாசகாரச் செயல்களை நடத்துவதற்காக வந்துள்ள புலிக் கோஷ்டியின் உதவிக்கு புலிச் சிறுவர்கள் 15 பேர் கடந்த சில தினங்களுக்கு முன் கொழும்பிற்கு வந்துள்ளதாக வவுனியா பாதுகாப்புப் பிரிவு, தளபதிகள் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதாக முகத்துவாரப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

12க்கும் 13க்கும் இடைப்பட்ட வயதுடையவர்களான இவர்கள் புலிகளின் உளவுப்பிவுத் தலைவர் சண்முகநாதன் சிவசங்கரின் ஆலோசனையின் மீது கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனராம்.

*லங்காதீப 19960702*

## பொலிசாருக்கு வந்த கஞ்சா

மட்டக்களப்பிலிருந்து கொழும்பை நோக்கி வந்துகொண்டிருந்த 'வான்' ஒன்றை பரிசோதனையிட்ட பொலிசார், அவ்வானிலிருந்து நான்கு தமிழர்களை கைது செய்து, கஞ்சாவையும் கைப்பற்றினர்.

டொயோட்டா வர்க்கத்தைச் சேர்ந்த இவ்வாகனத்தில் பயணம் செய்தோர் மட்டக்களப்பை வசிப்பிடமாகக்கொண்டோரேயாவர்.

இக்கஞ்சா இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு தலைக்கவசம் கொண்டு வந்த பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பு பிரதேசத்தில் இருக்கும் பொலிஸ் விஷேடப்பிரிவைச் சேர்ந்த முகாமிலிருந்து இப்பெட்டி வழங்கப்பட்டதாகவும் கொழும்பில் உள்ள விடுதிக்கு இதைக்கொண்டு போய் கொடுக்கும் படி அம்முகாம் ஆணையாளர் உத்தரவு வழங்கியதாகவும் இதனால் தான் இப்பெட்டியை எடுத்து வந்ததாகவும் இந் நபர்கள் பொலிசுக்கு தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் விஷேடப்பிரிவைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் ஒருவர் இதனைப் பெற்றுக்கொள்ள வருவார் எனவும் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

***திவயின 19960703***

## புலிகளுக்கு வழிகாட்டும் குர்திஷ்ஷார்

குர்திஷ் கெரிலாக்களால் மேற்கொள்ளப் படும் அனைத்து வகையான படுகொலை வழிமுறைகளையும் புலிகள் பின்பற்றுகின்றார்கள் என பாதுகாப்புப் படையின் உளவுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

குர்திஷ் கெரிலாக்களினால் படுகொலை கள் மேற்கொள்ளப்பட்ட ஐந்து தினங்களுக்குப்பின்னர் புலிகள் அதேபாணி யிலான படுகொலைகளைப் புரிகின்றனர். அண்மைக்கால சம்பவங்களை ஒப்பிடும் போது இது புலனாகிறது.

*திவயின 19960707.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ரணில் — ஒற்றையாட்சி — சந்திரிகா

# வேதாளங்களும் முருங்கைமரமும்!

"அத்தியாவசிய சேவைகள் சட்டத்தைப் பயன்படுத்துவது என்பது தொழிலாளர்களுக்குப் பதிலாக இராணுவத்தைப் பயன்படுத்துவதாகும். இது இராணுவத்திற்கு தொழிலாளர்களையும் அவர்களது குடும்பங்களையும் கைது செய்ய அனுமதிக்கிறது....."

இச்சட்டம் தொழிலாளர்களையும் மக்களையும் அடக்குவதற்கே பயன்படுத்தப் படுகிறது என்பதனை நாம் ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளோம்..."

தெமட்டகொடவிலுள்ள 'பார்ட்லீட் மைக்ரோ டிவைசஸ் லங்கா லிமிட்டட்' என்ற தனியார் நிறுவனம் மூடப்பட்டது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையைச் சாடி வெளியிட்ட பதிலறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார், இரத்தினபுரி மாவட்ட எம்.பி. வாசுதேவ நாணயக்கார. இந்த நிறுவனம் ஐ.தே.க. தேசியப்பட்டியல் எம்.பியான றஞ்ஜித் சேனாரத்ன தலைமையிலான தொழிற் சங்கத்தின் வேலை நிறுத்த நடவடிக்கை காரணமாக நஷ்டத்தில் இயங்க வேண்டி ஏற்பட்டதால் மூடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதும், தொழிலாளர் - தொழில் கொள்வோர் இடையிலான பிணக்குகள் மத்தியஸ்த நிலையை தாண்டி விடும் பட்சத்தில் தொழில் கொள்வோர் தொழிற்சாலைகளை நஷ்டம் என்று கூறி மூடிவிடுவதும் இலங்கையில் ஒன்றும் புதிய விடயங்கள் அல்ல. இதனால் தொழிலாளர்கள் வேலையற்று நடுத்தெருவில் நிற்பதுவும் மிகச்சாதாரண விடயமாகவே இங்கு இருந்து வருகிறது. அவசர கால சட்ட விதிகளின் கீழ் அத்தியாவசிய சேவை, ஏற்றுமதி போன்ற காரணங்களுக்காக இத்தகைய நிறுவனங்களில் வேலை செய்வோர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது சட்டரீதியற்றது என்ற சட்டம் ஏற்கெனவே பிரேமதாச அரசு காலத்தில் நடைமுறையில் இருந்த போது இவ்வாறான நிகழ்ச்சிகள் பல நடந்துள்ளன. இச்சட்டங்கள் பின்னாளில், டி.பி.விஜேதுங்க ஜனாதிபதியாகிய போது தளர்த்தப்பட்டன. இன்றைய பொ.ஐ.மு. அரசாங்கமும் அதே சட்டங்களை மின்சார சபை ஊழியர் வேலை நிறுத்தத்தை அடுத்து மீளக்கொண்டு வந்துள்ளது தெரிந்ததே. எவ்வாறாயினும் இச்சட்டங்கள் நடைமுறையில் இருந்த போதும் சரி, இல்லாத போதும் சரி, இத்தகைய நடவடிக்கைகள் ஒருபோதும் ஜனாதிபதி செயலகம் அறிக்கை வெளியிடுமளவுக்கு முக்கிய விடயங்களாகக் கருதப்பட்டதில்லை. இப்போது இந்த பாட்லீட் நிறுவன விடயத்தில் மட்டும் ஜனாதிபதி செயலகம், அது ஒரு மிக முக்கிய விடயமாகக் கருதி தனது அறிக்கையை வெளியிட்டிருந்தது.

தொழிலாளர்கள் வேலையற்று நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலை ஏற்படுவதும் ஒரு தொழில் நிறுவனம் மூடப்படுவதும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் அல்ல என்பதல்ல எமது விவாதம். ஆனால், இந்த விவகாரத்தில் அரசாங்கம் இவ்வளவு அக்கறை எடுத்ததற்கான காரணம், அங்கு வேலை செய்த 1100 தொழிலாளர்கள் வேலையற்றுப் போனதற்காக அனுதாபப்படுவதை விடவும் ஐ.தே.க., தொழிலாளர்களை தூண்டி விட்டு இந்த அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுக்கிறது என்று கூறி அதனை அம்பலப்படுத்தவேண்டும் என்ற அவசரமே அதிகமாக இருந்திருக்கிறது. ஜனாதிபதி செயலகம் விரும்பியிருந்தால், இந்த விடயத்தில் அதிகார பூர்வமாகத் தலையிட்டு அதைத் தீர்க்க முயற்சித்திருக்கலாம். ஆனால், அது அதைவிட்டு விட்டு ஐ.தே.கவை தாக்குவதில்தான் பிரதான கவனம் செலுத்தியிருக்கிறது.

ஆனால், துரதிர்ஷ்டம் என்னவென்றால், ஐ.தே.கவை தாக்கப் புறப்பட்டு, வாசுவின் சீற்றத்துக்கு இலக்காகியிருக்கிறது அரசாங்கம். ஐ.தே.கவைச் சாடுகிற அவசரத்தில் உண்மைகளை மறந்து போய் தொழிற்சங்கத்தின் கோரிக்கைகளை 'குழப்பல் நடவடிக்கைகள்' என்றும், அவர்கள் கம்பனி முகாமைத்துவத்தினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்று வேலைக்கு திரும்பினார்கள் என்றும் அதைக் குழப்புவது ஐ.தே.க. சார்பு தொழிற்சங்கமே என்றும் கூறியது. அது மட்டுமல்லாமல், தொழிலமைச்சினால், நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரியினால் இவை சுமுகமாகத் தீர்க்கப்பட்டன என்பது போன்ற கருத்தையும் தெரிவித்திருந்தது. ஆனால், அப்படி எதுவுமே நடக்கவில்லை. விசாரணை அதிகாரியின் விசாரணைகள் எதுவும் நடைபெறவும் இல்லை. அதிகாரிஒருவர் கட்டாய விசாரணைக்காக நியமிக்கப்பட்ட போதும் அப்படி விசாரணை எதுவும் நடக்கவில்லை. விசாரணைக்கு ஒப்புக் கொள்ளப்பட்டதால் தான் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினார்கள் என்றும இவ்வேலை நிறுத்தத்தில் தமது தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும் பங்கு பற்றினார்கள் என்றும், அவர்களது நியாயமான கோரிக்கைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றை பின்பு முகாமைத்துவம் நடைமுறைப் படுத்தாமையாலேயே வேலை நிறுத்தம் ஏற்பட்டது என்றும் வாசுதேவ நாணயக்கார அவர்கள் கூறுகின்றார். அதுவும் ஆளும் பொ.ஐ.முவிலிருக்கும் வாசுவே இப்பக் கூறும் பொழுது, அரசாங்கம் பெரும்பான்மையான தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை ஏற்கவில்லை என்று சொல்வதுதான் இங்குள்ள வேடிக்கையான விடயம். பெரும்பான்மையான தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை ஏற்கவில்லை என்றால், அவர்களுக்கு அரசாங்கம் ஆதரவுதரத் தயாராகவும் இருக்கும் என்றால், வேலை நிறுத்தம் எப்படி வெற்றி அளிக்க முடியும்? தொழிற்சாலையை மூட வேண்டிய நிலை எப்படி ஏற்படும்?

ஆக, இங்கே தெரிவதெல்லாம், ஐ.தே.க.வை எதிர்ப்பது ஒன்றே அரசாங்கத்தின் குறிக்கோள் என்பதுதான். இதனால் 'குழப்பவேலையில்' ஈடுபடும் தொழிலாளர்களை சாதாரணமான நிலைமைகளில் 'இடைநிறுத்தம்' (interdiction) செய்யும் சட்டத்திற்குப்பதில் தடுப்புக்காவலில் வைக்க (detention) அதிகாரமளிக்கும் அத்தியாவசிய சேவைகள் மற்றும் அவசரகால சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது அரசாங்கம். வீடு எரிந்தாலும் பரவாயில்லை, கூரைக்குள் இருக்கும் திருடனை கொளுத்தியே ஆவேன் என்று வீட்டுக்கு நெருப்பு வைத்த கதை போன்றது தான் இது. ஏற்கெனவே இப்படி ஒரு செயலைத்தான் வடக்கு -கிழக்கு மக்கள் விடயத்திலும் இந்த அரசாங்கம் செய்துவிட்டிருக்கிறது. யுத்தத்தின் மூலம் சமாதானத்தைக் கொண்டுவர அரசாங்கம் எடுக்கிற முயற்சிக்கு வேறு எந்தவித அர்த்தமும் இல்லை. இப்போது, தான் முன்வைத்த 'தீர்வுப் பொதி'யை நடைமுறைக்குக் கொண்டு வர ஐ.தே.கவினரிடம் பேசுமாறு தமிழ்க்கட்சிகளுக்கு பொறுப்புக்கொடுத்து விட்டு தனது பொறுப்பைத் தட்டிக்கழிக்கிறது அரசாங்கம். ஐ.தே.கவோ, இந்த அரசாங்கத்தின், குறிப்பாக ஜனாதிபதியின் தீர்வு முயற்சி சந்தேகத்துக்குரியது, அவர் அதிகாரத்தைப் பரவாலாக்குவது என்று கூறுவதெல்லாம் நம்பமுடியாதது என்று தொடர்ச்சியாக கூறிவருகிறது. அத்துடன், இப்போது தனது பழைய 'ஒற்றையாட்சி' முறையிலிருந்து விலகமுடியாது என்ற அறிவிப்பையும் தெளிவாகத் தெரிவித்து விட்டது.

இது ஏதோ எதிர்பார்க்கப் படாத ஒன்று என்பது போல தமிழ்க்கட்சிகளும் அரசாங்கமும் அதிர்ச்சியடைந்து போய்இருக்கின்றன. ஆனால், ஐ.தே.க. தொடர்ச்சியாக சொல்லி வந்த பழைய விடயம் தான் இது. அதுவும் குறிப்பாக இன்றைய எதிர்க்கட்சித்தலைவர் அன்று பிரதமராக இருந்த காலத்திலிருந்தே இதைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளார். (இது பற்றி நாம் ஏற்கெனவே பலதடவை இப்பத்தியில் குறிப்பிட்டுள்ளோம். உ+ம் பார்க்க: 1 - 15, நவம்பர் 1993 சரிநிகர் இதழ்)

ஆனால், இவ்வளவு காலமும் அதாவது இந்த பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்தபின் அவர் மௌனமாக இருந்ததெல்லாம் இந்த விடயத்தில் வாய்திறக்க தமக்கு வாய்ப்பான காலம் வரவேண்டுமென்பதற்காகவேயன்றி வேறெதற்காகவும் அல்ல. 'இந்த நாட்டின் சட்ட வரையறைக்குள்ளான தீர்வு' என்ற அவரது நிலைப்பாடு மீள ஒரு முறை இப்போது வலியுறுத்தப்பட்டிருப்பது, இந்த அரசாங்கத்திடமிருந்து தற்காப்பு நிலையில் இதுவரை காலமும் இருந்த ஐ.தே.க.வை இப்போது தாக்குதல் நிலைக்குத் தள்ளிவிட்டது என்பதை மட்டுமே காட்டுகின்றது என்று கொள்ள வேண்டும். இப்போது அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் இறங்குவதற்கு, குறிப்பாக விலைவாசி ஏற்றம் போன்ற விடயங்களுக்காக போராடுவதற்கான தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளது ஐ.தே.க.

இந்த அரசாங்கம் அரைகுறை பெரும்பான்மையுடன் பதவிக்கு வந்தபோதே, தனக்கு முன்னுள்ள, தன்னால் முன்வைக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசியல் சாணக்கியத்துடன் நடக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஐ.தே.கவை இந்த அரசியல் தீர்வை நோக்கியும், அரசியலமைப்பு திருத்தத்தை நோக்கியும் இழுத்து வரக்கூடிய விதத்தில் சிறப்பாக இந்த அரசாங்கத்தால் இயங்கியிருக்க முடியும். அதற்கான வாய்ப்புக்கள் நிறையவே இருந்தன. ஆனால், அதற்கு எந்த முயற்சியையும் அரசாங்கம் எடுத்ததாகக் கூறமுடியாது. பதிலாக அப்படி ஏதாவது வாய்ப்பு வந்தாலும் அதை சிதறடிக்கவும் ஐ.தே.கட்சிக்குள்ளேயே தீர்வை ஆதரிக்கக்கூடிய சக்திகளை சிறுபான்மையினராக்கும் விதத்திலுமே அரசாங்கம் செயற்பட்டது.

எப்படி இன்றைய ஜனாதிபதியின் தகப்பனார் பண்டாரநாயக்கா அவர்கள் தாம் எழுதிய ஒப்பந்தத்தை கிழித்தெறிய தனக்கு எதிராக எழுந்த எதிர்ப்புக்களைக் காரணம் காட்டினாரோ அவ்வாறே இந்தத் தீர்வுப்பொதியையும் உடைப்பிலேயே போட்டு விட ஐ.தே.கவை காரணம் காட்டபோகிறதோ இந்த அரசாங்கம் என்ற சந்தேகம் இப்போது வலுவடைந்து வருகிறது.

இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள், இந்தத் தீர்வுப்பொதிக்கு ஏற்படப்போகும் கதிகுறித்து பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தவே செய்கின்றன. அதை பலமாக சத்தம் போட்டு மாபெரும் சாதனையாக அறிவித்த அரசாங்கம், நடைமுறைப்படுத்தும் கட்டம் நெருங்க நெருங்க, 'தமது குறிக்கோள்களை நிறைவேற்றக்கூடிய வழிமுறைகளை நிச்சயமாக ஒதுக்கி வைத்து விட்டு, தான் தோற்றுப் போவதற்கு சாக்குப்போக்குகளை கண்டு பிடிக்க முயன்றவாறு உறுதியற்ற முறையிலேயே' இயங்குகிறது. இப்போதைய அதன் நடவடிக்கை எந்த நம்பிக்கையும் அற்ற வெறும் சீர்குலைவு நடவடிக்கையாகவே போய்க்கொண்டிருக்கிறது.

ஐ.தே.க. இதற்காக எந்தப் பழிச்சொல்லையும் புதிதாக கேட்கப்போவதில்லை. அதன் இந்த ஒற்றையாட்சி நிலைப்பாட்டிற்காக அது ஏற்கெனவே வேண்டியளவு கேட்டாகிவிட்டது. அதன் பிடிவாதமான ஒற்றையாட்சி நிலைப்பாடு அதன் பலங்களில் ஒன்று என அது கருதுவதால் இந்த நிலைமை மேற்கொண்டு நகரமுடியாத படிக்குசதுரங்கத்தின் முதலாவது கட்டத்திற்கு மீளவும் பிரச்சினை வந்து சேர்ந்துள்ளது. பழிச்சொல்லை ஏற்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடம் போய்ச் சேர்ந்துள்ளது.

இதே நிலைதான் ஜனாதிபதி முறைமாற்றத்திற்கும், பிற ஜனநாயக மீள்விப்பு விடயங்களுக்கும் நடந்துவிட்டுள்ளது.

உண்மையில் இப்போது பொ.ஐ.மு. அரசாங்கம் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் இருப்பதற்கு விரும்பினால், இந்தத்தீர்வை சட்டமாக்கும் முயற்சிக்காக இன்னமும் காலத்தை இழுத்தடிப்பதை விட்டு விட்டு 'கூட்டு ஆட்சி'யின் அவசியம் பற்றி மக்களிடையே பலமான பிரச்சாரத்தில் ஈடுபடுவதுடன் அதைச் சட்டமாக்க பாராளுமன்றத்திற்கு கொண்டுவருதல் வேண்டும். ஆனால், அரசாங்கத்திற்கு தான் தோற்று விடுவோமோ என்ற அச்சம் பலமாக இருப்பதால், அது இந்தப்பலப்பரீட்சையில் இறங்கத் தயாராக இல்லை.

இதிலுள்ள துயரமான விடயம் என்னவென்றால், காலத்தை நீடிக்கிற ஒவ்வொரு கணமும், இந்த அரசாங்கம் இந்த விடயத்திற்காக இல்லாவிட்டாலும், அதன் பிற பல்வேறு நடவடிக்கைகளுக்காக தோற்றுத்தான் போகவேண்டி வரப்போகிறது என்பதுதான்!

அதற்கு ஒரு அருமையான அறிகுறிதான், ஜனாதிபதி செயலகத்தின் மேற்கூறிய அறிக்கையும் அதை 'பொய் அறிக்கை' என்று சாடிய வாசுவின் அறிக்கையும்!

கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை! கண்ணே போதும்!!

நாசமறுப்பான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சொல்வதைத் தவிர வேறுவழியில்லை!

இந்த நாட்டில் முஸ்லிம்களை பேருவளை மாணிக்கக்கல் முதலாளிகளைக் கொண்டு அடையாளப்படுத்திய காலம் இப்போது மலையேறி விட்டது. விமான நிலையத்திலும், பஸ் நிலையங்களிலும், புகையிரத நிலையங்களிலும் மத்திய கிழக்குக்குச் செல்பவர்களும் மத்திய கிழக்கிலிருந்து மூட்டை முடிச்சுக்களுடன் திரும்புபவர்களுமாக இளம் முஸ்லிம் பெண்கள் நிற்பதையே இப்போது முஸ்லிம் சமூகத்தின் அடையாளமாக கொள்ள வேண்டியிருக்கிறது.

இறுக்கம் நிறைந்த முஸ்லிம் மக்களின் கலாசார பண்பாட்டிடையே வறுமை காரணமாகவும், பகட்டான வாழ்வின் காரணமாகவும், முஸ்லிம் ஆண்களின் அசிரத்தை காரணமாகவும் நிகழ்ந்திருக்கும் மாபெரும் அவலம்தான் இது. இலங்கையில் உள்ள முஸ்லிம் கிராமங்களிலிருந்து அடிமைச் சந்தைக்கு இளம் பெண்கள் பணிப்பெண்களாக ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

முஸ்லிம் பெண்களை பாடசாலைக்கு அனுப்பமாட்டார்கள். அப்படி அனுப்புவதாக இருந்தாலும்கூட வயதுக்கு வந்தவுடன் பாடசாலையை விட்டு நிறுத்திவிடுவார்கள். நாலுபத்து இடங்களுக்குச் சென்று அறிவைத்தேடும் அனைத்து மார்க்கங்களையும் மூடிவைத்து விட்டு வீட்டோடு மறைத்து வைத்திருப்பார்கள். ஏனென்று கேட்டால், முஸ்லிம் பெண்கள் வெளியே வருவதை மார்க்கம் தடை செய்கிறது என்பார்கள். ஆனால், அராபியாவுக்கு மூடிமூடிப், பூட்டிப் பூட்டி வைத்த இளம் பெண்களை அனுப்பி வைத்துவிட்டு அங்கு அவர்களின் கண்ணீரையும் இரத்தத்தையும் அராபிய ஆண்கள் உறுஞ்சிய பின் அவ் இளம் பெண்களின் கண்ணீருக்கும் இரத்தத்திற்குமான பணத்திற்காக காத்து நிற்பார்கள். இப்படியான முரண்பாடுடைய தன்மைகளைக் கொண்ட ஒரு சமூகமாக முஸ்லிம் சமூகம் இப்போது உருவாகி வருகிறது. இந்த அவல நிலைபற்றிச் சிந்திப்பது அவசியமில்லையா?

தவிர்க்கவியலாத வறுமைச்சூழல் காரணமாக முஸ்லிம் பெண்கள் வீடு, நாடு துறக்கும் அவலம் நடந்து கொண்டிருக்கும் அதேவேளை அடிப்படை வசதிகள் இருந்தும் அதை மேலும் வளம்படுத்தும் ஆசை காரணமாக பெண்கள் மத்திய கிழக்குக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையும் தொடர்கிறது. வறுமையைக் காரணம் காட்டி மத்திய கிழக்குக்குச் செல்லும் பெண்களுக்கு இறுக்கமான மார்க்கக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க முடியாது போயினும், அடிப்படை வசதிகள் இருந்தும் பகட்டான ஆடம்பர வாழ்வுக்காக மத்திய கிழக்குக்கு அனுப்பப்படும் பெண்களை மார்க்க அறிஞர்களால் ஏன் தடுத்து நிறுத்த முடியாது? இந்நிலை குறித்து முஸ்லிம் சமூகப் பிரக்ஞையுள்ளவர்கள் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

அராபிகளின் அடிமைச் சமூக அமைப்பின் எச்சம் இன்றும் நவீன வடிவில் அரங்கேறிக்கொண்டிருக்கிறது, பலநூறு வருடங்களாக அடிமைகளை வைத்து தங்களது பண்ணைகளை விஸ்தரித்துக்கொண்ட அராபிய தனவந்தர்களின் வாரிசுகள் இப்போது ஆசிய நாட்டுப் பெண்களை தங்களுடைய அடிமைப் பண்ணைகளில் வைத்து தங்களின் ஆண்டான் - அடிமை சமூக அமைப்பைவிட்டுக்கொடாதவாறு கட்டிக்காக்கின்றனர்.

ஆசிய நாடுகளான இந்தியா, பங்களாதேஷ், இலங்கை, பிலிப்பைன்ஸ் போன்ற வறுமை பிடுங்கும் நாடுகளிலிருந்து பெண்கள் அராபிகளின் சமையலறைகளிலிருந்து படுக்கை அறைவரை அழைத்துச் செல்லப்படுகின்றனர். பங்களாதேஷ் முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நாடாக இருந்தும் கூட அந்நாட்டில் நிலவும் வறுமை காரணமாக அராபிகளின் தனவந்தத்தனத்திற்கு அடிமைகளாக தங்களது பெண்களை தாரைவார்க்க முன்வந்திருக்கிறது. அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று மத்திய கிழக்குக்கு அழைத்துச் செல்லப்பட்ட பிலிப்பைன்ஸ், இந்தியப் பெண்களில் பெருந்தொகையானோர் விபச்சாரிகளாகவே அங்கு பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கிறது.

வீட்டினுள் பூட்டிப் பூட்டி வைத்து வளர்க்கப்பட்ட முஸ்லிம் பெண்கள் கடல்கடந்து அராபிய நவீன அடிமைச் சந்தைகளில் அபலைகளாகக் காலம் கடத்துவதை முஸ்லிம் சமூகம் எப்படி ஜீரணித்துக் கொண்டிருக்கிறது?

அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றின்படி இலங்கையில் அனேகமான எல்லா முஸ்லிம் கிராமங்களிலிருந்தும் மத்திய கிழக்கிற்கு பெண்கள் சென்றுள்ளனர் என்ற உண்மை வெளிப்பட்டிருக்கிறது. மேல்மாகாணம், தென்மாகாணம், போன்ற மாகாணங்களில் இருக்கும் முஸ்லிம் நகர, கிராமங்களான கொழும்பு, களுத்துறை, பாணந்துறை, பேருவளை, அளுத்கம, தர்காநகர், அட்டுலுகம, காலி, வெலிகம, மாத்தறை, திக்வெல்ல, தங்கல்ல, அம்பாந்தோட்டை, மல்வான, நிட்டம்புவ, திஹாரிய போன்ற பிரதேசங்களிலிருந்து அதிக முஸ்லிம் பெண்கள் மத்திய கிழக்கிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். வடக்கு கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து அதிக முஸ்லிம் பெண்கள் மத்திய கிழக்குக்கு சென்றிருக்கின்றனர்.

முஸ்லிம் கிராமங்களிடையே ஒப்பீட்டளவில் அதிக மத இறுக்கம் நிறைந்த கிராமங்களாக அடையாளப்படுத்தக் கூடிய காத்தான்குடி, அக்குறணை போன்ற கிராமங்களிலிருந்தும், தென்மாகாணம், மேல்மாகாணத்திற்கு அடுத்தபடியாக மத்திய சப்ரகமுவ மாகாணங்களிலிருந்தும் முஸ்லிம் பெண்கள் மத்திய கிழக்கிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். இத்தகவல்கள் எம்மை பலகேள்விகளுக்கு உட்படுத்துகின்றன.




முஸ்லிம் பெண்களின் இவ் அபாக்கிய நிலை குறித்து முஸ்லிம் சமூகம் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்ற கேள்வி உரத்து எழுப்பப்படல் வேண்டும். இங்கு முஸ்லிம் பெண்களை சமுதாயத்திற்கு வெளியே வரத்தடுக்கும் மார்க்கவாதிகள் அவர்களை அராபியர்களின் சந்தைகளில் அடிமைகளாக சந்தைப்படுத்துவதற்கு எப்படி அனுமதிக்கிறார்கள்? கல்வித்துறையில் அறிவியல் துறையில், தொழில்நுட்பத்துறையில், கைத்தொழில்துறையில், முஸ்லிம் பெண்களை நாட்டுக்குள் அனுமதிக்கத் தயங்கும் அதே வேளை மத்திய கிழக்கிற்கு ஏற்றுமதி செய்யும் நிலையில் இவர்களது மௌனம் இவர்களால் சொல்லப்படும் நியாயாதிக்கத்தின் மீது பாரிய கண்டனங்களை ஏற்படுத்தி இருக்கிறது.

முஸ்லிம் பெண்களை பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பியதன் ஊடாக முஸ்லிம் சமூகம் இந்த நாட்டிற்குள்ளேயும் வெளியேயும் பாரிய கலாசார சீரழிவுகளைச் சந்தித்து இருக்கிறது, சந்தித்துக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை பலராலும் மறுக்க இயலுமா? இக்கலாசார சீரழிவு நாளுக்கு நாள் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஆழமான கீறல்களை ஏற்படுத்தி வருகிறது.

மத்திய கிழக்கிற்கு அனுப்பப்படும் பெண்கள் அங்கு எஜமான்- எஜமானிகளின் சித்திரவதை, துன்புறுத்தல்களுக்கு ஆளாகிறார்கள். பாலியல் வதைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள், சித்திரவதை துன்புறுத்தல்களுக்குள்ளான பெண்கள் சூட்டுக் காயங்களுடனும் தழும்புகளுடனும் மத்திய கிழக்கிலிருந்து திரும்பி வந்திருக்கின்றனர். பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பணிப்பெண்களில் பட்டியல் நீண்டு கொண்டு போகிறது. பல பெண்கள் கொடுமைகள் தாளாமல் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர். குடும்பங்கள் சிதைந்து போயிருக்கின்றன. ஒழுக்கக் கோட்பாடுகள் மத விழுமியங்களுக்கு மாறாக காலில் போட்டு சிதைக்கப்படுகின்றன. வறுமை காரணமாக ஏற்படும் இக்கொடுமையை இல்லாமல் ஆக்குவதற்கு மார்க்க அறிஞர்கள் முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம் புத்திஜீவிகள், முஸ்லிம் தனவந்தர்கள் ஏன் முன்வரக்கூடாது!

மத்திய கிழக்குக்கு முஸ்லிம் பெண்கள் அனுப்பப்படும் தொகையை பெருமளவு குறைப்பதற்கான வழிகளை முஸ்லிம் பெண்களை நம்நாட்டுக்குள் தொழில் செய்பவர்களாக மாற்றுவதன் ஊடாகவே சாத்தியப்படுத்த முடியும்! இவர்களின் வறுமையை போக்குவதற்காக வேண்டி இவர்களுக்கு இங்கு நாம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தல் வேண்டும். அதற்கு முதல் படியாக பாடசாலைக்கு சென்று கல்வி கற்பதற்கான சூழ்நிலையை அனைத்து முஸ்லிம் பெண்களிடத்தேயும் ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் மத்தியகிழக்குக்கு அனுப்பப்படும் பெண்களின் தொகையை குறைக்கலாம்.

இறுக்கம் மிக்க கலாசார பண்பாட்டு அனுஷ்டானங்களை, வழிகளை மேற்கொள்ள உபதேசிக்கும் அல்லது வற்புறுத்தும் மார்க்க அறிஞர்கள் இந்த அபாக்கிய நிலைகுறித்து சற்றுச்சிந்திப்பது அவசியம். இது அனுமதிக்கத்தக்கது என நினைக்கிறார்களா? அல்லது அனுமதிக்க முடியாதது என நினைக்கிறார்களா? இது பற்றி தெளிவான விளக்கம் மார்க்க அறிஞர்களால் முன் வைக்கப்படவில்லை.

முஸ்லிம் பெண்கள் மத்திய கிழக்கிற்கு சென்று கஷ்டப்பட்டு உழைப்பதன் ஊடாக இங்கு முஸ்லிம் ஆண்கள் சோம்பேறிகளாக மாறிவருகின்றனர். மனைவியை அனுப்பிய கணவன் சகோதரியை அனுப்பிய சகோதரன், மகளை அனுப்பிய பெற்றோர், இங்கு வாழ்க்கைத் தேவைக்கு அவசியமாக உழைப்பது என்ற தேவையிலிருந்து விலக்களிக்கப்பட்டு சோம்பேறிகளாகி விடுகின்றனர். இந்நிலைமை இப்போது மத்திய கிழக்கிற்கு பெண்களை அனுப்பி விட்டு காத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

பெண்களை முஸ்லிம் சமூகத்தில் போகப் பொருளாக மட்டும் பார்க்கும் நிலைமாறி அவள் ஆண்களின் ஆணாதிக்க வெளிப்பாட்டின் உச்சமான கொடூரமான உழைப்புச் சுரண்டலுக்குள்ளும் தள்ளப்பட்டிருக்கிறாள். அது 'நாங்கள் இப்போது வீட்டில் சும்மா இருக்கிறோம் நீங்கள் உழைத்துக்கொண்டு வாருங்கள்' என்ற வழியில் இப்போது அரங்கேறுகிறது.

வறிய முஸ்லிம் பெண்களின் கண்கள் திறக்கப்படல் வேண்டும்! மார்க்க அறிஞர்கள், முஸ்லிம் கல்விமான்கள், முஸ்லிம் தலைவர்கள், வறிய முஸ்லிம் பெண்களின் கண்ணீரைத் துடைப்பதற்கும், அவர்களின் மானங்களை காப்பதற்குமான பாதுகாப்பான தீர்வொன்றை உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

இவர்களுக்கான பாதுகாப்பான தீர்வை முன்வைக்கத் தயங்கும் நிலை அல்லது மௌனம் என்ற நழுவல் போக்கு முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தை பாரிய கேள்விக்குட்படுத்தும். இதன் விளைவு காலகாலமாய் மீளமுடியாத ஒன்றாக்கி விடும்!

- அபூர்ஹால்

---

புலநானூறு

## போடு புள்ளடி மொட்டைக்கு நேரே!

இந்தியத் தேர்தல் ஒரு சரித்திரத்தைப் படைத்திருக்கிறது, இந்தியாவைப் பொறுத்தவரையில். இது ஈழத்தமிழர்களுக்கு மிகவும் முக்கியம் வாய்ந்த தேர்தல் என்றும் கூறலாம். எனக்கென்னவோ வழமை போன்ற பிரமாண்டங்கள் இல்லாமல் நிகழ்ந்த இந்தத் தேர்தல் சுவையே அற்றது மாதிரி ஆகிவிட்டது. ஆனால்,தமிழ்கூறா நல்லுலகெங்கிலும் பரந்து, உலகையே தமிழ்கூறு நல்லுலகாக மாற்றிவிட முனைந்துள்ள. ஆனால், தமிழ்கூறா நல்லுலகெங்கிலும் பரந்து, உலகையே தமிழ்கூறு நல்லலகாக மாற்றிவிட முனைந்துள்ள ஈழத் தமிழர்கள் அனேகர் இந்தத் தேர்தலைச் சுவைபட ரசித்துக் கொண்டிருந்தனர். இலங்கையில் நிகழ்ந்த தேர்தலை விடவும், புலம்பெயர்ந்த தமிழர்களின் அதிக அக்கறையைக் கவர்ந்த இந்தத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை இல்லாமலேயே ஆட்சிக்கு வந்து, வந்த வேகத்திலேயே வெளியேயும் போய்விட்ட பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியில் இருந்த நாட்களில் எனது அறை நண்பர் நித்திரை கொள்ளவில்லை. ஏனைய சிறுபான்மைப் பிரிவுகளை பாரதீய ஜனதாக் கட்சியும், அதன் அயோத்தி புகழ் வீரர்களும் என்ன செய்வார்கள் என்ற பயம் காரணமாக அல்ல அவர் தூக்கம் இழந்தது. ஈழத் தமிழர்களுக்கு விடிவைத் தரக்கூடிய அந்த ஆட்சி போய்விடுமோ என்ற பயம் தான் அவரது தூக்கத்தைக் கெடுத்தது. பாரதீய ஜனதா தனது ஆட்சித்துறப்பை அறிவித்த நாள் இரவு, லாசப்பலில் வாங்கிய மென்டிஸ் போத்தலுடன் அவர் தூங்கியதைக் கண்டேன்.என்ன புரியவில்லையா கொஞ்சம் விபரமாய்ப் பார்ப்போம்.

புலம்பெயர் தமிழர்களைப் பொறுத்தவரை இலங்கையில் தேர்தல் நடப்பது எந்தக் கவலையையும் ஏற்படுத்தாததற்கு நியாயமான காரணங்கள் இருக்கக்கூடும். ஏழெட்டு வாக்குகளை மாத்திரமே பெற்று ஒருவர் பாராளுமன்றம் போகக்கூடிய வாய்ப்பு உள்ள தேசமாக இலங்கை ஆகிவிட்டபிறகு அதைப்பற்றிப் பேசி என்ன ஆகப் போகிறது என்று பலர் நினைக்கலாம். ஆனால் இந்தியா அப்படியல்ல. இந்தியத் தேர்தலில் லட்சக் கணக்கில் வாக்குகளும் கோடிக்கணக்கில் பணமும் புரள்கிறது. அதில் இருக்கிற திறில் தனியானது. அத்துடன் இலங்கையில் உள்ள ஆட்சியாளரை விடவும், இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரை அதிக பலம் கொண்ட தீர்மான சக்தி இந்தியா என்று பலர் நம்புகிறார்கள். இதற்கான காரணங்கள் நியாயமானவையோ இல்லையோ, காரணங்கள் இருக்கிறது உண்மை.

இங்குள்ள மேடைகளில் இந்தியா பற்றி அனல் பறக்கிற காட்சிகள் வந்து போனது ஒருகாலம். அவை கடந்த சில மாதங்களாகப் பின்னணிக்குப் போய்விட்டதும் உண்மை. அப்படியானால் ஈழத் தமிழர்களுக்குப் புலம்பெயர் நாடுகளில் என்னதான் நடக்கிறது என்ற உங்களது சந்தேகம் விளங்கக் கூடியது. பாருங்கள், எந்த நாட்டுக்கும், இயக்கத்திற்கும் நிரந்தர எதிரியுமில்லை, நிரந்தர நண்பனுமில்லை. நலன்கள் தான் நிரந்தரமாக இருக்கின்றன என்பது சான்றோர் கருத்து. (நன்றி, இயக்கப் பிரசுரங்கள்) இந்த அடிப்படையிலேயே தற்போதைய போக்கை விளங்கிக்கொள்ள வேண்டும். இந்தியா தேவை என்பது மட்டுமல்ல, இந்தியா எமக்கேற்ற விதத்தில் தேவை என்பதும் தான் முக்கியம். எமக்கேற்ற விதத்தில் இந்தியாவை மாற்ற முடியாதபோது, இந்தியா எமக்கேற்ற விதத்தில் மாறும்வரை காத்திருக்க வேண்டியதுதான். ஒரு நாடு எப்போது மாறுகிறது? ஒருபோதுமில்லை என்று உங்களிற் சிலர் சொல்லலாம். ஆனால், ஒரு தேர்தலில் சில அடிப்படைகள் மாறத்தான் செய்கின்றன. கடந்த தேர்தலில், யாழ்ப்பாணத்தைப் பிடிக்கக் கூடிய ஒரு ஆட்சியை, தமிழ் மக்களும் சேர்ந்து அரியணையில் ஏற்றவில்லையா? அதுமாதிரி ஆக, இந்தியாவில் நிகழ்ந்த தேர்தலுக்காக எம்வர்கள் காத்திருந்திருந்த காத்திருப்பு அவலமானது.

மத்தியில் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வரும் என்று ஈழத் தமிழர்கள் எதிர்பாராவிட்டாலும, காங்கிரஸ் மாறவேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டிருந்தனர். எனது நண்பர் ஒருவர், காங்கிரஸ் தவிர்ந்த ஏதாவது ஒரு கட்சி உறுதியான ஆட்சி அமைத்தால் அது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு ஆறுதலான நிலையைத் தோற்றுவிக்கும் என்று சாத்திரம் சொன்னார். அவரது ஆசை நிறைவேறாவிட்டாலும், தமிழர்களுக்குச் சாதகமானது என்று எனது அறை நண்பரால் சிலாகிக்கப்பட்ட பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்தது எனக்குத் தெரிந்த பலரது மனதிலும் மகிழ்ச்சியை விதைத்ததைக் கண்டேன். தண்ணீர் ஊற்றவும், வளர்க்கவும் ஆளில்லாமல் அந்த ஆசை கருகிவிட்டதால் மென்டிஸ் போத்தல்கள் அதிகம் விற்றதன்றி வேறொன்றும் இல்லை.

சரி, பாரதீய ஜனதா ஈழத் தமிழர்கள் பற்றி எப்போது அக்கறை காட்டியது என்று கேட்டால், அதற்கு ஒரு வித்தியாசமான பதில் கிடைக்கும். சில மாதங்கள் முன்னதாக தீவிர இந்து மதவாதத் தலைவர் ஒருவர், புலிகளின் உடம்பில் ஓடுவது இந்து இரத்தம் என்ற மயிர் கூச்செறியும் கருத்தைக் கூறியிருந்தார். அதாவது, இந்துத் தீவிரவாதம் சமன் புலிகள் என்பது அவரது கருத்து. அப்படியாயின் பாரதீய ஜனதாவின் இந்து மதத் தீவிரவாதம் புலிகளை அரவணைக்கும் என்று எனது அறை நண்பர் கருதியதில் என்ன தவறு? விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசில் ஆதரவு கிடைப்பது தமிழீழத்தின் முக்கிய படிக்கல் என்று அவர் சில வாரங்கள் முன்னதாக எனக்குச் சொல்லியிருந்தார். படிக்கல்லைத் தாண்டி வந்து விட்டோமா, படிக்கல்லில் வழுக்கி விழுந்து விட்டோமா என்று விவாத அரங்கு நிகழ்த்த முடியுமா? அவரது கருத்துக்கு மதிப்பு அளித்து, அவரது தனிப்பட்ட நிலைமை மோசமாகாமற் பார்த்துக் கொள்ளச் சொன்னேன்.

மாநிலங்களிலும் தமிழர்களது அரசியல் அக்கறையிருந்தது, முக்கியமாகத் தமிழகத்தில். ஆச்சரியம் என்னவென்றால் தமிழகம் முழுவதும் போர்க்கொடி தூக்கித், தூக்கியெறியப்பட்ட ஜெயலலிதாவின் ஆட்சியே மீள வரவேண்டும் என்று தமிழர்களது நலன்பேணிகள் பலர் பகிரங்கமாகவே பேசித் திரிந்தது எரிச்சலை மூட்டியது. இதற்கான விளக்கம் இலங்கையில் இருப்பவர்களில் எத்தனை பேருக்குத் தெரியுமோ என்னவோ, சுருக்கமானது. ஒன்று, தமிழினத் தலைவர் என்ற பெயரை, ஆட்சிக்கு வருவதன் மூலம் கருணாநிதி நிலைநிறுத்த முயலலாம். தமிழினத்துக்கு (ஒரே) ஒரு தலைவன் தான். இரண்டு, ஜெயலலிதாவைப் பொறுத்தவரை புலிகள் மட்டுமல்ல, யாரும் வரலாம் என்னவும் செய்து விட்டுப் போகலாம்; தமிழகத்தைக் கொள்ளையடிப்பதில் பங்கு கேளாத வரை. ஆனால் கருணாநிதியின் ஆட்சிக்காலம் எது என்னவாகும் என்று சொல்ல முடியாதது. ஏற்கெனவே புலிகளை ஆதரிப்பவர் என்ற குற்றச்சாட்டு உள்ள அவர், தான் தப்ப யாரையும் மாட்டிவிடலாம், புலிகளின் மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரமும் பறிபோய் விடலாம் என்கிற மாதிரிக் காணங்களை அடுக்கினார் எனது அறை நண்பர். அதை விட, ஜெயலலிதா போலவே கருணாநிதியும் பகிரங்கமாகப் புலிகளை ஆதரிக்க முன்வரமாட்டார், ஆகவே ஜெயலலிதா இருப்பது நலம் என்றார்.

ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் தமிழகம் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. தமிழக மக்கள் பல நூற்றாண்டுகள் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் பல கடந்த வருடங்களில் நிகழ்ந்தன. தமிழகத்தின் ஆறு கோடி மக்களும் மொட்டை அடிக்கப்பட்ட அந்த ஐந்து வருடங்களையும் இன்னொரு தரம் தமிழக மக்களுக்கு அன்பளிப்பாக வழங்க ஈழத் தமிழர்கள் சிலர் நினைப்பது எத்தனை துக்கமானது. எமது துக்கங்களில் அழுது, சந்தோசங்களில் மகிழ்ந்த சகோதரர்கள் அல்லவா அவர்கள் அவர்களுக்குத் துன்பம் வருவது எங்களுக்குச் சந்தோஷம் என்றால், நாங்கள் எவ்வளவு ஈனப் பிறவிகளாய் இருக்க வேண்டும். சொந்தச் சகோதரர்கள் துன்பத்திற சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி என்ற பாடலை மேற்கோள் காட்டி இங்கு ஒரு பத்திரிகை சக தமிழர்களைக் கிண்டலடித்தது; அகதிகட்கு உதவவில்லை எனக் கூறி. இந்த விடயத்திலும் அதே மேற்கோள் பொருந்துமோ என்னவோ.

அகதியன் பிறத்தியான்

www.tamilarangam.net



# தேச உருவாக்கம் என்பது ஆதிக்க உறவுக்கு எதிரான மக்கள் எழுச்சியே..

**— ஜே.வி.பி பொதுச் செயலாளர் டில்வின் டீ சில்வாவின் பேட்டி குறித்து ஓர் எதிர்வினை**

சரிநிகர் 95வது இதழில் பிரசுரமான ஜே.வி.பி. பொதுச்செயலாளர் டில்வின் டீ.சில்வாவின் பேட்டி தொடர்பாகச் சில கருத்துக்களை முன்வைப்பதற்காக இக்குறிப்பு எழுதப்படுகின்றது. பிரதானமாக தமிழ்த் தேசம் தொடர்பாகவும், அவர்களின் போராட்டம் தொடர்பாகவும் அவர் வெளியிட்டிருக்கின்ற கருத்துக்களே இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றன. பேட்டியாளரின் கேள்விகளுக்குள் எல்லைப்பட்டிருக்கவேண்டிய நிலையில் ஒருவரினால் வெளியிடப்படுகின்ற கருத்துக்கள், முழுமையாவும், அனைத்தும் தழுவியதாகவும் அமைவது சாத்தியமற்றதே எனினும், நிகழ்காலத்தில் மிகுந்த அக்கறைக்குரியதாக உள்ள விடயம் தொடர்பாக பொறுப்புமிக்க நபர் ஒருவரின் கருத்துக்கள் தெளிவாகவும் அவ்விடயம் தொர்பான 'தனது நிலைப்பாடுகளின் சாராம்சமாகவும் இருக்க வேண்டியது அவசியமாகின்றது. இவ்வகையில் தமிழ்த் தேசம் தொர்பாக ஜே.வி.பி. பொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள கருத்துக்கள், அவரது கட்சியின் நிலைப்பாட்டின் அடிப்படையில் அமைந்தவைஎன்று கருதியே இக்குறிப்பு எழுதப்படுகின்றது.

''தனியான தேசக் கோரிக்கை என்பது தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தினதும், ஏகாதிபத்தியத்தினதும் தேவையே'' என்று ஜே.வி.பி. பொதுச்செயலாளர் கூறுகிறார். இதன்மூலம் தேச உருவாக்கம் குறித்து தான் கொண்டிருக்கிற புரிதலையே அவர் எமக்கு வெளிப்படுத்துகின்றார். தேச உருவாக்கத்தை முதலாளித்துவ வர்க்கத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் தேவையாகக் கருதினால், அது ஒரு பிற்போக்கான இயக்கம் என்று நிறுவுவது எளிதானது. இதன் பின்னர் தேசிய இயக்கத்தையும், ஒரு தேசத்தின் உரிமைப்போராட்டத்தினையும் நிராகரிப்பதற்கும் அல்லது அவற்றுக்கு எதிராக செயற்படுவதற்குமான கோட்பாட்டு நியாயம் கிடைத்து விடுகின்றது. உண்மையில் இத்தகைய அணுகுமுறையானது பெரும்பாலும் சிக்கலும், எழுச்சியும்மிக்கதாக அமைகின்ற ஒரு தேசிய இயக்கத்தை ஸ்தூலமாக மதிப்பிடாமல் ஒதுங்கிக் கொள்வதற்கு ஒருவருக்கு உதவுகின்றது.

தேசம் என்பதை வெறுமனே முதலாளித்துவ வர்க்கத்தின் தேவையாகவும், பிற்போக்கான வகையினமாகவும் கருதினால் இன்றுள்ள அனைத்து தேசங்களையும் - சிங்கள தேசம் உட்பட- அவற்றின் வளர்ச்சிக்காகவும் நிராகரிக்க வேண்டும். புதிதாக உருவாகின்ற தேசங்களை நிராகரிப்பவர்கள், ஏற்கெனவே நிலவுகின்ற தேசங்கள் எப்படி உருவானவை என்ற உண்மையைப் புரிந்து கொள்வது அவசியம். தேசங்களின் உருவாக்கமானது முதலாளித்துவ முறைமையுடன் தொடங்கியது என்ற வரலாற்று உண்மையை, ஒவ்வொரு தேச உருவாக்கமும் முதலாளித்துவ வர்க்கத்தினதும், ஏகாதிபத்தியத்தினதும், தேவையே என்று முடிவு செய்யும் அளவுக்கு விரிப்பது தவறான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. இத்தகைய முடிவு, தேச உருவாக்கத்தில் உணர்வுபூர்வமாக பங்கு கொள்கின்ற ஏனைய வர்க்கங்களையும், சமூகப் பிரிவுகளையம் உதாசீனம் செய்கின்ற நிலைக்கு இட்டுச் செல்கின்றது. ஒரு மக்கள் திரளானது தமக்கிடையே நிலவுகின்ற பல்வகை வேறுபாடுகளையும், (வர்க்க வேறுபாடுகளும் அடங்கலாக) கடந்து பொதுவான அடையாளம்/அடையாளங்களின் கீழ் ஒன்றிணைந்து தமக்கென தனியான அரசியல் அதிகாரத்தைக் கோருகின்ற போது, அவர்கள் ஒரு தேசமாக உருவாகின்றார்கள்.

மேலும் தேச உருவாக்கம் என்பது ஒரு பிரிவினரின்/ வர்க்கத்தின் விருப்பங்கள் மற்றும் தேவைகளில் தங்கியிருக்கவில்லை. மாறாக அது வெவ்வேறு சமூகங்களுக்கிடையிலான உறவு நிலையில் தங்கியிருக்கின்றது. சாராம்சத்தில் தேச உருவாக்கம் என்பது ஒருவகையில் ஆதிக்க உறவுக்கு எதிரான மக்கள் எழுச்சியைக் குறிக்கின்றது. பிற சமூகம்/ சமூகங்களினால் ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்படுகின்ற ஒரு சமூகம் அத்தகைய ஆதிக்கத்திலிருந்து தன்னை விடுவிப்பதற்கான போராட்டத்தை முன்னெடுப்பதினூடாக தன்னை ஒரு தேசமாக உருவாக்கிக் கொள்கின்றது. இத்தகைய ஆதிக்க உறவு நிலவாத நிலையில் எந்த மேதையாலும், எத்தகைய பலமிக்க வர்க்கத்தாலும் ஒரு சமூகத்தை, மக்கள் திரளை தேசமாக ஒன்றிணைக்க முடியாது. இவ்வகையில் தேச உருவாக்கத்தை முதலாளித்துவ வர்க்கத்துடன், இணைத்து அதை ஒரு பிற்போக்கான இயக்கமாக கருதுவதன் மூலம் ஒருவர், மக்களின் போராட்ட உணர்வுகளுக்கும், நலன்களுக்கும் எதிராக செயற்படுகிறார் என்பதே அர்த்தமாகின்றது.

தமிழ் மக்கள் தனியான தேசமாக உருவாகியிருக்கிறார்கள் என்பதே இன்றைய யதார்த்தம். பௌத்த - சிங்கள இனவாத அடக்கு முறைகளிலிருந்து விடுபட்டு தமது எதிர்காலத்தை தமது சொந்த வழியில் தீர்மானிப்பதற்கான அரசியல் அதிகாரத்திற்காக அவர்கள் போராடுகிறார்கள். தமிழ் மக்கள் ஒரு தனியான தேசமாக தம்மை உருவாக்கியிருக்கின்ற நிலையில், தமிழ்த்



தேசத்தின் விவகாரங்களில் சிங்கள தேசமும், அதன் அரசும், மேற்கொள்கின்ற எத்தகைய தலையீடும் தமிழ்த் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பாகவே அர்த்தம் பெறுகின்றது. இந்தியத் தலையீட்டுக்கு எதிராகப் போராடுவதற்கு சிங்கள தேசத்திற்கும், அதன் அரசியல் அமைப்புகளுக்கும் எத்தகைய நியாயங்கள் இருக்கின்றனவோ, அதே அளவான நியாயங்கள் சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடுவதற்கு தமிழ்த் தேசத்திற்கும் இருக்கின்றது. பிரபாகரனின் எதேச்சாதிகாரத்தையோ, அல்லது கூட்டணியை ஆட்சியில் அமர்த்துவதால், தமிழ்த் தேசத்தின் பிரச்சினைகள் தீர்ந்து விடாது என்பதையோ காரணமாகக் காட்டி தமிழ்த் தேசத்தின் உரிமைகளை மறுப்பது தமிழ்த் தேசத்தின் மீதான சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துவதாகவே அர்த்தம் பெறும். ஜே.ஆர். தொடங்கி இன்றைய சந்திரிகா வரை அடக்குமுறையும், ஜனநாயக மறுப்பும் எதேச்சாதிகாரமும் கொண்ட ஆட்சியாளர்களின் கீழ் சிங்கள தேசம் வாழ முடியும் என்றால், ஜேர்மனியர்களின் ஆக்கிரமிப்பின் கீழ் வாழ்வதை விட ''ஸ்டாலினின் அடக்குமுறையின்'' கீழ் வாழ்வதை ரஷ்யர்கள் விரும்பியது உண்மை என்றால், த.வி.கூட்டணியின் ஆட்சியிலோ அல்லது பிரபாகரனின் எதேச்சாதிகாரத்தின் கீழோ வாழ்வதற்கு தமிழ் மக்கள் விரும்பினால், அதை மறுப்பதற்கு சிங்கள தேசத்திற்கு எந்த உரிமையும் இல்லை என்பது முதலில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். ''இந்த முதலாளித்துவ முறையே தமிழ் மக்களை ஒடுக்கியதென்றால், பிரிந்து போனதன் பின்னும் அதே முறைமையின் கீழ் தமிழ் மக்கள் ஒடுக்கப்படாமலா இருக்கப் போகிறார்கள்...?'' என்று ஜே.வி.பி. பொதுச்செயலாளர் கேட்பதில் எவ்வித தர்க்கமும் இல்லை. ஏனெனில், பிரிந்து போகின்ற தமிழ்த் தேசம், சிறீலங்கா அரசின் அதே முறைமையையே தானும் பின்பற்றும் என்று முன்னூகிப்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. பதிலாக தமிழ்த் தேசம் தனக்கான அரசு முறைமையை தானே தீர்மானித்துக் கொள்ளும்.

தமிழ்த் தேசம் முகம் கொடுக்கின்ற பிரச்சினை ''...முதலாளித்துவ வர்க்கத்தால் தோற்றுவிக்கப்பட்டது...'' என்றும், எனவே ''... அதே வர்க்கத்தால் அது தீர்க்கப்படும் என்று நாங்கள் நம்பவில்லை...'' என்றும் ஜே.வி.பி. பொதுச் செயலாளர் கூறுவது, அடிப்படையில் மார்க்ஸிஸ கோட்பாடுகளுக்கே முரணானது. அயர்லாந்துக்கு சுதந்திரம் வழங்குவதன் மூலம்தான் ஆங்கிலப் பாட்டாளி வர்க்கம் தனது விடுதலையை அடைந்து கொள்ள முடியுமென்று மார்க்ஸும், முதலாளித்துவ வரம்புகளுக்குள் தேசியப் பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியும் என்று லெனினும் கூறியதை யாரும் மறந்து விட முடியாது. உண்மையில் தமிழ்த் தேசியத்தின் பிரச்சினைகளை முதலாளித்துவ வர்க்கத்தால் தீர்த்து விட முடியாது என்று கூறுவதன் மூலம், முன்வைக்கப்படக் கூடிய எந்தத் தீர்வையும் தாம் எதிர்ப்பதற்கான ஒரு கோட்பாட்டு நியாயத்தையே ஜே.வி.பி. பொதுச் செயலாளர் முன்வைக்கிறார்.

தமிழ்த் தேசம் முகம் கொடுக்கின்ற பிரச்சினையை ''...ஏழை, பணக்காரர் ஏற்றத்தாழ்வின்...'' வெளிப்பாடாக அதாவது வர்க்கப் பிரச்சினையின் வெளிப்பாடாக ஜே.வி.பி. பொதுச் செயலாளர் காண்கிறார். இதன் மூலம் தமிழ்த் தேசத்தின் பிரச்சினையையும், அவற்றுக்கான தீர்வுகளையும் ஒரு எல்லைக்குள் குறுக்கிவிடுகிறார். தமிழ்த் தேசத்தின் பிரச்சினையை மொழிப் பிரச்சினையாகவும், நிலப்பிரச்சினையாகவும் காட்டுவதன் மூலம் இவற்றுக்குள் ஆழமாக இழையோடுகின்ற இனஒடுக்குமுறையென்ற அம்சத்தை இலகுவாக விலக்கிவிடுகின்றார். இந்தப் பிரச்சினைகள் தனித்தனியே சிங்கள தமிழ்த் தேசங்களின் மத்தியில் நிலவுகின்ற போது ஒரு பரிமாணத்தையும் (வர்க்கப் பரிமாணம்), இவ்விரண்டு தேசங்களிலும் தொடர்பு கொள்கின்ற நிலையில் இப்பிரச்சினைகள் வேறொரு பரிமாணத்தையும் (இன ஒடுக்கல்) பெறுகின்றன என்பதே யதார்த்த உண்மை. இங்கு சிங்கள தேசம் மேலாதிக்க உணர்வு கொண்டதாகவும், தமிழ்த் தேசம் தான் அடக்கி வைக்கப்பட்டிருக்கின்ற உணர்வைக் கொண்டதாகவும் மாறியிருக்கின்றன. இந்நிலையில் இப்பிரச்சினைகள் அனைத்துமே அவற்றின் வர்க்கத் தன்மைகளைக் கடந்து, ஒரு தேசத்தின் உரிமைகள் சம்பந்தப்பட்டதாக மாறியிருக்கின்றன. சிங்கள தேசத்தின் மத்தியில், தமிழ்த் தேசத்திற்கென தனியான உரிமைகள் இல்லை என்றும், அவர்களின் கோரிக்கைகள் நியாயமற்றவை என்றும் சிறீலங்கா அரசு விரும்பி வழங்குபவற்றைத் தான் தமிழ்த் தேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அர்த்தம் தொனிக்கும் கருத்துக்கள் ஆழமாகப் பரப்பப்பட்டிருக்கின்ற நிலையில், மொழி, வேலைவாய்ப்பு, பல்கலைக்கழக அனுமதி, நிலம் போன்றவற்றில் சமத்துவத்தைப் பேண முடியும் என்பதும், அதன் மூலம் இரு தேசங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை அகற்றி விட முடியும் என்பதும், மிக எளிதான கற்பனைதான். மக்களின் சார்பு நிலையைத் தீர்மானிப்பதில் சித்தாந்தம் வகிக்கின்ற பாத்திரத்தை சரியாகப் புரிந்து கொள்ளாதவர்களுக்கு எந்தத் தீர்வும் இலகுவாகத் தோன்றிவிடும். தாம் பார்த்தே இராத யாழ்ப்பாணத்தின் மீதான சிறீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பை, தமிழ்த் தேசத்தின் மீதான தமது வெற்றியாகக் கருதும்படியே சிங்கள தேசம் மாற்றப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் மொழி, வேலைவாய்ப்பு, பல்கலைக்கழக அனுமதி, நிலம் போன்றவற்றில் இரு தேசங்களுக்கிடையிலும் சமத்துவத்தைப் பேண முடியும் என்றும், அதன்மூலம் இரு தேசங்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்திவிட முடியும் என்றும், இன்னமும் கருதுவது, ஜே.வி.பியின் கோட்பாட்டுப் பற்றாக்குறையை மட்டுமல்ல, மக்களின் உணர்வுகளை அவர்கள் எவ்வளவு மேலோட்டமாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் வெளிப்படுத்துகின்றது.

''தமிழ் மக்களுக்கென்று விஷேடமான பிரச்சினைகள் இருக்கின்றதென்பதிலும்.... அவர்களின் பிரச்சினைகளில் விஷேடகவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதிலும் கருத்து முரண்பாடு இல்லை...'' என்று ஜே.வி.பி. பொதுச்செயலாளர் கூறுகிறார். இந்த ''விஷேடமான பிரச்சினைகள்'' என்பது வெவ்வேறு விதமாக அர்த்தம் கொள்ளப்படலாம். தமிழ்த் தேசத்தைப் பொறுத்தவரை தமது, அரசியல் வாழ்வைத்தாமே தீர்மானிப்பதற்கான சுயநிர்ணய உரிமை அடங்கலாக முற்றிலும் அரசியல் சார்ந்த பிரச்சினைகளே ''விஷேடமான பிரச்சினைகள்'' என்பதன் மூலம் அர்த்தப்படுகின்றது. உண்மையில் தமிழ் மக்கள் தனியான தேசமாக இருக்கின்ற நிலையில் அந்தத் தேசத்தின் விவகாரங்களில் ''விஷேட கவனம்'' செலுத்துவற்கு இன்னொரு தேசத்தைச் சேர்ந்த எவருக்கும் உரிமையில்லை என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

''சமதர்ம சோஷலிச சமுதாயமொன்று உருவாக்கப்பட வேண்டும். அக்காரியத்தைச் செய்யும் பொறுப்பை நாங்கள் ஏற்கிறோம். எனவே தமிழ், முஸ்லிம் தனியரசுக்கான போராட்டத்திற்குப் பதிலாக ஒன்றாக வாழக்கூடிய சோஷலிச அரசுக்கான போராட்டத்தை செய்ய எங்களுடன் இணையுங்கள்'' என்று ஜே.வி.பி பொதுச்செயலாளர் கூறுகிறார். சோஷலிசசமுதாயத்தை உருவாக்குவதற்கான பொறுப்பு குறித்த ஒரு பிரிவினரிடம் மட்டும் ஒப்படைக்கப்படுவதில்லை. சோஷலிசத்திற்கான போராட்டம் என்பது சாராம்சத்தில் மக்களின் மிகப் பெரும்பாலானோரின் ஆதரவுடனும், பங்குபற்றலுடனும் முன்னெடுக்கப்படுகின்ற வெகுஜன அக்கறையைக் குவிப்பதற்கு, முதலில் மக்கள் முகம் கொடுக்கின்ற அனைத்துப் பிரச்சினைகளும் தெளிவாகப் பரிசீலிக்கப்பட்டு அவற்றுக்கான தீர்வு ஒரு சோஷலிச அமைப்பில்தான் சாத்தியமாகும் என்பதை மக்களுக்குத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். இங்கு தமிழ்த் தேசம் தனது அரசியல் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்ற நிலையில், அந்தத் தேசத்திற்கான உரிமைகளை அங்கீகரிக்குமாறு சிறீலங்கா அரசை நிர்ப்பந்திக்காததோடு, முன்வைக்கப்படுகின்ற எந்தத் தீர்வையும் நிராகரித்து, அதற்கு எதிராக செயற்படுவதையே இலக்காகக் கொண்டிருப்பதன் மூலம் ஜே.வி.பி ஒருபுறம் தமிழ்த் தேசத்திடம் இருந்து தன்னை நியாயமாகவே அந்நியப்படுத்தி விட்டது. மறுபுறம் தமிழ்த் தேசத்தின் உரிமைகள் தொடர்பாக எதிர்மறையான (Negative) அணுகுமுறைகளை வெளிப்படுத்துவதன் மூலம் சிங்கள தேசத்தின் மத்தியில், தமிழ்த் தேசத்தின் போராட்டம் தொடர்பாக எதிரான மனோநிலையை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் இரு தேசங்களும் ஒன்றிணைந்து சோஷலிச அரசுக்காகப் போராடவேண்டும் என்று ஜே.வி.பி எதிர்பார்ப்பதில் எவ்வித தர்க்கப் பொருத்தமும் இல்லை.

சோஷலிச சமூகத்தை உருவாக்குவதற்காக, தமிழ்த் தேசம் தனது உரிமைப் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகவே சிங்கள மற்றும் தமிழ் இடதுசாரிகளினால் முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றது. எனினும், இலங்கையில் ஒரு சோஷலிச மாற்றம் ஏற்படாமல் இருப்பதற்கு தமிழ்த் தேசத்தின் போராட்டம் தான் காரணம் என்று நிரூபிக்கக்கூடிய ஆதாரம் எதையும் யாரும் முன்வைக்க முடியாது. மாறாக 1971ல் ஜே.வி.பி. கிளர்ச்சி ஏற்பட்ட போது, தமிழ் மக்கள் தேசஉரிமைக்கான போராட்டத்தில் இறங்கியிருக்கவில்லை. பின்னர் தமிழ்த் தேசம் தனது உரிமைகளுக்காக தீவிரமாகப் போராடிக் கொண்டிருந்த காலப்பகுதியான 1980களின் பிற்பகுதியில் மீண்டும் ஒரு ஜே.வி.பி கிளர்ச்சி ஏற்படுவதை தமிழ்த் தேசத்தின் போராட்டம் எவ்விதத்திலும் தடுத்து விடவில்லை. இவ்விரண்டு சந்தர்ப்பத்திலும் ஜே.வி.பியினால் சோஷலிச சமூகத்தை உருவாக்க முடியாமல் போனதற்கு தமிழ்த் தேசத்தின் போராட்டம் எவ்விதத்திலும் காரணமாக இருக்கவில்லை. அதற்கான உண்மைக் காரணங்களை சரியாக அடையாளம் கண்டு கொள்ளாமல் தமிழ்த் தேசம் தனது போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கோருவது தனது பலவீனங்களை நியாயப்படுத்துவதாக மட்டுமல்லாமல், தமிழ்த் தேசத்தை சிறீலங்கா அரசினதும், சிங்கள இனவாதத்தினதும் அடக்குமுறைக்குள் வாழும்படியாக நிர்ப்பந்திப்பதாகவுமே அர்த்தம் பெறுகின்றது. ஒரு உண்மையான சோஷலிச சமூகத்தை உருவாக்குவதற்கான சரியான முன்னெடுப்புக்கள் எதனையும் சிங்கள தேசத்திடம் காண முடியாதிருக்கின்ற நிலையில் தமிழ்த் தேசம் தமது உரிமைக்கான போராட்டத்தைக் கைவிடுவது என்பது, சூனியத்திற்குள் செல்வதற்காக, தனது இருப்பைத் துறப்பதாகவே அமையும்.

இறுதியாக சில வார்த்தைகள் கூறலாம்: தமிழ் மக்கள் ஒரு தனியான தேசம் என்பதையும், ஒரு தேசத்திற்குரிய அனைத்து உரிமைகளையும் அனுபவிப்பதற்கு தமிழ்த் தேசத்திற்கு பாத்தியதை உண்டு என்பதையும், சிங்கள இடதுசாரிகளும், முற்போக்கு பிரிவினரும், புத்திஜீவிகளும் இன்னமும் ஒத்துக்கொள்ளவில்லை. இந்த உண்மையை இவர்கள் ஏற்றுக்கொண்டு ஒரு தேசத்திற்குரிய அனைத்து உரிமைகளையும் தமிழ்த் தேசமும் அனுபவிப்பதற்கான சூழலை ஏற்படுத்தாதவரை, இன்றைய நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படப் போவதில்லை. சிறீலங்கா அரசு, மற்றும் சிங்கள இனவாதிகளின் நேரடி அடக்குமுறைகளை மட்டுமல்ல, சிங்கள இடதுசாரிகள் மற்றும் முற்போக்கு பிரிவினரின் நிராகரிப்புகளையும் மீறி தமிழ்த்தேசம் தனது உரிமைகளை வென்று கொள்ளும். இதுவே இன்று ஒரு தவிர்க்க முடியாத வரலாற்று நிகழவாக முன்நிற்கின்றது.

**— இரா.சுகுமார்**

www.tamilarangam.net





# குருவிக்கும் ஒரு கூடு வேண்டும்-2

# தோட்டப்புற வீடமைப்பின் நோக்கமும் பிரதான அம்சங்களும்

-பீ.ஏ. காதர்

### தோட்டப்புற வீடமைப்பின் நோக்கமும்: பிரதான அம்சங்களும்:

தோட்டத் தொழிலாளருக்கான வீடமைப்புத் திட்டம் ஏன் தேவைப்படுகிறது? தற்போது தோட்ட லைன்கள் பழமைப்பட்டு உடைந்து விழும் நிலையில் இருப்பதால் மாற்றுவீடுகள் அமைத்துக் கொடுப்பது ஒரு அவசர தேவையாகிவிட்டது என்பதால் மாத்திரம் அல்ல கைதித் தொழிலாளர் நிலையில் வாழும் தோட்டத் தொழிலாளரை அந்த நவீன அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து பொது நீரோட்டத்துக்குள் கொண்டு வருவதாகவும் தோட்டப்புற வீடமைப்புத்திட்டம் அமைதல்வேண்டும்.

தற்போது லைன் அறைகள் தோட்ட நிர்வாகத்திற்கு சொந்தம். லைன் அறையில் குடியிருப்போரில் ஒருவராவது

அத்தோட்டத்தில் வேலைசெய்யாவிட்டால் அதில் வாழும் அனைவரையும் வெளியேற்றுகின்ற அதிகாரம் தோட்ட நிர்வாகத்திற்கு உண்டு.

அத்துடன் தோட்டத் தொழிலாளர்கள் தொழிலுக்காக மாத்திரமன்றி ஏனைய அனைத்திற்கும் தோட்ட நிர்வாகத்தில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது. உதாரணமாக கிராமப்புறத்திற்கு அநேகமாக அனைத்து சேவைகளும் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றன. மருத்துவ வசதி, நீர் விநியோகம், தபால் விநியோகம், பாதைகள் அமைத்தல், மின்சாரம் வழங்குதல் போன்ற பணிகளை அங்கு அரசாங்கம் கவனிக்கிறது. ஆனால், தோட்டப்புறங்களுக்கு இச்சேவை மறுக்கப்படுகிறது. தோட்ட நிர்வாகத்தின் தயவில் இச்சேவைகள் விடப்பட்டுள்ளன. கிராமப்புற மக்களைப்போலல்லாது தோட்டத் தொழிலாளர் மின்சார இணைப்புகளை எளிதில் பெற முடியாது. டிரான்ஸ்போர்மர் தூண்கள், பிரதான இணைப்புக்கான வயர்கள், ஆள்கூலி அனைத்திற்கும் பணம் செலுத்தினால் மாத்திரமே மின்விநியோகம் இவர்களுக்குக் கிடைக்கிறது. கிராமவாசிகளுக்கு இவை அரசினால் இலவசமாக வழங்கப்படுகின்றன. வீட்டுக்குச் செய்யப்படும் ''வயரிங்'' வேலைக்கு மாத்திரமே அவர்கள் பணம் செலுத்த வேண்டும்.

அரசாங்க மருத்துவ மனைகளில் தோட்டத் தொழிலாளர்கள் நேரடியாக சிகிச்சை பெற முடியாது. தோட்ட வைத்தியரின் ''துண்டு'' டன் மாத்திரமே சிகிச்சைப் பெறமுடியும். கிராமப்புறங்களில் சுமார் 500 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் என்ற விகிதாசாரம் காணப்படுகிறது. ஆனால், தோட்டப்புறங்களில் இவ்விகிதாசாரம் பத்தாயிரத்திற்கு ஒன்றாக இருக்கிறது. எனவே தோட்டத்துரையே உத்தியோகப்பற்றற்ற கிராம சேவகராகவும், அரசாங்க அதிபராகவும் செயற்படுகிறார். குழந்தைப் பிரசவத்திற்காக மருத்துவமனைக்கு அனுமதிக்கப்படுவது முதல் இறந்தால் புதைப்பது வரை சகல காரியமும் தோட்ட நிர்வாகத்தின் தயவினாலேயே மேற்கொள்ளப்படுகிறது. தோட்டத் தொழிலாளரின் வாழ்வின் ஒவ்வொரு அம்சமும் தோட்ட நிர்வாகத்தால் கண்காணிக்கப்படுகிறது, கட்டுப்படுத்தப்படுகிறது. இவ்வாறு முற்றுமுழுதாக தோட்ட நிர்வாகத்தில் சார்ந்திருக்கும் அதன் பிடியில் கட்டுண்டிருக்கும் நிலைமையே ''கைதி தொழிலாளர்'' முறையின் அடித்தளமாகும்.

தோட்டப்புற வீடமைப்பின் நோக்கம் ''கைதி தொழிலாளர்'' முறையிலிருந்து தோட்டத் தொழிலாளரை விடுதலை செய்வதாக அமைய வேண்டும்.

எனவே தோட்டப்புற கிராமங்கள் உருவாக வேண்டும். 500 குடும்பங்கள் கொண்ட தனித்தனி நவீனவீட்டு அலகுகள், வீட்டுத்தோட்டம், போக்குவரத்துப் பாதை, மின்சாரம், நீர்விநியோகம், விளையாட்டு மைதானம், உபதபாற்கந்தோர், பாடசாலை, கூட்டுறவுச் சங்கக் கடைகள், வங்கி, வாசிகசாலை ஆகியவற்றைக் கொண்டதாக அமைதல் வேண்டும். ஒவ்வொரு தோட்டப்புறத் தொகுதியும் தனித்தனி கிராமப்புற சேவகர்ளைக் கொண்டிருக்க வேண்டும். இவை தோட்ட நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் அல்லது சுதந்திரமாக இயங்குதல் வேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சுகளும் திணைக்களங்களும் நேரடியாகத் தமது சேவையை வழங்க வேண்டும். ஒரு லைன் அறையில் வாழும் மேலதிக குடும்பங்கள் மாத்திரம் வீடற்றவராகக் கருதப்படக் கூடாது. தற்போதுள்ள லைன்கள் உடைந்துவிழும் நிலையில் உள்ளவை, மனிதர் வாழ்வதற்கு உகந்தவையல்ல. எனவே முழு லைன்களும் அழித்தொழிக்கப்பட வேண்டும். சகல தொழிலாளர் குடும்பங்களும் வீடற்றவையாகக் கருதப்பட்டு சகல குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்படுதல் வேண்டும்.

தோட்டப்புறங்களில் தொழிலாளர்கள் அல்லாத ஆசிரியர், சிறுவர்த்தகர்கள், சாரதிகள் தோட்ட சேவையாளர் போன்ற ஏனைய அணியினரின் தொகை இப்போது பெருகி வருகிறது. எனவே தோட்டப்புற வீடமைப்புத் திட்டம் தோட்டத் தொழிலாளருக்கு மாத்திரம் உரியதொன்றாக அமையக் கூடாது; பெருந்தோட்ட சமூகத்திற்கான, மலையக மக்கள் அனைவருக்குமான திட்டமாக அமைதல் வேண்டும்.

### முதற்படி:

தோட்டப்புற வீடமைப்புத் திட்டம் என்பது ஏற்கெனவே விளக்கியவாறு மலையக சமூக மாற்றத்தைக் குறிப்பதாக அமைய வேண்டும். ''கைதி தொழிலாளர்'' (Captive Labour) நிலையிலிருந்து விடுதலை அளிப்பதாகவும் தனிமைப்பாட்டிலிருந்து தோட்ட நிர்வாகத்தின் தயவில் முழுமையாக தங்கியிருப்பதிலிருந்தும் விடுபட்டு பொது நீரோட்டத்துக்குள் கொண்டுவரும் செயல்முறையாகவும் அமைதல் வேண்டும்.

இந்த மகத்தான பணியை எங்கிருந்து தொடங்குவது? சுமார் 250,000 தோட்டப்புற குடும்பங்களுக்கு இலவசமாக வீடும், காணியும், உள்கட்டமைப்பும் (InfraStructure) ஏனைய சேவைகளும் உடனடியாக வழங்குவது என்பது அதீதகற்பனையாகும்.

ஆனால், பணியை உடனடியாகத் தொடங்க முடியும். எப்படி? முதலில் தோட்டப்புற வீடமைப்புப் பற்றி தெளிவான கொள்கை ஒன்று வகுக்கப்படல் வேண்டும். இதில் விளக்கப்பட்டுள்ள தோட்டப்புற கிராம அமைப்பே சிறந்த கொள்கையாக அமைய முடியும். இரண்டாவதாக இக்கொள்கையின் அடிப்படையில் தோட்டப்புற கிராமங்கள் அமையக்கூடிய விதத்தில் டிவிசன் வாரியாகவும், தோட்டவாரியாகவும், அயலில் உள்ள தோட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டும், தொகுதி தொகுதியாக கிட்டத்தட்ட 500 குடும்பங்கள் ஒரு நிர்வாக அலகாக அமையும் விதத்தில் வீடுகட்டுவதற்கும் தோட்டக்காணிக்கும் உள்கட்டமைப்புக்கும் தேவையான நிலம் இலவசமாக வழங்கப்படுதல் வேண்டும்.

இவ்வாறு இலவசமாக வழங்கப்படும் நிலம் வெளியாருக்கு விற்கப்படுவதைத் தடுப்பதற்கும் புதிய கூட்டு நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கும் ஏதுவாக ''மக்கள் கமிட்டிகள்'' அமைக்கப்பட்டு அவற்றிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். 10 - 15 வருடங்களின் பின்னரே நிலம் பூரணமாக சொந்தமாகும். அதுவரை நிலத்தை அடமானம் வைக்கவோ, கைமாற்றவோ குத்தகைக்கு விடவோ, விற்கவோ முடியாது என நிபந்தனை விதிக்கப்படுதல் வேண்டும். மக்கள் கமிட்டியின் நிர்வாகத்தில் தோட்ட நிர்வாகம் தலையிடக் கூடாது.

இவ்வாறு வழங்கப்படும் நிலத்தில் கூட்டாகவோ, தனியாகவோ சுயமுயற்சியால் சிறுகுடிசையாவது அமைத்துக்கொண்டு தோட்ட நிர்வாகத்தின் பிடியிலிருந்து சுதந்திர மனிதர்களாக விடுபட்டு வாழப்பழகுவதை ஊக்குவிக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் மதுபாவனைக்கூடக் கட்டுப்படுத்தப்படும். மதுவுக்கு செலவிடும் பணத்தில் ஒரு பகுதியேனும் வீடு அமைப்பதற்கும் வீட்டில் வசதிகளை அதிகரித்துக் கொள்வதிலும் செலவிடப்படும். இத்தகைய வீடுகட்டுவதில் சுய ஆர்வமுள்ளவர்களுக்குக் குறைந்த வட்டிக்கு நீண்டகால கடனை அரச நிறுவனங்கள் பெற்றுக்கொடுக்க வேண்டும். தோட்டத் தொழிலாளரின் வருமானம் வீழ்ச்சியுற்றிருப்பதனால் கடனைத் திருப்பி செலுத்தும் ஆற்றல் பலவீனமடைந்துள்ளது. எனவே பெரியளவு கடனைப் பெற்று அவர்களால் திருப்பிச் செலுத்தமுடியாது. சிறியளவு கடன் பெற்று விலைவாசி அதிகரித்துள்ள இக்காலகட்டத்தில் சிறு வீடு ஒன்றைத்தானும் பூர்த்திசெய்யமுடியாது. ஆகையால் தொண்டர் நிறுவனங்களும், அரச நிறுவனங்களும் செலவில் அல்லது கட்டிடப் பொருட்களில் ஒரு பகுதியாவது இலவசமாக வழங்குவதுடன் சிக்கனமாக அமைப்பதற்குரிய தொழில் நுட்பத்தையும், பயிற்சியையும் வழங்க வேண்டும்.

எனவே தோட்டப்புற வீடமைப்பின் முதற்படி நிலம் பகிர்ந்து கொடுப்பதிலேதான் ஆரம்பிக்கிறது.

### லைன்களை சொந்தமாக்குவது வீட்டுப்பிரச்சினையைத் தீர்க்குமா?

லைன்களை சொந்தமாக்குவது தோட்ட நிர்வாகத்தை லைன்களை பழுதுபார்க்கும் செலவிலிருந்து விடுவிக்கும். தற்போது உள்ள நிலைமையில் அது பெரிதாக எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. ஏனெனில்,

1. உடைந்து விழக்கூடிய நிலையில் உள்ள பழமைவாய்ந்த லைன்களின் பெறுமதி 5000/= ரூபாவுக்கும் குறைவானது.
2. தோட்டப்புறங்களில் உள்ள தொழிலாளர்களில் 7 சதவீதமானவர்களுக்கே வீட்டுத் தோட்டம் உள்ளது.
3. நிலப்பெறுமதி என்ற வீதத்தில் பார்த்தால் 12' X 10 லைன் அறையின் நிலப்பரப்பு 120 சதுர அடி மாத்திரமே. ஒரு பேர்ச்சஸ் என்பது 272 சதுர அடியாகும். லைன் அறை முற்றத்தையும் சேர்த்தால் கூட ஒரு பேர்ச்சஸ் தேறாது.
4. லைன் அறைகளை விஸ்தரிப்பதற்கு வாய்ப்புக் கிடையாது.
5. லைன் அறைகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் கணிசமானவை பொருத்தமற்றவை.

எனவே தோட்டத் தொழிலாளர் தற்போது வாழும் குடியிருப்புகளில் பொருத்தமானவை மாத்திரம் தோட்டப்புறக் கிராமத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படலாம்.

### ''ட்ரஸ்ட்'' மேற்கொள்ளும் வீடமைப்புத் திட்டத்திலுள்ள பிரதான குறைபாடுகள்:

1. தோட்ட நிர்வாகிகளின் ஆதிக்கம் மிகுதியாக உள்ளபடியால் தொழிலாளருக்கு நம்பிக்கையளிப்பதாயில்லை.
2. லைன் அறைகளில் வாழும் மேலதிகக் குடும்பங்கள் மாத்திரமே வீடற்றவையா கருதப்படுகின்றன.
3. பெருந்தோட்ட அமைச்சின் கீழ் இயங்கும் ''ட்ரஸ்ட்'' டிடம் வீடுகள் நிர்மாணத்தில் அனுபவமுள்ள நிபுணர்களோ நிர்மாண அமுலாக்கல் பிரிவோ நிர்வாக அலகோ கிடையாது. எனவே புதிதாகக் காரியாலயம் அமைத்தல், அவற்றைப்பராமரித்தல் நிர்வாகிகளுக்கான ஆடம்பர வாகனம் அதீத சம்பளம் எனப் பெருமளவு நிதி வீண்விரயமாகிறது.
4. காணியும் கடனும் மாத்திரமே வழங்கப்படுகிறது. வழங்கப்படும் கடன் வீடுகட்டப் போதுமானதாய் இல்லை.
5. ஒரு திட்டவட்டமான கொள்கை கிடையாது.

### தோட்டப்புற வீடுகள் நிர்மாணம் - எதிர்நோக்கும் பிரச்சினைகள்:

1. காணிபெறுவதில் உள்ள சிக்கலும் தாமதமும்.
2. இனவாத தப்பெண்ணம் கொண்ட அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் ஒத்துழைப்பின்மை.
3. தொழிற் சங்க போட்டிகாரணமாக ஒரு பொதுக்கொள்கை வகுப்பதிலும் ஒரே குரலில் அரசை வலியுறுத்துவதிலும் ஒற்றுமையின்மை கழுத்தறுப்பு.
4. ''டிரஸ்ட்டுக்கும்'', ''தோட்டப்புற வீடமைப்பு'' அமைச்சுக்கும் இரு வேறு திட்டங்களை முன்வைத்தல்

இறுதியாக தோட்டப்புற கிராமத்திட்டத்திற்கு சர்வதேச ரீதியாக நிதிதிரட்டுவது சிரமமான காரியமல்ல. இதற்கு ஆதரவான உள்நாட்டு சக்திகளை ஒன்றிணைத்து இனவாத சக்திகளினதும் காழ்ப்புணர்வு கொண்ட தொழிற்சங்கங்களினதும் இடையூறுகளை வென்று அதனை செயற்படுத்துவதுதான் சிரமமான காரியமாகும்.

### தோட்ட வீடமைப்பு அமைச்சின் பாத்திரம்:

இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக தோட்டப்புற வீடுகள் நிர்மாணத்திற்கென தனியான பிரிவு ஒன்று அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு சாதாரண விடயமல்ல. இது ஒரு கட்சிக்கோ, தனிநபருக்கோ உரிய அமைச்சு அல்ல, மலையக மக்களுக்கான அமைச்சு. தொழிற்சங்க தலைமை ஆதிக்கப் போட்டிகளால் இந்த அமைச்சு சிசு மரணம் அடைந்துவிட்டால் அந்த இழப்பு மலையக மக்களுக்குத்தான். இத்தகைய அமைச்சு உருவாகியுள்ளதால் ஏற்படக்கூடிய நன்மைகள் வருமாறு:-

1. மலையக மக்களின் வீட்டுப்பிரச்சினையைக் கவனிப்பதற்கும் கையாள்வதற்கும் ஒரு அதிகாரமுள்ள அமைச்சு உருவாகியுள்ளது.
2. தனியான நிர்வாகத்தையும் தனியான வங்கிக் கணக்கையும் அது கொண்டுள்ளதால் ஓரளவு சுயேட்சையாக அதனால் காரியமாற்ற முடியும். திட்ட அமுலாக்கலை மேற்கொள்ள முடியும்.
3. அனுபவமும் ஆற்றலும் மிக்க வீடு நிர்மாணத்துறை அமைச்சின் ஒரு பிரிவாக அது செயற்படுவதால் அவ்வமைச்சு அதிகாரிகளையும், நிபுணர்களையும், பாரிய இயந்திரங்களையும் வாகனங்களையும், கட்டிடங்களையும் அதனால் பயன்படுத்திக்கொள்ள முடியும். இதன் மூலம் பெருமளவு நிர்வாகச் செலவை மீதப்படுத்த இயலும்.
4. சர்வதேசரீதியிலும், தேசியரீதியிலும் அதிகாரபூர்வமாக பிரச்சாரங்களை மேற்கொள்ளவும் நிதிதிரட்டவும் வாய்ப்புகள் அதிகமுண்டு.
5. அமைச்சர்கள் மாறினாலும் அரசு மாறினாலும் தொடர்ச்சியாக செயற்படக்கூடிய நிரந்தரமான ஒரு அலகாக இதனால் செயற்பட முடியும்.

எனவே இந்த அமைச்சுப் பிரிவைப் பாதுகாப்பதும் பலப்படுத்துவதும் மலையகத் தலைமைகளின் வரலாற்றுக் கடமையாகும். மறுபுறத்தில் ஒரு கட்சிக்குரிய அமைச்சாக அதனை மாற்றாமல் இதில் விதந்துரைக்கப்பட்ட பொதுக் கொள்கையை ஏற்றுக்கொண்ட சகல மலையக அமைப்புகளையும் தொண்டர் நிறுவனங்களையும் இவ் அமைச்சு தனது வேலைத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளவேண்டும்.

### ஒரே பார்வையில் தோட்டப்புற வீடமைப்பு தொடர்பான பொதுக் கொள்கை

(இன்னொரு வார்த்தையில் கூறுவதென்றால் ஒரு தொழிலாளி பத்தாயிரம் ரூபாய் வரை செலவளித்து ஒரு தற்காலிகக் குடில் அமைத்துக் கொள்ளும்போது 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான காணியும் உள்கட்டமைப்புகளும் அரசிடமிருந்து இலவசமாகக் கிடைத்துவிடுகிறது)

கட்டம் 11

தற்காலக் குடில்களை தோட்ட வீடமைப்பு அமைச்சும் பிற தொண்டர் ஸ்தாபனங்களும் நவீன வீடுகளாக மாற்றுதல்.

இதற்காகும் செலவை இவ்வாறு ஈடுசெய்யலாம்:

இதன்படி ஒரு லட்சம் ரூபா தேவையில் ஒரு பகுதி கடனாகவும் ஒரு பகுதி சுய உழைப்பாகவும் பெறப்படுகிறது.

தபாற்கந்தோர், வங்கிக்கிளை, மைதானம், மருத்துவ விடுதி, கூட்டுறவுச் சங்கக் கடைகள், சனசமூக நிலையம் போன்றவற்றை நிர்மாணித்து அவற்றின் சேவைகளை வழங்குவது சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் பொறுப்பாகும். இவ்வாறு அமைக்கப்படும் தோட்டப்புற கிராமங்கள் தோட்டப்புற நிர்வாகத்தின் பிடியிலிருந்து விடுபட்டு பொது நீரோட்டத்துக்குள் கொண்டு வரப்படுதல் வேண்டும்.

முடிவாக கிராமப்புற மக்களைப்போலல்லாது தோட்டத் தொழிலாளர் மத்தியில் சொந்த வீடுகளில் வாழ்வதை சுயகௌரவமாக கருதுகின்ற மரபு கிடையாது. நிர்வாகத்தினால் வழங்கப்படும் லைன்களில் பல தசாப்தங்களாக வாழ்ந்து வழக்கப்பட்டுப் போன அவர்கள் மனதில் சொந்த வீடும் காணியும் தேவை என்ற எண்ணத்தை முதலில் தோற்றுவித்தல் வேண்டும். பின்னர் காணி கிடைக்க வழி செய்து சுய ஆர்வத்தைத் தூண்டிவிட்டு சுய முயற்சி மூலம் ''கைதித் தொழிலாளர்'' என்ற நவீன அடிமைத்தனத்திலிருந்து மீள்வதற்கு அதாவது சொந்த வீடு அமைத்து சுதந்திர மனிதர்களாக வாழ்வதை ஊக்குவிக்கவேண்டும். ''மாதிரித்தோட்டப்புற கிராமங்களை'' ஆங்காங்கு அமைத்து அரசாங்கம் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். அரச நிறுவனங்களும் அரசு சார்பற்ற நிறுவனங்களும் இச்சமூக மாற்றத்தில் பங்கு கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே.




குழந்தைகள் பொய் சொல்லும் போது, அதுவும் அந்தப் பொய் தெளிவாகவே பொய் என்று தெரியும் போது பெற்றோர் பெரும் கோபத்துக்குள்ளாகிறார்கள். உடல் முழுவதும் தான் செய்ததற்கான அடையாளங்களை வைத்துக்கொண்டே தான் 'பெயின்ற்' (Paint) இல் தொடவில்லை என்றோ சொக்லேட்டை எடுத்துச் சாப்பிடவில்லை என்றோ ஒரு குழந்தை சொல்லும் போது கோபம் வரத்தான் செய்கிறது.

ஏன் குழந்தைகள் பொய் சொல்லுகிறார்கள்? சில வேளைகளில், அவர்கள் பொய் சொல்லுவதற்குக் காரணம் அவர்கள் உண்மை சொல்ல அனுமதிக்கப்படாமையே. ஒரு குழந்தை தனது தமயனைத் தான் வெறுக்கிறேன் என்ற ஒரு உண்மையை தனது தாயிடம் சொன்னால், அந்தத் தாய் அதற்காக அந்தக் குழந்தையைக் கண்டிக்கக்கூடும். தனது உணர்வுகளைத் தலை கீழாக்கி தனது தமயன்மீது தனக்கு நல்ல விருப்பம் என்று சொன்னால், அதற்கே, சில வேளை அக்குழந்தைக்கு பாராட்டுக் கிடைக்கக் கூடும். ஒருமுத்தமும் கூடக்கிடைக்கலாம் ஒரு பொய் சொன்னதற்காக!

இத்தகைய அனுபவங்களிலிருந்து ஒரு குழந்தை எந்த முடிவுக்கு வர முடியும்? குழந்தை 'உண்மை சொல்வது பாதிப்பை ஏற்படுத்தும்; பொய் சொல்வது பாராட்டைத்தரும்; எனது அம்மா குட்டிப் பொய்களை விரும்புகிறாள்' என்ற ஒரு முடிவுக்கு வரக்கூடும்!

நாம் குழந்தைக்கு நேர்மையைக் கற்பிக்க விரும்புவோமானால், சில கசப்பான உண்மைகளைக் கூட சந்தோஷமான உண்மைகளைப் போலவே கேட்கவும் தயாராக இருக்க வேண்டும். ஒரு குழந்தை நேர்மையாக வளர வேண்டுமானால், அது தனது உணர்வுகளைக் குறித்து பொய்யுரைப்பதற்கு ஊக்குவிக்கப்படக் கூடாது. அவை நேர்மையானதாகவோ எதிர்ப்படியானதாகவோ அல்லது குழப்பமானதோ எப்படி இருப்பினும் அந்த உணர்வுகள் குறித்து பொய்யுரைக்கக் கூடாது. குழந்தைகளின் உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகையில் அவற்றுக்கு நாம் காட்டும் எதிர்வினையிலிருந்துதான் அவர்கள் நேர்மையாக இருப்பதா நேர்மையில்லாமல் இருப்பதா சிறந்த கொள்கை என்று முடிவு செய்கிறார்கள்.

### உண்மைகளைச் சொல்லும் பொய்கள்:

உண்மைச் சொல்லும் சந்தர்ப்பங்களில் அதைச் சொன்னதற்காகத் தண்டிக்கப்படும் போது குழந்தைகள் தற்பாதுகாப்புக்காக பொய் சொல்லுகிறார்கள். அவர்கள் யதார்த்தத்தில் தம்மிடம் குறைவாக உள்ள ஒன்றை இருப்பதாகக் காட்டிக்கொள்ளவும் கூட பொய் சொல்லுகிறார்கள். பொய்கள் பயம் அல்லது நம்பிக்கை பற்றிய உண்மைகளைக் கூறுகின்றன. அவை ஒருவர் என்னவாக இருக்க விரும்புகிறார் அல்லது என்ன செய்ய விரும்புகிறார் என்பதை வெளிப்படுத்துகின்றன.

ஒரு பொய் குறித்த எமது அணுகுமுறை அப்பொய்யின் உள்ளடக்கத்தை நிராகரிப்பதாகவோ அல்லது அதைச் சொல்பவரைக் கண்டனம் செய்வதாகவோ அமைவதற்குப் பதில் எமது எதிர்வினையின் மூலம் நாம் அப்பொய்யின் சாரத்தைப் புரிந்து கொண்டிருக்கிறோம் என்பதை வெளிப்படுத்த வேண்டும். இதுவே ஒரு முதிர்ச்சியான அணுகுமுறையாக அமையும். பொய்யிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் தகவல்கள், குழந்தைக்கு யதார்த்த உலகத்தையும் பயனுள்ள சிந்தனையையும் வேறுபடுத்தி உணர்ந்து கொள்வதற்கு உதவியாகப் பயன்படுத்தப்படமுடியும்.

ஒரு சிறுவன் தனக்கு கிறிஸ்மஸ் பரிசாக ஒரு உயிருள்ள யானைக்குட்டி கிடைத்தது என்று சொல்லும் போது அவனை ஒரு பொய்யன் என்று நிரூபித்துக்காட்டுவதை விட 'அப்படிக் கிடைத்திருக்க வேண்டுமென்று நீ விரும்புகிறாய் என்ன' என்று கூறுவது அதிகளவு பயனுள்ளதாக இருக்கும். அல்லது இப்படிக் கூறலாம். 'ஒரு யானை இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறாய் என்ன?'

'உனக்குச் சொந்தமாக ஒரு மிருகக் காட்சிச்சாலையே இருக்க வேணும் என்று உனக்கு விருப்பம் என்ன'

'உனக்கு ஒரு காடு நிறைய மிருகங்கள் இருந்தால் நல்லது என்று விரும்புகிறாய்.'

### தூண்டப்படுதலால் வரும் பொய்கள்:

பெற்றோர் குழந்தைகள் தற்பாதுகாப்புக்காக பொய் சொல்லக்கூடிய கேள்விகளை ஒரு போதும் கேட்கக் கூடாது. குழந்தைகள் தம்மை பெற்றோர் விசாரணைக்குட்படுத்தும் போது, அதுவும் தாம் சொல்லவேண்டிய பதில் ஏற்கெனவே பெற்றோர்களுக்குத் தெரிந்த ஒன்றே என்று அவர்கள் நினைக்கும் பட்சத்தில் கோபமடைகின்றார்கள். அவர்கள், ஒருவகைப் பொறிபோன்ற கேள்விகளை அல்லது ஒரு அசிங்கமான பொய்யை அல்லது தர்மசங்கடமான ஒரு ஒப்புக்கொள்ளலைச் செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தக் கூடிய கேள்விகளை வெறுக்கிறார்கள்:

குயின்ரைன் - ஒரு ஏழு வயதுச் சிறுவன். தகப்பனால் வழங்கப்பட்ட புதிய துப்பாக்கியை உடைத்து விட்டான். அவனுக்குப் பயமாக இருந்ததால் உடைந்த துண்டுகளை வீட்டின் கீழ்த்தட்டில் உள்ள ஒரிடத்தில் மறைத்து வைத்தான். ஆனால், தகப்பன் துண்டுகளைக் கண்டுவிட்டார். குயின்ரைனை நோக்கி அவர் சில கேள்விகளைக் கேட்டார்.

தகப்பன்:- உனது புதிய துப்பாக்கி எங்கே?

குயின்ரைன்:- தெரியாது. எங்கேயாவது இருக்கும்.

தகப்பன்:- நீ அதை வைத்து விளையாடுவதை நான் காணவேயில்லையே....

குயின்ரைன்:- எனக்கு அது எங்கே இருக்கிறதென்றே தெரியாது.

தகப்பன்:- எனக்கு இப்ப அதைப்பார்க்க வேண்டும்

குயின்ரைன்:- ஆராவது அதைக்கள்வெடுத்து விட்டார்களோ என்னவோ?

தகப்பன்:- நீ ஒரு படு பொய்யன். நீ துவக்கை உடைத்து விட்டாய். இப்படி ஒளித்துத் தப்பிவிடலாம் எண்டு மட்டும் நினைக்காதை, சரியா? இந்த உலகத்தில் எனக்குப் பிடிக்காத ஒன்டு இருக்கிறதென்றால் அது பொய் சொல்லுவது தான்.

அத்துடன் தகப்பன் அவனுக்கு நீண்ட நாட்களுக்கு நினைவிருக்க வேண்டும் என்பதற்காக சில அடிகளையும் போட்டார்.

இது ஒரு தேவையற்ற சண்டை. ஒரு புலனாய்வுத்துறையாளன் போலவும், எதிர்த்தரப்பு வக்கீல் போலவும் நடந்து கொள்வதற்குப் பதில், தகப்பன் மகனுக்கு மிகவும் உதவியாக நடந்து கொண்டிருக்கலாம்.

''உனது துப்பாக்கி உடைந்திருந்ததை நான் கண்டேன்''

''அது கனகாலம் பாவிக்கவில்லை''

''அநியாயம். அது சரியானவிலை''

இப்படியான ஒரு உரையாடல் சில வேளை குழந்தைக்குச் சில பயனுள்ள பாடங்களைத் தந்திருக்கும். ''அப்பா என்னை விளங்கிக் கொள்கிறார். எனக்கு என்ன பிரச்சினையென்றாலும் அதை நான் அவருக்குச் சொல்லலாம். அவர் வாங்கித்தரும் பொருட்களை நான் கவனமாகப் பாவிக்க வேண்டும்.''

### நேர்மையின்மையை கையாள்வது எப்படி?

பொய் சொல்வது தொடர்பான எமது கொள்கை தெளிவானது; ஒரு புறத்தில் நாம் ஒரு புலனாய்வுத்துறை அதிகாரி போல நடந்து கொள்வதையோ அல்லது, பாவமன்னிப்பைக் கோருவதையோ செய்யக்கூடாது. மறுபுறத்தில் நாம் எது உண்மையோ அதைச் சொல்லத் தயங்கக் கூடாது. ஒரு மண்வெட்டியை மண் வெட்டி என்று சொல்லத் தயங்கத் தேவையில்லை. எமது குழந்தையின் நூல்நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட புத்தகம் அது திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய திகதிக்குப் பின்னும் கொடுக்கப்படாவிட்டால், நாம் இப்படிக் கேட்கக் கூடாது. '' நீ நூல்நிலையப் புத்தகத்தை திருப்பிக் கொடுத்து விட்டாயா? நிச்சயமாய் கொடுத்து விட்டாய் என்று உனக்கு ஞாபகமா? அப்படியானால், எப்படி உனது மேசை மீது அந்தப் புத்தகம் இன்னமும் இருக்கிறது?'' பதிலாக நாம் இப்படிச் சொல்லலாம்:

''உனது நூல் நிலையப் புத்தகத்தை நான் பார்த்தேன். அது கொடுக்கப்பட வேண்டிய திகதி முடிந்து விட்டது''

பாடசாலையிலிருந்து குழந்தை கணிதப் பாடத்தில் தேறவில்லை என்று (Fail) அறிவிப்பு வந்திருக்கும் ஒரு நிலையில் நாம் இப்படிக் கேட்கக்கூடாது.

''நீ கணக்குப் பாடத்தில் தேறிவிட்டாயா? உண்மையாக நீ தேறிவிட்டாயா? பொய் சொல்வது உன்னைக் காப்பாற்றப் போவதில்லை. நான் உனது ஆசிரியருடன் பேசினேன். நீ கணிதத்தில் தேறவில்லை என்று எனக்குத் தெரியும்.

பதிலாக இப்படிச் சொல்லலாம்:

''உனது கணித ஆசிரியர் நீ கணித பாட சோதனையில் சித்தியடையவில்லை யென்று அறிவித்திருக்கிறார். எங்களுக்குச் சரியான கவலை. என்ன செய்யலாம் என்று நாங்கள் யோசிக்கிறோம்''.

சுருக்கமாகச் சொன்னால், குழந்தையை தற்பாதுகாப்புக்காக பொய் சொல்ல வைக்கும் நிலைக்கு நாம் தள்ளிவிடக் கூடாது. ஒரு குழந்தை பொய் சொல்லும் போது நாம் ஒருபோதும் உணர்ச்சிவசப்பட்டு கோபப்படுவதோ, அல்லது ஒழுக்கவியல் பற்றிய உணர்வுகட்குட்பட்டோ அப்பொய்யை எதிர்கொள்வதோ கூடாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம், எமக்கு அந்த விடயங்களில் பொய் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று பிள்ளைக்கு உணர்த்துவதுதான்.

### களவு செய்தல்:

தமக்குச் சொந்தமில்லாத பொருட்களை குழந்தைகள் வீட்டுக்குக் கொண்டு வருவது ஒன்றும் புதுமையான விடயம் அல்ல. அது மிகவும் சாதாரணமான ஒன்றே! இத்தகைய 'களவு' கண்டுபிடிக்கப்படும் போது, போதனையில் இறங்குவதோ, நாடக பாணியில் அதைக் களவு என்று கூறி நடந்து கொள்வதோ தேவையற்றது. குழந்தை தனது சுயகௌரவம் பாதிக்கப்படாமலே சரியானதைச் செய்ய எம்மால் வழி நடாத்த முடியும்.

'அந்த வண்டி யாரோ ஒருவருடையது. அதை அவரிடம் திருப்பிக் கொடுத்து விடு''

''அந்தத் துப்பாக்கி உன்னுடையதல்லவே. அதைத் திருப்பி எடுத்துப் போ''

ஒரு குழந்தை கடையிலுள்ள உணவுப் பொருளைக் 'களவாடி' தனது பொக்கற்றினுள் போடும் போது, எத்தகைய உணர்வுகளையும் வெளிக் காட்டாமல் அதை எதிர்க்க வேண்டும். ''உனது இடது பொக்கற்றிலுள்ள 'லொலிபொப்' கடையில் இருக்கவேண்டியது.'' குழந்தை தனது பொக்கற்றுக்குள் 'லொலிபொப்' இல்லையென்று சொல்லுமானால், அதே வசனத்தை திருப்பிச் சொல்ல வேண்டும். ''உனது இந்தப் பொக்கற்றிலுள்ள 'லொலிபொப்' கடைக்குச் சொந்தமானது.'' அதற்கும் மறுப்பின், அந்த 'லொலிபொப்பை' எடுத்து விட்டு 'இது கடைக்குச் சொந்தமானது. அதை இங்கே தான் வைக்க வேண்டும்'' என்று கூற வேண்டும்.

### தவறான கேள்வியும், சரியான கூற்றும்:

உங்கள் குழந்தை உங்களது பொக்கற்றிலிருந்து பணத்தை எடுத்திருப்பது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமானால், அதனிடம் 'எடுத்தியா' என்று கேட்காமல் விடுவதே நல்லது. பதிலாக இப்படிச் சொல்லலாம். ''நீ எனது பொக்கற்றிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து விட்டாய். அதைத் திருப்பித்தா.'' அது பணத்தைத் தந்ததும் ''உனக்குப் பணம் தேவையானால், என்னைக் கேள். நாம் அதைப்பற்றி பேசலாம்.'' குழந்தை எடுக்கவில்லை என்று மறுத்தால் நாம் விவாதிக்கவோ, மன்னிப்புக் கோரும்படி கேட்கவோ கூடாது. மாறாக, 'நீ பணத்தை எடுத்தால் திருப்பித்தா' என்று சொல்ல வேண்டும். அது ஏற்கெனவே செலவு செய்யப்பட்டிருந்தால், உரையாடல், அந்தப் பணத்தை எப்படி மீள அறவிடுவது என்பது குறித்து அமைய வேண்டும். அதற்கு வழங்கப்படும் செலவுப்பணம் போன்றவற்றிலிருந்து அது அறவிடப்படலாம்.

முக்கியமானது என்னவென்றால், ஒரு குழந்தையை பொய்யன்/பொய்க்காரி என்றோ, அல்லது கள்ளன்/கள்ளி என்றோ கூறக்கூடாது என்பதுதான். குழந்தையை 'ஏன் அப்படிச் செய்தாய்' என்று கேட்பது அவ்வளவு பயன்தராது. சிலவேளைகளில் அதற்கேதான் ஏன் அப்படிச்செய்தேன் என்பது தெரியாமல் இருக்கும். அப்படியான வேளைகளில் 'ஏன்' என்ற கேள்வியின் அழுத்தம் இன்னொரு பொய்யினைச் சொல்வதில் தான் கொண்டுபோய் விடும்.

மிகவும் பயனுள்ளது என்னவென்றால், குழந்தை தனக்குப் பணம் தேவைப்படும் போது எம்முடன் பேச வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதை குறிப்பிடுவதாகும். ''உனக்கு ஒரு ரூபாய் தேவை என்ற விடயத்தை நீ எனக்கு சொல்லாதது எனக்குச்சரியான ஏமாற்றமாக இருந்தது'' ''உனக்குப் பணம் தேவைப்பட்டால் எனக்கு வந்து சொல்லு. நாம் அதைப்பற்றி பேசலாம்.''

எடுக்க வேண்டாம் என்று சொன்ன இடத்திலிருந்து ஏதாவது தின்பண்டத்தை எடுத்து குழந்தை சாப்பிட்டிருந்தால் அது எடுத்ததற்கான அடையாளமாக அதன் துகள்கள் அதன் முகத்தில் ஒட்டியிருக்கும். ஒரு நிலையில் இவ்வாறான கேள்விகளைக் கேட்கக்கூடாது.

''யாராவது இந்த இடத்திலிருந்த அந்தத் தின்பண்டத்தை எடுத்துச் சாப்பிட்டீர்களா?''

'யாராவது ஒருவர் தின்பண்டத்தை எடுத்ததை நீ கண்டாயா? நீ ஒன்றை சாப்பிட்டாயா? உண்மையாக நீ சாப்பிடவில்லையா?''

இத்தகைய கேள்விகள் குழந்தையை தவிர்க்க முடியாமல் பொய் சொல்ல வைக்கும். இது மேலும் அவமதிப்பையும் பாதிப்பையும் அதற்குக் கொடுக்கக்கூடும். அடிப்படையான விதி என்னவென்றால் **விடை தெரிந்திருக்கும் போது நாம் கேள்வி கேட்கக்கூடாது.** இத்தகைய சந்தர்ப்பத்தில் வெளிப்படையாகப் பேசுவது நல்லது.

''மகன்... நீ இவற்றை சாப்பிட்டிருக்கிறாய். நான் உன்னை எடுக்க வேண்டாம் என்று சொல்லியிருந்தேன். எனக்கு கோபமாக இருக்கிறது. அத்துடன் ஏமாற்றமாகவும் இருக்கிறது.

இந்தக் கூற்று போதுமான சரியான தண்டனையை வழங்குகிறது. இது அதனை அசௌகரியப்படுத்துவதுடன் தனது தவறான நடத்தை குறித்து பொறுப்புணர்வையும் பெற்றுக்கொள்ள உதவுகிறது.


**ஆங்கிலமூலம்:**
**டொக்டர் ஹெய்ம் ஜீஜினோல்ட்**
**தமிழில்: அருண்**

www.tamilarangam.net



# களுத்துறை — மகசீன் கைதிகள்:

# முடிவுறா அவல



"இவ் உண்ணாவிரதத்தில் நாங்கள் இறந்து விட்டால் எங்கள் கல்லறைகளில் இந்த வாசகங்களைப் பொறியுங்கள்"

**"சமாதானம், அமைதி, ஜனநாயகம், மனித உரிமை அடிப்படை உரிமை பாதுகாக்கப்படும், இளைஞர்களின் வாழ்வுக்கு உறுதியளிக்கப்படும் போன்ற கோஷங்களுடன் ஆட்சிக்கு வந்த பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியின் காலகட்டத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் போன்றவற்றைப் பயன்படுத்தித் தான்தோன்றித் தனமாகத் தமிழர்கள் என்ற காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டிருந்த காலகட்டத்தில் இக் கொடூர சட்டங்களில் பிடியிலிருந்து தப்பிக்கொண்டவர்கள் இங்கு நிம்மதியாக நித்திரை கொள்கிறார்கள்"**

எந்தவித காரணமுமின்றி 'வெறும் சந்தேகத்தின் பேரில்' கைது செய்யப்பட்டு எந்தவித விசாரணையுமின்றி வருடக்கணக்கில் சிறை வாழ்க்கையை அனுபவித்து வரும் 300க்கும் மேற்பட்ட தமிழ் இளம் கைதிகள் "விசாரணை செய்! அல்லது விடுதலை செய்!" என்ற கோஷத்தை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்தனர். உண்ணாவிரதம் ஆறாவது நாளாகவும் தொடர்ந்த போதிலும் கூட எந்த வித பதிலும் கிடைக்காத நிலையிலேயே தங்கள் சாவின் பின் மேற்படி வாசகத்தையாவது பொறிக்கும் படி கடிதம் ஒன்றின் மூலம் தெவித்துக் கொண்டார்கள்.

ஆரம்பத்தில் இவ்வு ண்ணாவிரதப் போராட்டம் என்பது பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தவுடன் மலையகத்தில் சல்லடை போட்டு கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட, ஓரளவு அரசியல் உணர்வு மிக்க அப்பாவி மலையக இளைஞர்களாலேயே தொடங்கப்பட்டது. என்றாலும் பின்னர் ஏனைய தமிழ் கைதிகளும் இவர்களுடன் இணைந்து கொண்டனர்.

### யார் இந்த மலையக இளைஞர்கள்?

1994 ஒகஸ்ட் பொதுத் தேர்தலின் போது ஐதேகவின் கொடூரப்பிடியில் இருந்து விடுபட பொ.ஐமு மாற்றாக இருக்கும் என நம்பி அதன் வெற்றிக்காக ஓரளவு குரல் கொடுத்த இளைஞர்களும், 'இல்லை. நீலமும். பச்சையும் ஒன்றே. இதற்கும் மேலான மாற்றொன்றே அவசியம்' என்ற கருத்தையுடைய இளைஞர்களும், அதேவேளை எந்தவித அரசியல் உணர்வும் இல்லாத (ஆனால் சிறை சென்றதன் பின் அரசியல் உணர்வுக்காட்பட்ட) இளைஞர்களும் இவ் 23 பேரில் அடங்குவர். இவர்களில் சிலர் மலையக மக்கள் முன்னணியின் தீவிர தொண்டர்கள். (அமைப்பாளர்கள்) ஒரு சிலர் இடது சாரி அரசியலைச் சார்ந்தவர்கள்.

**'நியாயமின்றி. எந்த வித நீதி விசாரணையும் இன்றி தடுப்புக் காவலில் உள்ள சகல அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படுவர்'** என்பது உட்பட பல வாக்குறுதிகளுடன் பதவிக்கமர்ந்த பொ.ஐமு. சொன்ன படி ஏற்கனவே தடுப்பில் உள்ள அரசியல் கைதிகளை விடுவிக்காதது மட்டுமல்லாது, பதவிக்கமர்ந்த இரு மாதங்களுக்குள்ளேயே தமிழ் இளைஞர்கள் மீதான அடக்கு முறையை பாரிய அளவில் தொர்டக்கிவிட்டது. அரசின் உள்ளக பேரினவாத இயந்திரங்கள் மாத்திரமல்லாமல் புறபேரினவாத கட்டமைப்பும் இந் நடவடிக்கைக்கு ஊக்கியாக தொழிற்பட்டன. குறிப்பாக சிங்கள பேரினவாத பத்திரிகைளகள் இவ் விடயத்தில் ஆற்றிய பங்களிப்பு முக்கியமானது. இதில் முதலில் பலியான இளைஞர்கள் மலையக மக்களே.

### கைதின் தொடக்கம்

1994 ஒக்டோபர் 27ந் திகதி அட்டன் நகரில் சென்ற அரசாங்கத்தினன் போது போடப்பட்டிருந்த பொலிஸ் தடுப்பு அரணில் வைத்து அங்கிருந்த பொலிஸார், ஒரு தமிழ் இளைஞர் ஒருவரை விசாரணை செய்யும் தொனியில் இம்சிக்கவே அதில் ஏற்பட்ட தகராறில் அவ்விளைஞன் அப் பொலிஸாரை அறைந்து விட்டு ஓடினான் 'புலி.. புலி.. பிடியுங்கள்.' எனக் கத்திக் கொண்டு பொலிஸார் துரத்தவே ஏனையோரும் அவனை விரட்டிச் சென்றுப்பிடித்துக் கொடுத்தனர் அவ்விளைஞர் நையப்புடைக்கப்பட்டு பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டார். அன்றே 'புலிப் . பீதி' அட்டன் நகரமெங்கும் பரப்பப்பட்டது. பொலிஸார் பல இளைஞர்களை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பலர் புலிகள் என்றும் ஏனையோர் அவர்களது ஆதரவாளர்கள் என்றும் பொலிஸார் சோடித்தனர். சிங்களத் தேசியப் பத்திரிகைகளான 'திவய்ன', 'லங்காதீப' ஆகிய பத்திரிகையாளர்களை அழைத்து பொலிஸாரினால் சோடிக்கப்பட்ட கதை அனைத்தையும கூறி அப்பத்திரிகைகளில் பிரசுரிக்கச் செய்தனர். (இத்தகவல்களை அந்த நேரமே 'சரிநிகர்' வெளியிட்டிருந்தது) அக் குறிப்பிட்ட சிங்களப் பத்திரிகைகளும் அச் செய்திகளை பொலிசாரை ஆதாரம் காட்டி வெளியிடாமல் உண்மையான தகவல்களைப் போலவே பெரும் கட்டுரைகளாக வெளியிட்டிருந்தன. குறிப்பாக 1994 டிசம்பர் 25ம் திகதி பத்திரிகையில் **'எதிர்காலத்தில் மலையகம் புலிவாயில் சிக்குமா?'** என்ற தலைப்பின் கீழ் கட்டுரை வெளியிட்டிருந்தது.

ஐலன்ட், திவய்ன பத்திரிகைகளும் **'மலையகத்தில் புலிப் பீதி'** பற்றி தொடர்ந்து பிரச்சாரம் செய்தன. அப்பிரச்சாரத்தின் சாரம்சத்தில் - கைது செய்யப்பட்ட இளைஞர்கள் புலிகள் என்றும், அவர்களிடம் இருந்து இயந்திரத் துப்பாக்கிகள், சயனைட் வில்லைகள் போன்றவை கண்டெடுக்கப் பட்டவையாகவும், பலர் வடக்கில் ஆயுத பயிற்சி அளிக்கப்பட்டு மலையகத்தில் ஆட்திரட்டுவதற்காக அனுப்பப் பட்டவர்கள் என்றும் சில எஸ்டேட்டுகளில் சமீபத்தில் நடந்த கொள்ளைச் சம்பவங்கள் இவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டன என்றும் சில வேலை நிறுத்தப் போராட்டங்களின் பின்னணியில் இவர்களே. முன்னின்றிருக்கிறார்கள் என்றும் பிரச்சாரம் செய்யப்பட்டது.

### விடுவிக்கப்பட்டவர்கள் சிலரே

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பலரில் குறிப்பிட்ட சிலர் மாத்திரமே விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் ஒரு சில இளைஞர்கள் பொ.ஐ.மு. சார்ந்திருந்த சில தொழிற் சங்கத் தலைவர்களின் தனிப்பட்ட தலையீட்டின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். குறிப்பாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மோகன் சுப்பிரமணியம் என்பவர் கைது செய்யப்பட்டவுடன், இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு 'புலிகளின் மலையக ஆயுதப்பயிற்சி தளங்களில் பயிற்சி பற்றிய வீடியோ நாடாவை கையில் கொண்டு சென்ற போது பிடிபட்டார்!' என்பதே.

அச் செய்தி திவய்ன பத்திரிகையில் தலைப்புச் செய்தியாகவும் அன்று வெளியிடப்பட்டிருந்தது. இத்தனைக்கும் அவரிடம் இருந்து குற்றத்திற்குரிய எதுவும் கண்டெடுக்கப்படவில்லை. சந்தேகத்தின் பேரில் அழைத்துச் செல்வதாகவே கூறி கூட்டிச் சென்று இக் குற்றச்சாட்டை தூக்கிப் போட்டனர். பின்னர். அவரது மைத்துனரான செங்கொடிச் சங்கத் தலைவர் ஒஏராமையாவின் தலையீட்டின் பின்னர் இரு மாதங்களின் பின் விடுவிக்கப்பட்டார்.

ஏனைய சிலர் ஒரு சில மாதங்களின் பின் விடுவிக்கப்பட்ட போதும் 1995 மார்ச் மாத அளவில் மொத்தம் 28 பேரை இச் சம்பவத்துடன் தொடர்பு இருப்பதாகக் கூறி வெவ்வேறு இடங்களில் தடுத்து வைத்திருந்தனர். 1995 ஜனவரியில் இவ் விளைஞர்களில் சிலரை பார்ப்பதற்காக சிறைகளுக்கு சரிநிகர் சென்று வந்ததுடன் அவர்களில் ஒரு சிலரின் வீடுகளுக்கும் சென்று நிலைமைகளைக் கண்டறிந்து எழுதியது. பெப்ரவரி மாதம் சரிநிகரில் இக் கட்டுரை பிரசுரமாகி இருந்தது.

இடையில் 5 பேர் விடுவிக்கப்பட்டு இன்று மொத்தம் 23 பேர் இரண்டு வருடங்களுக்கு கிட்டிய காலமாக தொடர்ச்சியாக சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலர் கைது செய்யப்படும் போது பொலிசாரோடு கூட 'தலையாட்டி முண்டங்களை' (ஆட்காட்டிகள்) (தலை, முகம் மூடப்பட்டு கண்கள் மாத்திரம் பார்க்கத்தக்க வகையில் ஒட்டை போடப்பட்டு கைகள் இரண்டும் பின்னால் கட்டப்பட்ட நிலையில் இவர்கள் கொண்டுவரப்பட்டு அடையாளம் காட்டுவார்கள்.)யும் அழைத்து வந்திருந்ததாக இவ்விளைஞர்களின் பெற்றோர்களில் சிலர் சரிநிகருக்கு தெரிவித்திருந்தனர்

### ஜனாதிபதிக்கு கடிதம்

வெவ்வேறு இடங்களில் ஆரம்பத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவ்விளைஞர்களை சென்ற வருட மத்தியில் இரு வேறாக பிரிக்கப்பட்டு சிலர் கொழும்பு 'மகசீன்' சிறைச்சாலையிலும் பலர் களுத்துறைச் சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டனர்.

இவ்விளைஞர்களில் சிலர் கைது செய்யப்பட்ட காலத்தில் மிகுந்த சித்திர வதை செய்யப்பட்டிருக்கின்றனர். சிலரது வாக்கு மூலம் பொலிஸாரால் சிங்களத்திலேயே எழுதப்பட்டு பலாத்காரமாக கையெழுத்து வாங்கப்பட்டுள்ளது. இது விடயமாக தற்போது தடுப்புக்காவலில் உள்ள டொக்டர் சாந்தகுமார் (இவர் புதிய ஜனநாயக முன்னணியின் (New Democratic Front) தலைவர்களில் ஒருவர். ஜேவிபியை சேர்ந்தவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் சில வருடங்கள் இதற்கு முன் சிறை வாழ்க்கையை அனுபவித்திருப்பவர்) இவர் இது பற்றி ஜனாதிபதிக்கு கடந்த வருடம் அனுப்பியிருந்த கடிதம் ஒன்றில்

**"...கடந்த மார்ச் மாதம் 20ம் திகதி இட்டு தாங்கள் அனுப்பியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விடயங்களில் நம்பிக்கை வைத்தே நான் எனது விடுதலை தொடர்பாக மேற்கொண்டிருந்த உண்ணாவிரதத்தைக் கைவிட்டேன்.... உங்கள் கடிதத்தில் பாதுகாப்பு அமைச்சு கூடிய விரைவில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளும் என குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் இது வரை எந்த விதமான முயற்சிகளையும் நான் காணவில்லை. 1994 டிசம்பர் 24ந் திகதி பொலிஸார் என்னிடம் இருந்து வாக்கு மூலம் எடுத்தனர். எனது தாய் மொழியில் வாக்கு மூலம் பதிவு செய்யப்படவில்லை . அதில் கையெழுத்து இடும் போது கூடஅதில் என்ன இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது' என்று நான் கூறிய போது 'நீ சொன்னவை தான் பதியப்பட்டுள்ளன. கையெழுத்திடு!' என வற்புறுத்தினர்.. டிசம்பர் 23ம் திகதியில் இருந்து ஜனவரி முதலாம் திகதி வரை நான் சித்திர வதைகளுக்கு உள்ளாக்கப்பட்டேன்.... இது தொடர்பாக விசாரணை ஒன்று நடத்தப்படுமானால் நான் விபரமாக அத்தனையையும் வாக்கு மூலம் அளிக்க தயாராகவுள்ளேன்.**

**....என்ன காரணத்திற்காக நான் கைது செய்யப்பட்டேன் என்பதை கேட்கத் தான் எனக்கு உரிமை இல்லை என்றால் எனது வாக்கு மூலத்தை எனது தாய் மொழியில் வழங்கக் கூட எனக்கு உரிமை இல்லையா....?"** எனக் குறிப்பிட்டிருந்தார் அக்கடிதத்தில்.

உண்மைதான். பலருக்கு தாங்கள் என்ன காரணத்திற்காக கைது செய்யப்பட்டோம் என்பது கூட தெரியாது. ஒரு புறம் பொலிஸார் சிங்களத்தில் தாங்கள் விரும்பியதை எழுதி பலாத்காரமாக கையெழுத்து வாங்கியிருக்கிற அதே நேரம், மறு புறம் தமிழில் வாக்கு மூலம் எடுக்கப்பட்ட ஒரே காரணத்தால் பலரின் வழக்கு தொடரப்படாமலும் உள்ளமை அரசின் இனக் கொள்கையை தோலுரித்துக் காட்டுகிறது.

இவர்கள் விசாரணை செய்யப்படாமல் இருப்பதற்கான காரணம் கேட்கப்படும் போதெல்லாம் சட்டமா அதிபரின் பிரதிநிதியான சிரேஷ்ர அரச சட்டவாதி விஜித மலல்கொட, குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் தமிழிலில் இருப்பதால் அதனை மொழி பெயர்ப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும் அதனால் த்ான் குற்றப்பத்திரிகையை தயாரிப்பதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் கூறி அவகாசம் கேட்டு இதனை இழுதடித்து வந்துள்ளனர். இவ் அப்பாவி இளைஞர்களின் நலனில் அரசு காட்டும் அக்கறை அது தான். மறுபுறம் தங்களது பிள்ளைகளையும் தாய்மாரையும் விட்டுப்பிரிந்து சூனியத்துக்குள் வதைபட்டுக் கொண்டிருக்கும் இவ்விளைஞர்களின் நிலை பற்றி இவர்களுக்கு என்ன கவலை.

இதனால் தான் இவ்விளைஞர்கள் தங்கள் அவலங்களை வெளியுலகத்திற்கு தெரியவைத்து அவர்களுக்கூடாகவாவது அரசை நிர்பந்திக்கலாம் என்ற நம்பிக்கையிலேயே தொடர்ச்சியாக அவ்வப்போது உண்ணாவிரதம் இருந்து வந்துள்ளனர்.

### "விடுதலை செய்! அல்லது விசாரணை செய்!"

1995 மார்ச் மாதம் "விடுதலை செய்! அல்லது விசாரணை செய்!" என்ற கோஷத்துடன் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை டொக்டர் சாந்தகுமார் தலைமையில் களுத்துறை சிறைச்சாலையில் தொடங்கப்பட்டது. இவ்வுண்ணாவிரதம் ஏப்பரல் முதலாம் திகதி அன்று ஜனாதிபதியினால் அனுப்பப் பட்டு கிடைத்த கடிதத்தில் அளிக்கப்பட்டிருந்த உத்தர வாதத்தின் காரணமாக கைவிடப்பட்டது. ஆனால் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் ஏனைய வாக்குறுதிகள் போலவே இதுவும் 'பம்மாத்து வாக்குறுதி' யாக இனங்கண்ட இவ் விளைஞர்கள் இடைக்கிடை உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தி இருந்திருக்கிறார்கள். (எந்தெந்த காலப்பகுதியில் அவ்வுண்ணாவிரதங்கள் நடாத்தப்பட்டன? அப்போது முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகள் என்ன என்பது பற்றிய தகவல்களை சரியாக பெற்றுக் கொள்ள முடியவில்லை.)

இந்த நிலையிலேயே மகசீன் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் இன வெறியர்களால் கோரத்தனமாக தாக்கப்பட்ட சம்பவம் கடந்த பெப்ரவரி 19ம் திகதி நடந்தேறியது அச்சம்பவத்தை தொடர்ந்து நடந்த உண்ணாவிரதப் போராட்டங்கள் ஏனைய சிறைச்சாலைக் கைதிகளையும் உற்சாகம் கொள்ளச் செய்த போராட்டமாகவே கொள்ளப்படுகிறது. அவ்வுண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதியிலும் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் பம்மாத்தே என்பதும் இது வரை அதில் ஒன்றும் நிறைவேற்றப் படவில்லை என்பதும் வேறு கதை.

அவ்வுண்ணாவிரதப் போராட்டத்தின் முடிவிலேயே களுத்துறைச் சிறைச்சாலையிலும் வெறும் 'அந்தக் குறிப்பிட்ட மலையக இளைஞர்கள்' மாத்திரமல்லாது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பலவருடகாலமாக தடுப்புக் காவலிலுள்ள சகல தமிழ் இளைஞர்களும் 'தமிழ் அரசியல் கைதிகள்' என்ற பதாகையின் கீழ் அணிதிரண்டனர்.

அங்கிருந்த 183 கைதிகள் கையெழுத்திட்டு யூன் 5ம் திகதியிட்ட கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர் அதில் ஏற்கனவே வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எந்தவித நடைமுறைச் சாத்தியத்தையும் அளிக்காததையும்; இனிமேலும் தாங்கள் மேலோட்டமாக வழங்கப்படுகின்ற வாக்குறுதிகளை நம்பப் போவதில்லை என்றும் "விடுதலை செய் அல்லது விசாரணை செய்!" எனும் தங்களது சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை யூன் 23ம் திகதி ஆரம்பிக்கப்போவதாகவும் அறிவித்தனர். இம் முறை இவ்வுண்ணாவிரதப் போராட்டத்தில் பல கைதிகள் கலந்து கொள்ளப் போவதாகவும் அறிவித்தனர். இவ்வுண்ணாவிரதத்தின் அடையாள உண்ணாவிரதப் [...]
16ம் திகதி நடத் [...]
அறிவித்தனர்.

### போராட்டத்தை [...] மு[...]

இவ்வறிவித்தலுக்கு [...]
பதில் அரசின் தரப் [...]
வழங்கப்படவில்லை [...]
இவ்வுண்ணாவிரத [...]
எப்படி நசுக்குவது [...]
போடுவதை கா[...]
வந்தது. 16ம் திகதி [...]
உண்ணாவிரதப் [...]
ஏற்பாடுகளை தமி[...]
வந்த வேளை அத[...]
திகதியன்று [...]
சிறையதிகாரிக[...]
மலையக இளை[...]
வேறாக பிரித்து [...]
'மகசீனில் அடை[...]
இவ்விளைஞர்கள் [...]
முறித்து விட்டதா[...]
பண்ணிவிட்டத[...]
கண்டது.

ஆனால் 'உங் [...]
உண்ணாவிரதப் [...]
தடுக்க முடியுமே[...]
போராட்டத்தை [...]
முடியப்போவதில் [...]
மாற்றத்தால் நா[...]
பெற்றோம்!' எ[...]
விட்டனர்.

உண்மையில் கை[...]
இப்போது க[...]
மட்டுமல்லாது ம[...]
அரசியல் கைதி[...]
கீழ் ஒரணி தி[...]
போராட்டத்தி[...]

www.tamilarangam.net





களுத்துறை, மகசீன் ஆகிய இரு சிறைச் சாலைகளிலும் மேற்கொள்ளப்பட்டன. 22ம் திகதி அரச தரப்பில் இருந்து எந்தவித பதிலும் அளிக்கப்படாததைத் தொடர்ந்த 23ந் திகதி திட்டமிட்ட படி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

"உண்ணாவிரதிகள் 3 தேக்கரண்டி உப்பு நீரைத் தவிர எதுவிதமான திரவ, திண்ம ஆகாரங்களையும் உட்கொள்ளவில்லை. சிலரது உடல் நிலைமை மோசமான போது சிறை நிர்வாகம் சிறைச்சாலைக்கு கொண்டு செல்ல முற்பட்ட போதும் அவ்வுண்ணாவிரதிகள் அதனை நிராகரித்து விட்டனர். உறுதியான முடிவு கிட்டும் வரை உறுதியாகத் தொடர்வதாக குறிப்பிட்டனர்."

இவ்வாறு இவ்வுண்ணாவிரதப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய டொக்டர் சாந்தகுமார் சரிநிகருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தார். தமது உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுவாதாயின் சர்வதேச மனித உரிமை சங்கம், சர்வதேச சமாதானப் படை (Peace Brigade International), தேசிய சமாதானப் பேரவை (National Peace Brigade), சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International), ஜனநாயக உரிமைகளுக்கான இயக்கம் போன்ற அமைப்புகள் அல்லது அந்த அமைப்புகளின் சிலவற்றின் முன்னிலையில் எமது கோரிக்கைகள் தொடர்பாக உத்தரவாதம் அளிக்கப்படுமாயின் நாம் எமது உண்ணாவிரதப் போராட்டத்தை தற்காலிகமாகவேனும் கைவிடத் தயார் என்றும் தமிழ் கைதிகள் தெரிவித்திருந்தனர். இதனைத் தொடர்ந்து யூன் 26ம் திகதி உண்ணாவிரதிகளை பார்வையிடச் சென்ற அரச பிரதிநிகள் குழுவில் சட்டமாஅதிபரின் பிரதிநிதியான சிரேஷ்ர அரச சட்டவாதி கம்லத் 'காரணம் இன்றி நீண்ட காலம் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து அதிர்ச்சியடைகிறேன். நேர்மையாகவே நான் செயற்படுகிறேன். ஒரு மாத காலத்துக்குள் வழக்குகள் தாக்கல் செய்யக் கூடியவர்களுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படும். புனர்வாழ்வுக்கு அனுப்பக்கூடியவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புவோம். விடுதலை செய்யக் கூடியவர்களை விடுதலை செய்வோம்.' என வாக்குறுதிகளை அடுக்கிக்கொண்டே போனார்.

ஆயினும் அவ்வாக்குறுதிகளை தாங்கள் நம்பப்போவதில்லை என்று உண்ணாவிரத்தைக் கைவிட மறுத்து விட்டனர் கைதிகள். கடந்த கால அனுபவங்களைக் கருத்திற் கொண்டு இவ்வுறுதி மொழிகளை ஏற்றுக் கொள்ள தங்களால் முடியாது என உறுதியாகத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்தே உண்ணாவிரதத்தின் ஒரு வார முடிவில் (ஏழாவது நாள்) இலங்கை தேசியத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி சிறைச்சாலை அதிகாரிகளுடனும் கைதிகளுடனும் பேசி சில உத்தரவாதங்களின் பின்னர் உண்ணாவிரதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இரு சிறைச்சாலைகளிலுமாக மொத்தம் 384 தமிழ் க்கைதிகள் இவ்வுண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தனர். வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் 24 வயதுக்குட்பட்ட; 50 வயதுக்கு மேற்பட்ட கைதிகளின் விடுதலை பற்றிய முடிவை ஒரு வாரகாலத்தில் காண்பதாகவும்; 3 முதல் 6 மாத காலத்திற்குள் ஏனைய சகல கைதிகளையும் விசாரணை செய்வதாகவும் உறுதி மொழி வழங்கப்பட்டது.

### தமிழ்த் தலைவர்களின் முதலைக் கண்ணீர்!

இது இப்படி இருக்க இக் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தின் போது பல அரசியல் கட்சிகள் போட்டிபோட்டுக் கொண்டு அறிக்கைகள் வெளியிட்டன. சில அரசியற் தலைவர்கள் போட்டி போட்டுக் கொண்டு கைதிகளைப் போய்ப் பார்வையிட்டனர். இங்கு தான் 'தமிழ் தலைவர்கள்' என்போர் அம்பலப்பட்டு போகிறார்கள் கடந்த பெப்ரவரி மாதம் மகசீன் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் தாக்கபபட்டதைத் தொடர்ந்து நடந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்தவர் என்ற பெருமை ஜோசப் பரராஜசிங்கம் எம்பி. அவர்களைச் சாரும். வாக்குறுதிகளுக்கு தானே பொறுப்பு. தன்னில் நம்பிக்கை வைத்து உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு அன்று கூறியிருந்தவர் அவர். ஆனால் இன்று வரை கைதிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. அத்தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள். அதிகாரிகள் இன்னமும் அங்கு சுதந்திரமாக உலாவுகின்றனர் அவர்கள் இடமாற்றம் செய்யப்படவில்லை.

1. கைதிகள் அவர்களது சொந்த இடங்களில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட வேண்டும்.
2. தாக்குதல் சம்பவம் பற்றிய சுதந்திர விசாரணை வேண்டும்.

போன்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்த போதும் இன்னமும் அவை கிஞ்சித்தும் செய்யப்படவே இல்லை என சிறைக்குள் இருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன. திரு. ஜோசப் எம்பி. அவர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்? **"எமது அன்றைய பட்டினிப் போராட்டத்தின் அர்த்தம் தான் என்ன? இது வரை ஜோசப் அவர்கள் இது பற்றி வினா எழுப்பி இருக்கிறாரா? ஆக்க பூர்வமான முயற்சிகள் ஏதாவது செய்திருப்பாரா? ஆனால் தானே உண்ணாவிரத்தை முடித்து வைத்ததாக பத்திரிகைகளுக்கு அறிக்கை மட்டும் அவரால் வெளியிட்டுக் கொண்டு கதாநாயகனாக இருக்க முடிகிறது. இவர்களது செய்கைகள் ஒரு வகையில் அரசாங்கம் செய்வதை விட துரோககரமான செயல் இல்லையா?"** என்று கேட்கிறார்கள் பாதிக்கப்பட்ட கைதிகள்.

இன்று அதே வேலையை செய்திருக்கிறார் திரு.செல்லச்சாமி அவர்கள். இம் முறை உண்ணாவிரத்தை முடிக்க முன்னின்றவர் செல்லச்சாமி அவர்களே. ஒரு வார காலத்தில் முடிவு காண்பதாக சொல்லப்பட்ட விடயம் இன்னும் ஏன் செயற்படுத்தப்படவில்லை. என்பதையிட்டு இரு வாரங்களாகியும் இன்னமும் அவர் கேள்வி எழுப்பியதாக தெரியவில்லை. "உறுதி மொழிகள் குறித்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏதாவது செய்யப்பட்டுள்ளதா? என்று **ஆற்றாமையுடன்** கேட்கிறார்கள் இரண்டாவது தடவையும் ஏமாந்து விட்டோமோ என்று எண்ணிக் கொண்டிருக்கும் கைதிகள்.

இது அப்படியிருக்க இவர்கள் விடயத்தில் மலையக மக்கள் முன்னணியின் நடவடிக்கையோ இன்னமும் மோசமான ஒன்றாக உள்ளது. சிறையில் இருக்கும் கைதிகளை பார்வையிடுவதற்காக மமமு. சார்பில் பி.ஏ. காதர், பிரதி அமைச்சர் சந்திரசேகரன் ஆகியோர் சென்றிருந்த போது_ திரு.சந்திரசேகரன் இப்படிக் குறிப்பிட்டுள்ளார் **"இன்நிலையில் நாங்கள் இதற்கு ஆதரவு அளிப்தோ அல்லது கைவிடும் படி கோருவதோ முறையானது அல்ல...."** (தினகரன். யூன் 21)

தற்போது நடத்தப்படும் மக்கள் போராட்டங்களில் எதற்குத் தான் அவர் ஆதரவு தெரிவித்திருக்கிறார். **'ஆதரவும் அளிக்க மாட்டோம். கைவிடும் படியும் சொல் மாட்டோம்'** என்ற இதே தொணியை நடந்து முடிந்த மலையக வேலைநிறுத்தப் போரடடத்தின் போதும் அவர் கூறியிருந்ததை இந்த இடத்தில் ஞாபகப்படுத்துவது பொருந்தும். அவ்வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது 'நாங்கள் தொழிலாளர்களை வேலை நிறுததத்தில் ஈடுபடவும் சொல்லவில்லை. ஈடுபடவேண்டாம் என்றும் சொல்லவில்லை.' என்று தெரிவித்ததன் மூலம், தான் தொண்டாவையும் வென்ற தொண்டன் என்று காட்டியுள்ளார்.

தங்களின் அமைப்பைச் சேர்ந்த, தங்களுடைய அரசியலை முன்னெடுத்த, தங்களின் அமைப்பாளர்களின் விடுதலையில் காட்டும் அக்கறை இது தான் என்றால் அவரது அமைப்பில் உள்ள ஏனையோருக்கும் இது தான் கதியோ என்ற கேள்வி எழுப்பப்படுவதை தவிர்க்க முடியவில்லை.

வழமைபோல் இ.தொ.காவும் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களும் இவ்விடையத்தில் கொஞ்சமும் கவலையற்றவர்களாகவே காணப் பட்டார்கள். அது அவர்களின் பண்பு. இக் கைதிகள் விடயத்தில் அறிக்கை வெளியிட்ட ஈ.பி.டி.பி, கூட்டணி, மலையக மக்கள் முன்னணி என்பவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இவ்விளைஞர்களின் இவ் அவலத்திற்கு காரணமானவர்கள் தான்.

இவ்விளைஞர்கள் கைது செய்யப்படுவதற்கும் இன்று வரை விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கும். விடுதலை செய்வதில் இழுத்தடிப்பதற்கும் காரணமாக இருக்கின்ற அவசரகால சட்டத்திற்கு பாராளுமன்றத்தில் தொடர்ந்து ஆதரவளித்து வருபவர்கள் தானே இவாகள். இந்த இளைஞர்கள் இன்று அனுபவித்து வரும் இத்தனை கொடுமைகளுக்கும் ஒரு புறம் காரணமாக இருந்து விட்டு மறுபக்கம் அறிக்கை விட்டு அவர்கள் மீது பச்சாதாபம் கொண்டவர்கள் போல நடந்து கொள்வதில் என்னதான் அர்த்தம். வெறும் முதலைக் கண்ணீர் என்பதைத் தவிர .

கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை தற்காலிகமாகவே இடைநிறுத்தி இருப்பதாக எப்போதோ அறிவித்து விட்டார்கள். வாக்குறுதிகளும் செயற்படுத்தப் போவதில்லை. என்பதையும் விளங்கிக் கொள்ள முடிகிறது. அடுத்த போராட்டத்திற்கு வெகு நாட்கள் இல்லை. இந்த நிலையில் இவ் அப்பாவி இளைஞர்களின் விடுதலைக்கான ஆக்க பூர்வமான முயற்சிகளை எடுக்காவிட்டால் கூட பரவாயில்லை அரசியல் வாதிகள் அவர்களது விடுதலைக்கான உரிமைக் குரலை கொச்சைப்படுத்தாமலாவது இருந்தாலே போதும். என்று ஆத்திரப்படுகிறார் ஒரு கைதி.

கைதிகளை சென்று பார்வையிட்ட சரிநிகரின் கேள்வி இது தான் இந்தக் கைதிகளின் விடுதலைக்காக குரல் கொடுக்க நேர்மையாக முன்வர யாரும் இல்லையா?

இந்த நாட்டில் மனித உரிமை உணர்வு கூட மரத்துப் போய்விட்டதா?

**-என்.எஸ்.குமரன்**



டத்தை யூன்
போவதாகவும்

அரசு செய்த

ய பூர்வமான
வழமைபோல்
உஷாரானது
ாராட்டத்தை
திட்டத்தைப்
செலவழித்து
அடையாள
ட்டத்திற்கான
திகள் செய்து
தினமான 15ம்
டர் ரென் று
கைதிகளில்
ல் 17 பேரை
ண்டு சென்று
இதன் மூலம்
ாராட்டத்தை
ாத்தவிடாமல்
அரசு கனவு

அடையா
டத்தை தான்
ாங்கள் மையப்
க்க உங்களால்
ங்கள் செய்த
ின்னும் பலம்
திகள் சவால்

சொன்ன படி
கைதிகள்
திகளும் 'தமிழ்
ற அணியின்
. 23ம் திகதி
ஆயத்தங்கள்


# மகசீன்- கைதானோர் விபரம்


| பெயர் | கைது செய்யப்பட்ட திகதி | கைது செய்தவர் | கைது செய்யப்பட்ட இடம் |
|---|---|---|---|
| சின்னப்பொடியன் தனபாலசிங்கம் | 5.5.93 | Civil Police | வவுனியா |
| கந்தசாமி லிங்கேஸ்வரன் | 6.9.93 | Navy | கொழும்பு |
| இளையபெருமாள் பத்மநாதன் | 6.11.93 | Police | கொழும்பு |
| தர்மலிங்கம் சூரியகாந்தன் | 13.2.94 | Army | மட்டக்களப்பு |
| சந்தனம் விக்கினேஸ்வரன் | 1.1.94 | Army | வவுனியா |
| சுப்பிரமணியம் நவரட்னம் | 23.6.94 | Army | கொழும்பு |
| கிருஸ்ணபிள்ளை திலகநாதன் | 26.6.94 | Army | கதிரவெளி |
| அருந்தன்பிள்ளை பாலச்சந்திரன் | 22.9.94 | CID | கொழும்பு |
| ஆறுமுகம் முத்துவிநாயகம் | 1.11.94 | CSU | ஹட்டன் |
| சின்னத்தம்பி தேவதாஸ் | 1.11.94 | CSU | ஹட்டன் |
| சாமிமுத்து பெனடிக்ட் | 14.12.94 | CSU | சிலாபம் |
| நாகராசா பரமேஸ்வரன் | 24.6.94 | Army | கொழும்பு |
| செபராஜா டயஸ் | 27.11.94 | Army | கொக்குத்தொடுவாய் |
| தங்கவேல் சிவபாலன் | 8.3.95 | Police | கொழும்பு |
| மனோகரநாதன் மன்மதராஜா | 30.4.95 | Police | மன்னம்பிட்டி |
| சுப்பிரமணியம் கணேஸ் | 30.4.95 | Police | மன்னம்பிட்டி |
| ராமசாமி கைலையநாதன் | 7.11.95 | Police | அநுராதபுரம் |
| கிருஸ்ணபிள்ளை அருணகுமார் | 7.11.95 | Police | அநுராதபுரம் |
| நடராஜா ராஜேஸ்வரன் | 14.9.95 | Police | கொழும்பு |
| பத்மநாதன் சிவநாதன் | 16.8.95 | STF | கொழும்பு |
| கணபதிப்பிள்ளை சசிகுமார் | 11.12.95 | Police | கல்லோயா |
| பெருமாள் துரைராஜ் | 24.10.95 | CID | கொழும்பு |
| சித்திரவேல் மணிவண்ணன் | 17.9.95 | CSU | வவுனியா |
| நவரட்னராஜா கோபிராஜா | 2.11.95 | Police | தலாவ |
| பத்மநாதன் பெனடிக்ட் பத்மகுமார் | 20.10.95 | CDB | வவுனியா |
| பத்மநாதன் பெனடிக்ட் பத்மஜெகன் | 20.10.95 | CDB | கொழும்பு |
| ரணசிங்க ஆராச்சிகே தர்மதாச | 20.10.95 | CDB | கொழும்பு |
| குமாரசாமி ஜெகவீரதேவர் | 20.10.95 | CDB | கொழும்பு |
| கந்தையா அருந்தவநாதன் | 20.10.95 | CDB | கொழும்பு |
| ராசரட்னம் ஜீவகுமார் | 29.11.95 | CDB | கொழும்பு |
| பொன்னையா சத்தியநாதன் | 16.11.95 | CDB | கொழும்பு |
| சிவநேசராசா கிருவைகுமார் | 12.9.95 | STF | திருக்கோவில் |
| செல்வரட்னம் செல்வகுமார் | 2.10.95 | CDB | கொழும்பு |
| கதிரமலை ஸ்ரீபுஸ்பராஜா | 2.10.95 | CDB | கொழும்பு |
| சங்கரப்பிள்ளை சுரேஸ் | 16.12.95 | CDB | கண்டி |
| கிட்டினன் நவனீதன் | 25.9.95 | CDB | கொழும்பு |
| பெருமாள் ரமேஸ் | 23.10.95 | NIB | வவுனியா |
| அமிர்தநாதர் சில்வெஸ்டர் | 25.11.95 | Army | வவுனியா |
| ஆனந்தசாமி அமிர்தராஜ் | 12.12.95 | CDB | கொழும்பு |
| பாக்கியராசா ஆனந்தராசா | 4.10.95 | STF | குச்சங்குடா |
| அந்தோணிப்பிள்ளை பாஸ்கரன் | 3.10.95 | STF | குச்சங்குடா |
| முருகேசு முருகமூர்த்தி | 3.10.95 | STF | குச்சங்குடா |
| வேலுப்பிள்ளை சங்கரலிங்கம் | 2.10.95 | STF | குச்சங்குடா |
| வன்னியசிங்கம் அகிலராஜன் | 22.11.95 | STF | திருக்கோவில் |
| தங்கராசா கோவிந்தராசா | 16.11.95 | Police | கல்முனை |
| எட்மன்ட்குமார் அலெக்சாண்டர் | --------- | Police | கற்பிட்டி |
| ராசசிங்கம் ஜேசுசகாயம் | 27.12.95 | CDB | கொழும்பு |
| ரத்தினவேல் மகேசன் | 18.8.95 | STF | கொழும்பு |
| கணபதிப்பிள்ளை நவரட்னம் | 22.8.95 | CID | வவுனியா |
| கணபதிப்பிள்ளை ராஜேந்திரன் | 4.6.96 | NIB | கொழும்பு |
| முருகுப்பிள்ளை இந்திரகுமார் | 22.2.96 | Army | கொழும்பு |
| அந்தனி ஜோர்ஜ் அருள்ராஜா | 23.3.96 | Army | வவுனியா |
| நடராசா ரவி | 2.4.96 | Army | கொழும்பு |
| ஏ.எஸ்.டெனிஸ் ஹட்சன் | 22.2.96 | Army | தாண்டிக்குளம் |
| இயக்குமி தங்கேஸ்வரன் | 29.2.96 | CDB | கொழும்பு |
| நந்தகோபன் ஜீவன் | 6.2.96 | Army | வவுனியா |
| நல்லதம்பி பத்மநாதன் | 28.2.96 | Police | கொழும்பு |
| வடிவேல் இந்திரகுமார் | 28.2.96 | Police | கொழும்பு |
| பரமராஜா கௌரிதாசன் | 16.4.96 | Army | வவுனியா |
| நல்லையா உதயனன் நகுலன் | 17.4.96 | Army | கொழும்பு |
| முருகேசு மயில்வாகனம் | 20.3.96 | Navy | காரைநகர் |
| கந்தையா பேரின்பநாயகம் | 21.2.96 | Navy | காரைநகர் |
| செல்த்தம்பி தட்சணாமூர்த்தி | 7.3.96 | Army | கொழும்பு |
| ரட்னசபாபதி மோகனதாஸ் | 17.6.96 | Army | கொழும்பு |
| ராமு ரட்னம் | 15.4.96 | CDB | கொழும்பு |
| பெரியசாமி ராமகிருஸ்னன் | 22.1.96 | CSU | வவுனியா |
| ராமசாமி யவயோகசுந்தரம் | 2.2.96 | CSU | வவுனியா |
| வெற்றிவேல் சிவன் | 25.2.96 | STF | மட்டக்களப்பு |
| சின்னராசா சிவகுமார் | 25.2.96 | STF | அக்கரைப்பற்று |
| நடராசா கருணாகரன் | 27.2.96 | STF | அக்கரைப்பற்று |
| நாகலிங்கம் சிவகுமார் | 25.2.96 | STF | கல்லடி |
| சிவநேசராசா கிருபகுமார் | 12.9.95 | STF | திருக்கோவில் |
| இளையதம்பி ஜெயராசா | 20.2.96 | STF | திருக்கோவில் |
| வரதையாகமலநாதன் | 30.9.94 | | |
| ஆறுமுகம் காளிமுத்து | 27.10.94 | | |
| பிச்சைமுத்து சந்திரன் | 27.10.94 | | |
| சுப்பு உதயகுமார் | 2.11.94 | | |
| அழகப்பன் சாந்தகுமார் | 10.12.94 | | |
| வீரையா சண்முகநாதன் | 3.1.95 | | |
| நாச்சியப்பன் சிவனடியான் | 13.2.95 | | |
| தேவபதி சவரிமுத்து | 16.3.95 | | |
| பெரியசாமி ஜெயக்குமார் | 15.5.95 | | |
| பொன்னையா சந்திரகுமார் | 21.5.95 | | |
| தேவசகாயம் பிரான்சீஸ் | 16.3.95 | | |
| அழகன் அய்யாதுரை | 2.6.95 | | |
| அருணாசலம் லோகேஸ்வரன் | 27.10.94 | | |
| பொன்னையா சரவணகுமார் | 27.10.94 | | |
| சோலமலை லோகநாதன் | 31.10.94 | | |
| சாத்தையா ராஜமணி | 15.11.95 | | |
| அழகு கோட்டைராஜா | 2.2.96 | | |
| பரமசிவம் சௌந்தரராஜன் | 14.1.94 | | |
| விஸ்வநாதன் யோகலிங்கம் | 1.11.95 | CDB | கொழும்பு |
| செல்வநாயகம் டிலான் | 25.3.95 | CID | வவுனியா- |
| கதிர்காமுத்தம்பி ஜெயபாலன் | 21.11.96 | CDB | கொழும்பு |
| சிவபாதசுந்தரம் குணசீலன் | 18.4.96 | Army | கொழும்பு |
| வண்ணமணி சொர்ணதாசன் | 17.4.96 | Army | கொழும்பு |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நிறங்களுடன் ஒரு சமாச்சாரம்

## விஸ்வம்



ஓவியர் விஸ்வம் (46) தமிழகத்தின் இளைய தலைமுறை கலைஞர்களில் ஒருவர். 1995ன் அகில இந்திய அளவில் உன்னதமான ஓவியத்திற்கான புதுதில்லி லலிதகலா அக்கடமியின் தேசிய விருது பெற்றவர். தற்போது மத்திய அரசின் நெசவாளர் பணி மையத்தில் சென்னையில் பணியாற்றி வருகிறார். ஓவியங்களைத் தவிர சமகால சஞ்சிகைகளில் விளக்கப் படங்களும் புத்தகங்களுக்கு முகப்பு அட்டைகளும் செய்து வருகிறார். இதனூடாக சமகால ஓவியத்தின் பார்வையாளர் வட்டத்தை அகலப் படுத்த முயல்கிறார்.

உள்ளார்ந்த புரிதலுடன் கன்வஸ்சுடனான எனது உரையாடல்கள் தான் எனது ஓவியங்கள். எதை உள்வாங்கினேனோ உணர்ந்தேனோ அதை எனது வழியில் வெளிப்படுத்துகிறேன். பேசுவதன் மூலமோ அல்லது வேறு எந்த வெளிப்பாட்டினூடோ என்னால் வெளிப்படுத்த முடியாதவற்றை ஓவியத்தினூடு பகிர முடிகிறது. இதை வேறு எந்த (Pre Plan)உடனும் ஆரம்பிக்காமல் எனது திருப்திக்காகவே செய்கிறேன்.

மற்ற வெளிப்பாட்டு முறைகள் எதுவுமே தெரியாது என்பதை விட ஓவியம் தான் எனக்கு தெரிந்த பிடித்தமான விஷயம் என்பதே முக்கியம். இதில் தான் சுதந்திரமும் முழுமையும் கிடைக்கிறது.

எனது ஊர் திருச்சிப்பக்கம். சிறிய கிராமம். அப்பா முக்கிய ஆளாக பஞ்சாயத்து தலைவராக இருந்த சூழ்நிலை நான் வளர்ந்தது. எனக்குப் பெரிதாக பள்ளிப் படிப்பில் எல்லாம் நாட்டம் கிடையாது. சாயந்திரங்களில் ரேடியோவுடன் தனியாகப் போய் ஊரின் ஓடைகளில் எல்லாம் உட்கார்ந்திருப்பேன். நண்பர்களுடன் கூட அவ்வளவு சேரமாட்டேன். அப்பா கூட சொல்லுவாரு. இவன் என்ன தன்பாட்டில் தனியா உட்கார்ந்திருக்கான், ஒருத்தனோடையும் சேராமல் தனியாகப் போறான். ஒரு மாதிரியா இருக்காண்ணு. பள்ளியில் என்னை நல்ல மாணவனாயும், இவன்கிட்ட ஓர் நல்ல சமாச்சாரம் இருக்குன்னும் சொன்னது ஓவிய ஆசிரியர் உத்தராபதி மட்டும்தான். அவரை ''சார்'' என்று சொல்லமாட்டேன். ''அண்ணே'' என்று தான் கூப்பிடுவேன். அவர்தான் என்னைப் படம் போட ஊக்குவிப்பார். மற்ற வகுப்புகளில் எல்லாம் படம் போடச் சொல்லுவார். மாணவர் போட்ட படங்களை திருத்தச் சொல்வார். இதனால் நம்மிடம் கூட மற்றவர்கள் பேசிக்கொள்ள ஏதோ ஒன்று இருக்குண்ணு நானும் நம்பிக்கையுடன் இதில் முழுமையா ஈடுபட்டேன். இதைப் போலவே ஓர் அறிவியல் ஆசிரியரும் அவர் என்னைக் கூப்பிட்டு எல்லா வகுப்புகளிலும் வரைபடங்கள் வரையச் சொல்வார். எனக்கு மத்ததெல்லாம் தெரியலைன்னாலும் கூட, ஓவியத்தில் ஆர்வம் இருந்தது.

அப்போ எனக்கு தெரிந்ததெல்லாம் ஓவியம் என்றாலே ஓவிய ஆசிரியர் வேலை தான். அப்பவெல்லாம் ஓவியக் கல்லூரி என்று ஒன்றிருப்பதே தெரியாது. SSLCயில் பெயில் ஆயிட்டேன். அப்போ ஓவிய ஆசிரியராகனும் என்று விரும்பினேன். ஆனா அப்பா, இல்ல நீ கல்லூரியில் சேரணும் என்றார். அவர் என்னை திரும்ப படிக்க நிர்ப்பந்தித்தார். சிறப்புக்கணிதம் எல்லாம் படிக்கச் சொனனார். ஆனா என்னால அதில அதிக கவனம் செலுத்த முடியலை. சொன்னாரு செய்தேன், தேர்வில் பெயில் ஆயிட்டேன்.

அப்புறம் கும்பகோணத்தில் ஓவியக் கல்லூரி ஒன்று இருப்பதாகக் கேள்விப் பட்டேன். அதில் சேர்ந்த என்னை இத்துறையில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளத்தொடங்கினேன். அங்கு என்ன செய்யிறதுனு யோசிச்சபோ, ராமகோபால் என்ற ஆசிரியர் சொன்னார்; இயற்கை தான் முக்கியம். அதைப் பார்த்து அதனுள் இருப்பதை உள்வாங்கி ஓவியம் பண்ணணும் என்று. அந்தக் காலங்களில் விடுமுறைக்கு வீட்டுக்கு வருவேன். கொல்லையில் ஆடுகள் எல்லாம் பட்டி அடைத்திருப்பார்கள். இந்த ஆடுகளைக் கூட்டம் கூட்டமாக நிறைய வரைந்தேன். இதில் Wood Cut அச்சுப்பிரதி எல்லாம் பண்ணி நிறையப் பாராட்டுகள் பெற்றேன்.

கும்பகோணத்தில் இருந்த போது கோயில் எல்லாம் அடிக்கடி போவேன். கோயில் உள்ளே இருந்த சமாச்சாரம் எனக்கு பிடித்ததேஒழிய அங்குள்ள சிற்பங்கள் ஓவியங்கள் எல்லாம் பிரதி பண்ண முயன்றதில்லை. எனது நண்பர்கள் எல்லாம் இவற்றைப் பிரதி பண்ணுவாங்க. அவங்க கோயில்களை வரையும் போது நான் பக்கத்து மாடியில் நிக்கிறவன், தெருவால் போகிறவன் என்று பண்ணுவேன். எனக்கு என்னமோ இது தான் பிடித்திருந்தது. நான் இந்த மாதிரித்தான் உணர்ந்திட்டிருந்தேன். முதல் முதலாக Oil Paintல் Portrait (மெய்யுரு) பண்ணினேன். தனபால் கூட சொன்னாரு இது ரொம்ப நல்லா இருக்கு. காட்சிக்கு வை என்னு. அப்போ "Aesthetic Artists Association" என்று ஓர் அமைப்பு ஆரம்பித்திருந்தோம். அதற்கு தனபால் தான் தலைவரா இருந்தாரு. அதன் முதல் ஓவியக் காட்சியில் அந்த Portraitஐ காட்சிக்கு வைத்தேன். சென்னையில் இருந்து ஓவியர்கள் எல்லாம் வந்தாங்க. ரொம்ப பாராட்டினாங்க.

இதே வேளை சென்னை பம்பாய் முதலிய இடங்களிலுள்ள ஓவியக் கல்லூரிகளுக்கெல்லாம் சுற்றுலாவின் போது சென்று பார்த்தேன். அங்குள்ள ஜத்தின் தாஸ் போன்ற ஓவியர்களுக்கு தனிப்பட்ட இயல்புகள் இருப்பதைக் கண்டேன். என்ன இப்படி எல்லாம் பண்ணிறாங்க. என்றிருந்தது. இது எனது பார்வை விரிவடையக்காரணமாய் இருந்தது. இப்படி இவை எல்லாம் நான் அறியாமல் உள்வாங்கினது அல்லது பாதிக்கப்பட்டது. நேரடியாக எடுத்துக்கொண்டது என்றோ அல்லது இப்படித்தான் பண்ணுவது என்று பண்ணியதோ இல்லை.

கல்லூரியிலும் கூட ரொம்ப சராசரி மாணவனாயே இருந்தேன். கல்லூரி படிப்பு முடிய மூன்று மாதங்கள் வீட்டிலேயே இருந்தேன். நண்பர்களில் பலர் வேலைக்காகவும் வேலை தேடியும் சென்னைக்கு வந்து விட்டாங்க. பின்னர் நானும் சென்னைக்கு வந்து எனது நண்பர்களுடனேயே தங்கி அவர்களுடன் சேர்ந்து ஓர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்தேன். அங்கு Cloth Painting எல்லாம் பண்ணினேன். இரண்டு மூன்று மாதங்களில் சில பிரச்சினைகளால் நிறுவனம் மூடப்பட்டது. எனக்கும் உடல்சரியில்லாமல் போக ஊருக்கே திரும்பிடலாம் என்றிருந்தது. மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியல. ஓவியம் வரைந்தால் காட்சிகளில் எல்லாம் வைக்கலாம், அப்போ நிறைய ஓவியக்காட்சிகள் பார்க்கிறேன். இவ்வாறு என்னை ஏதாவது ஒன்றில் ஈடுபடுத்தனுமென்னா நான் ஒரு இடத்தில நிண்ணு ஏதாவது பணணியாகனும். அதற்கு நிலைப்படுத்திக் கொள்ள ஒரு வேலை வேணும் என்னு பட்டது.

திரும்ப உடல்சரியில்லாமல் போக, ஊருக்கே போனேன். அங்கு இருந்த நிலைமையில் அங்குள்ள இளைஞர்களுடன் சேர்ந்து எனக்கு அரசியலில் ஈடுபாடு ஏற்பட்டது. அப்போ எங்களது இளைஞர் இயக்கத்தின் சார்பாக தேர்தலுக்காக நிறைய கேலிச்சித்திரங்கள் எல்லாம் செய்து கொண்டிருந்தேன். இந்தச்சமயத்தில் ஆதி (கே.எம்.ஆதி மூலம்) சந்தானம் ( வீர சந்தானம்) போன்றோர் என்னை சென்னை வந்து ஏதாவது பிரயோசனமாய் ஓவியம் பண்ணுமாறு கடுதாசி போட்டு அழைத்தாங்க. முதலில் நான் வரல்லை, அப்புறம் எனக்கு இந்த தேர்தல் எல்லாம் வெறுத்துப் போச்சு. இதில யாரும் உண்மை என்கிறதில்லை. ஏதோ ஒன்றுக்காக தான் இது எல்லாம் பண்ணிறாங்க. இது எல்லாம் சரிவராது. என்னிட்டு நான் சென்னை வந்தேன்.

எனக்கு படிக்க, இன்னும் தெரிஞ்சிக்க, விஷயம் இருக்கு என்னிட்டு சென்னை ஓவியக் கல்லூரியில் டிப்ளோமா மேற்படிப்பிற்கு விண்ணப்பித்தேன். அப்போ எல்லாரும் Textile Designல் தான் சேர்ந்தாங்க. நான் Painting தான் வேணும் என்று அதில் சேர்ந்தேன். அப்போ நிறைய ஓவிய காட்சிகள் பார்த்தேன். இதனூடு எனது ஓவிய அடையாளம்பற்றி முன்னொருபோதும் இல்லாமல் இப்போ சிந்தித்தேன். தமிழ் எழுத்துக்களை எல்லாம் ஓவியத்தில் பயன்படுத்தினேன். பின்னர் இதை K.C.S. பணிக்கர் போன்றவர்கள் ஏற்கெனவே பண்ணி இருக்காங்க எண்ணிட்டு கைவிட்டேன். இது தான் என்று நான் சொல்ல முடியாத படிக்கிற காலமிது. இப்போ Course Work மட்டும் பண்ணிட்டு இருந்தேன்.

இதன் பின்னர் 1978இல் நெசவாளர் பணி மையத்தில் புவனேஸ்வரில் வேலையில் சேர்ந்து சாப்பாட்டிற்கு பிரச்சினையில்லை என்ற நிலையில் ஓவியத்தில் முழுமையாக ஈடுபட்டேன். வேலை நேரம் போக மீதி நேரத்தை லலித கலா அக்கடமியின் பிராந்திய மையத்தில் செலவிடுவேன். நிறைய கன்வஸ்கள், அட்டைகள் எல்லாம் வாங்கி கறுப்பு வெள்ளையில் படம் வரைந்தேன். சென்னையில் இருந்த போது முதல் முதலில் காமராஜருடைய கவிதைத் தொகுப்பிற்கு அட்டைப்படம் வரைய முடிந்தது. அந்தக் கவிதைகளிலும் ஜெயகாந்தன் போன்றவர்களின் கதைகளிலும் இருந்து பெற்றதைக் கொண்டு படம் வரைந்தேன். அப்போ பூவையோ, செடியையோ, நிலவுருவையோ மட்டும் படம் வரையல.

அப்போ ஓர் பத்திரிகையாளரைக் கொலை செய்துவிட்டு அவர் மனைவியை கற்பழிச்சிட்டாங்க. இதை ''கற்பழிப்பும் கொலையும்'' என்று கடும் நிறங்களைக்கொண்டு ஓவியத்தில் பண்ணினேன். இதன் பின்னர் இதைப்போன்று சம்பவங்கள் எங்கு நடந்தாலும் என் கவனமும் அங்கு சென்றது. இவற்றை மையமாகக்கொண்டு படம் வரைந்த எனக்கு இதில் எல்லாவற்றையும் நேரடியாக சொல்லிறமே இதற்கப்பால வேற ஒன்றையும் சொல்லியாகனும் என்று தோனும்.

84இல் இருந்து நிறத்தில் ஓவியங்கள் செய்ய ஆரம்பித்தேன். 90க்கு பின்னர் இன்றைய ''நிலவுருக்கள்'' என்ற ஓவியங்களின் தொடக்கத்தை ஆரம்பித்தேன். 90களுக்கு முந்திய படைப்புக்களில் மனிதவுருக்கள் பெரும்பகுதியை அடைத்து துருத்திக்கொண்டிருக்கும். பின்னணியை முக்கியமானதொன்றாக கருதியதோ அல்லது பெரிய பகுதியை பின்னணியாக விட்டதோ கிடையாது. பின்னைய படைப்புக்களில் பின்னணி ஓவியத்தின் பெரும்பகுதியை நிரப்பி தூரம் பற்றிய மாயையை பிரமாண்டத்தின் பிரமிப்பை ஏற்படுத்தற மாதிரிப் பண்ணினேன். இதன் போது வெறும் உருவங்களின் ஒழுங்கமைப்பில் மட்டும் கவனம் எடுக்காம சுதந்திரமாய் ஓர் கனவுடன் ஒத்துப் போகிற சமாச்சாரத்தையும் வெளிப்படுத்த நினைச்சேன். 80,82களில் கலப்பு சாதனம் (Mixed Media) எல்லாம் பண்ணி இருக்கேன், அக்கிறி லிக் (Acrylic) வண்ணத்தில் கூட பண்ணி இருக்கேன். ஆனால் இதில் எல்லாம் கிடையாத சுதந்திரமும் திருப்தியும் Oil Paintல் தான் கிடைச்சது.

சேலத்திலிருந்தபோது தான் நான் இந்த நிலவுருக்களுடன் கூடிய படைப்புக்களை முழு மூச்சுடன் செய்யத் தொடங்கியது. இதற்கு தூண்டுதலாய் இதுதான் அமைந்தது என எதையும் குறிப்பாய் கூற இயலாது. வெய்யில் காலத்தில் கடும் வறட்சியாகவும், மழை காலத்தில் ரொம்ப பசுமையாகவும் இருக்கும் வெப்பமான காட்டில் இருந்து வந்தவன் நான். எனது வேர்கள் எனது கிராமத்தில் தான் இருக்கு. கேரளாவில் பணியின் நிமித்தம் எட்டு வருஷங்கள் இருந்தேன். அங்கு முற்றான பச்சையைக் காணமுடியும். 1988 இல் மாநில லலிதகலா அக்கடமி ஒழுங்கு செய்த ஓவிய முகாமொன்றில் ஊட்டியில் பங்கு பெற நேர்ந்தது. இதில் தான் பெரிய மாற்றம் நடந்தது. அங்குள்ள நீர் நிலைகளில் கவரப்பட்ட எனக்கு அங்கு விடுமுறைக்காக வந்த ஒருவன் தண்ணியால அடிச்சிட்டு போயிட்டான். இதை வச்சு ஓவியம் பண்ணினேன். அந்த ஓவியத்தின் மூலையில் இந்த சம்பவத்தையும் வைத்தேன். இதைத்தான் குறிப்பாய் பண்ணினேன். இதில் தான் தாக்கம் ஏற்பட்டது என்று எல்லாம் இல்ல. முட்டை அடைகாக்கிற மாதிரி இது எல்லாம் நான் உள்ளெடுத்துக் கொண்ட சமாச்சாரம்.

நான் எங்கு வாழ்கிறேன் எப்படி யாருடன் வாழ்கிறேன். என்று எனக்குத் தெரிகிறது.' இதை அனுபவத்தை ஓவியத்தில் வெளிப்படுத்துகிறேன். இது மக்களிடம் போய்ச் செருகிறதா இல்லையா என்பது எல்லாம் என் விடயம் அல்ல. சமுதாயத்தில் நடக்கிற விஷயத்தை அப்படியே பதிவு பண்ணணும் என்னா ஓர் Poster பண்ணிடுவேன். அதற்கப்பால ஒன்றை அத்துடன் என்னுடைய விஷயத்தையும் சேர்த்து சொல்லனும் என்றதால ஓவியம் பண்ணிறேன். ஓர் நீதிபதியாய் இருக்கிறதிலும் ஓர் சாட்சியாய் இருக்கிற தென்கிறது பெரிய விஷயம். நான் படைப்புக்களில் சாட்சியாய் இருக்கவே விரும்புகிறேன். சம்பவங்கள் Prose ஆக இல்லாமல் கவிதையாய் படைப்பில் இருக்கணும் என்று நினைக்கிறன் அப்ப தான் அது நிலைத்து நிற்கும். படைப்பாளிக்கு ஓர் மனோ தர்மமான கடமைப்பாடு இருக்கு. பார்வையாளனுக்கு புரியனும் என்று நான் படம் பண்ணல. அது முக்கியமும் இல்ல. நான் என்ன புரிதலுடனும் ஈடுபாட்டுடனும் படம் பண்ணிறன் என்றது தான் முக்கியம். நான்

→ 11

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சு.வியின் "காலத்துயரும்" மு. பொவின் கேள்விகளும் சில பதில் குறிப்புகளும்

90களில் ஈழத்துக்கவிதை காட்டும் போக்குப் பற்றி ஆராய முற்படும் போது 70களில் அது கொண்ட மாற்றம், புதுக்கவிதை வீச்சு செலுத்திய செல்வாக்கு, 80களில் அது உள்வாங்கிக் கொண்ட கருக்களும் அதனை வெளிப்படுத்தி நின்ற மொழி ஊடகமும் இந்தியக் கவிதையிலிருந்து வேறுபட்டு நின்ற விதம் என்பனவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டியது அத்தியாவசியம்.

70களில் மரபுச்சட்டங்களுக் குள்ளேயே புதுமைகள் புரிந்த மஹாகவி, நீலாவணன், முருகையன், நு.்.மான் முதலியோரும் 80களில் அலையென எழுந்த இளைய தலைமுறையினரான சேரன், ஜெயபாலன், இளவாலை விஜயேந்திரன், சு.வில்வரத்தினம், புதுவை ரத்தினதுரை, சண்முகம் சிவலிங்கம் ஆகியோர் புதுமரபுச்சட்டகங்களுக்குள் தமிழ் வாழ்வையும், அவலத்தையும், உயிர்ப்பையும், மாற்றத்தையும் புடம் போட்டு நிற்க, 80களின் இறுதியில் வெளித்தெரிந்து 90களின் புதிய போக்கை இயம்பி நின்ற சோலைக்கிளியின் வரவுடன் ஆத்மா, றஸ்மி, அன்ஸார், நட்சத்திரன் செவ்விந்தியன் ஆகியோர் கவிதை மொழி முழுவதையும் படிமக்குவியலாக்கி ஆனால் கருத்துநிலைப்பட்டு கவித்துவவீச்சை இறுக்கிய ஒரு சட்டகமாக நவீன தமிழ்க் கவிதையை ஆக்கி உள்ளனர்.

வாசகனும் தன்னை ஒரு நிலைக்கு உயர்த்தி நின்று சமகால நிகழ்வுகளை பொருத்திப் பார்த்து கருத்தூன்றி சிந்தித்தாலே அதன் கவித்துவத்தை ரசித்து கருத்தை விளங்கலாம். உதாரணமாக சோலைக்கிளியின் வரி ஒன்று:

*''நான் பாடப்பாடத்தான்*
*வானம் நிலா செய்யும்*
*இரவில்*
*அவள் முகத்தை தினம் நினைத்து!*
*பொன் நிறத்தைப் பூசி''*

*''என் பாட்டைக்குடித்து மழை முகிலும்*
*கொழுத்து*
*கொட்டும் மழைக்குள்ளே என்*
*சிறையிருக்கும் கண்டாயா''*

*(நன்றி பூவரசு)*

இக் கருத்தூன்றி சிந்தித்து விளங்குதல் என்பது நவீன நாடகத்துக்கும் பொருந்தும் (நவீன நாடகம் என்பது குறியீடுகளின் குப்பை என்போர் சிறிது கவனிக்க)

சமீபத்தில் வெளியான சு.வில்வரத்தினத்தின் இரு கவிதைத் தொகுப்புகளும் எவ்வகையிலும் "அகங்களும் முகங்களும்" தொகுதியிலிருந்து உருவம் சம்பந்தமாக பெரிதும் மாற்றங்களைக் கொண்டிலங்கவில்லை. இங்கு உள்ளடக்கத்திற்கு ஏற்ற உருவம் முகிழ்த்தல் எனும் வாதம் பற்றியும் நாம் கருத்தைச் செலுத்தலாம். சமகால மக்களின் பாடுகளை தன்வயப்படுத்தி தன் பாணியிலேயே தேவாரதிருவாசக பாரதி வாசகங்களோடு, பாரம் பரிய மொழித்தன்மைகளோடு வெளிப்படுத்தி நின்ற சு. வி. இடம்பெயர்ந்த நிலையில் தன் மன ஓலங்களை தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண்ணுக்கும், மக்களுக்கும், வாழ்வுக்குமிடையிலான பிணைப்பை தன் "காலத்துயர்" "காற்று வழிக் கிராமம்" ஆகிய இரண்டு படையல்களுடாக வெளிப்படுத்தி பதிவு செய்கின்றார்.

இவ்விடத்தில் சேரமான் கணைக்கால் இரும்பொறையின் "ஈழத்து கவிதை" நவீன வாகனங்களில் ஏறி உலாவரும் போது சு.வி. தனது பழைய பரிவாரங்களுடனேயே இன்னமும் பவனி வந்து கொண்டிருப்பது தமிழ்க்கவிதைக்கு ஆரோக்கியமானதாக இல்லை" எனும் வரிகள் மிகவும் பொருத்தமானவை.

80களில் நாம் கண்டவாழ்வின் பதட்டத்தின் செறிவு வீதம் 90களில் பல மடங்கில் விழுமியங்கள் மண்தோண்டிப் புதைக்கப்பட்டு மாற்றங் கண்டுள்ளது. இம் மாற்றங்களை சோலைக்கிளி, ஆத்மா, நட்சத்திரன் செவ்விந்தியன், அன்சார், றஷ்மி போன்றவர்களின் கவிதைகள் உள்வாங்கியிருப்பது கண்கூடு. இவை கொண்டுள்ள (பின் நவீனத்துவ காலம் எனலாமோ) புதிய பரிமாணத்தினை மு.பொ. போன்றோர் விளக்கம் கோராமலேயே விளங்கிக்கொள்ள முடியும். இல்லையெனில் நாமும் மேத்தாக்களை, வைரமுத்துக்களைத்தான் ரசிக்கவும், உருவாக்கவும், வளர்க்கவும் செய்வோம்.

இன்றைய ஈழத்துக் கவிதை காட்டும் புதிய குணாம்சப் போக்கு மொழியமைப்பு, படிமக் குவியல் என்பவற்றை விளங்கிக்கொள்ள இவை தொடர்பாக விரிவான கட்டுரை எழுதப்படல் வேண்டும்.

**கந்தையா ஸ்ரீ கணேசன்**

## நிறங்களுடன்.......

உண்மையான புரிதலுடனும் ஈடுபாட்டுடனும் பண்ணும்போது அது கண்டிப்பாக மக்களைப்போய்ச்சேரும் என்பது எனது நம்பிக்கை.

நான் எந்த அரசியல் அல்லது இடது சாரி இயக்கத்துடனும் தாலி கட்டிக் கொண்டவனோ அவை சார்ந்தவனோ அல்ல. எந்த இயக்கத்தினதும் கோட்பாட்டை அல்லது வெளிப்பாட்டை வெளிப்படுத்தும் என்று என்னை நான் கட்டுப்படுத்திக்கொண்டதில்லை. அவர்கள் என் சொந்த வெளிப்பாட்டில் தங்கள் அடையாளங்களாய்க் காண்கிறார்கள் என்பது தான் உண்மை.

எந்த முற்திட்டங்களுமில்லாமல் இயல்பாக ஓவியத்தை ஆரம்பிக்கிறேன். எனக்கு உள்ளடக்கம், நிறம், வெளி (Space) இவை மூன்றும் மிக முக்கியமானவை. இப்படித்தான் பண்ணலாம் என்று நினைப்பேனே ஒழிய இப்படித்தான் பண்ணனும் என்று நினைக்கிறதில்ல. படைப்பு என்னை அழைச்சிட்டுப் போகும். நான் அதைப் பின் தொடர்ந்து எனது திருப்தி கிட்டும் வரை போராடுவேன். எனக்கு வெளிப்பாட்டிற்குரிய உள்ளடக்கம் உடனேயே வெளியில் வந்திடனும், பாதி பண்ணி வச்சிட்டு எல்லாம் என்னால தூங்கமுடியாது. ஜனனம் என்பது ஒரே தடவையில் நடந்து முடிகிறது. பின்னர் பிறந்த குழந்தையை குளிப்பாட்டி பூச்சூட்டுவதைப் போல அந்த ஓவியத்தை சில திருத்தங்கள் மூலம் செம்மைப்படுத்துவேன். அதிக நேரம் ஓர் படைப்புடன் செலவிடுகிறேன் என்றால் ஏதோ பழுது நிகழ்கிறது என்று அர்த்தம். எனக்கு ஆதியின் நிறங்கள் ரொம்பப் பிடிக்கும். அவர் ஓர் பெரிய Colourist, நிறத்தை மிக வேகமாகவெல்லாம் சொல்லி இருப்பார். இதை இரசித்தேன் உள்வாங்கினேன் ஒழிய இதை அப்படியே பண்ணனும் என்றோ அப்படியே கொண்டு வரணும் என்றோ அல்லது அதைத்தாண்டி ஒன்று பண்ணனும் என்றோ தெரியலை. அது தேவையுமில்லை ''நிறத் தூய்மை'' Purity of Colours அவருடைய ஓவியத்தில் இருக்கு என்கிற உணர்வு மட்டும் எனக்குள்ள இருக்கு. இது தான் நான் வாங்கின உள்வாங்கின விஷயமும் கூட.

எனது நிறப்பாவனை என்பது உள்ளார்ந்த விஷயம் சம்பந்தமானது. இது எனது வேறுபட்ட அனுபவங்களின் தொகுப்பில் இருந்து பெற்றது. எனக்கு நிறத்தை நிறத்தில் சொல்லியாகனும். பாவிக்கப்படும் நிறத்தின் இயல்பு நிச்சயம் Paintingல் இருக்கனும் என்று தோணும். அதிகமாய் முதல், துணை நிறங்களையே அதற்குரிய இயல்புடனும் வலிமையுடனும் பயன்படுத்துகிறேன். இதனால் வெள்ளை நிற உபயோகத்தை முற்றாகத் தவிர்க்கிறேன். பகிரலின் ஓர் பகுதியாய் குறியீடுகளைப் பயன்படுத்துகிறேன். இதில் முக்கியமானது லில்லி மலர்கள். எனது அதிகமான Paintingsல் இது இருக்கும். கேரளாவில் காலை நேரங்களில் எந்த அறிவிப்பும் இல்லாமல் நிலத்தில் அந்த இடம் வெடித்து. இலைகளற்று லில்லி மலர்கள் ஒற்றைக் காம்பில் தோன்றி நிற்கும். அழகாக, புதிதாக, பார்க்க ரொம்ப நல்லா இருக்கும். இது எதையும் எதிர்பார்த்து வருவதில்லை. அது பற்றிய கனவுகள் எல்லாம் நம்முள்ள தான் இருக்கின்னு தோணும். இது எனது கனவுகளின் வடிவம். லில்லியின் உள்ளார்ந்த விடயம் அல்லது அதன் வேர், அதன் சாரம், அல்லது ஆத்துமம் அதைத்தான் படைப்புக்களில் லில்லியை வைப்பதன் மூலம் கொண்டு வர விரும்புகிறேன்.

இதைப்போலதான் பறவைகளும் காக்கா வந்து கத்தினா ஆள் வருவாங்கண்ணு அம்மா கூட சொல்லுவாங்க. இவை ஒரு சாட்சி மாதிரி ஒரு சுதந்திரமான சமாச்சராம். இதே போல பெட்டிகளையும் பயன் படுத்தினேன். வட்டங்களுக்கு முடிவு கிடையாது. ஆனால், பெட்டிகளுக்கு முடிவு உண்டு. இதன் மூலம் வாழ்க்கையை வெளிப்படுத்துகிறேன்.

ஓவியம் நிறங்களின் உதவியுடனான ஓர் சமாச்சாரம். ஆனால், Drawings நேர நிதர்சனமாய் கோட்டின் உதவியுடன் வரும் மிகவும் வலிமையான விஷயம், எனவே எனது ஓவியத்திற்கும் Drawingsக்கும் நேரடியான வெளிப்படையான தொடர்பு இருக்கணும் என்று நான் எதிர்பார்க்கிறதில்லை. ஓர் Drawing அல்லது Paintingஐப் போல எனக்கு illustration முதன்மையானதல்ல. ஏனெனில், இவற்றின் கருத்து முற்றாக எனக்குரியதல்ல. ஆனால், எனது சிரத்தையிலும் ஈடுபாட்டிலும் எந்த மாற்றமுமில்லை. இவை தனித்து உயிர் வாழும் படைப்புகளாயும் அதே வேளை illustration ஆயும் இருக்கனும் என்று விரும்புகிறேன்.



ஆரம்ப காலங்களில் ஆதி, பாஸ்கரன் தட்சணா மூர்த்தி போன்றவர்கள் விளக்கப் படங்கள் முகப்பு அட்டைகள் மூலம் சிறு பத்திரிகைகளுடன் இயங்கி இருக்காங்க. இவை எல்லாவற்றையும் அப்போ வாங்கிப்படித்த அனுபவம் எனக்கு உண்டு. இதன் பின்னர் வியாபாரப் பத்திரிகைகளில் கூட தொடர்ச்சியாக இயங்கிய ஓர் மாற்றத்தை ஏற்படுத்தியது மருது என்று சொல்லாம்.

கடவுள் இருக்கிறார் என்கிற விஷயம் மாதிரித்தான் ஒருவனில் பாதிப்பு என்கிற விஷயமும். நான் நடை முறை சார்ந்த மனிதனாகவே இருக்க விரும்புகிறேன். நான் வாழ்கிறகாலத்தில் நான் பார்க்கிற இயங்குகிற காலம் தான் என்னை நிறையப் பாதிக்கிறது. உலக ஓவிய மேதைகளின் படைப்புகள் இந்தியாவில் எனக்கு முன்னைய படைப்பாளிகளின் படைப்புக்கள் எல்லாம் பார்த்திருக்கிறேன். இவை எல்லாம் பெரிய பிரமிப்பை எனக்கு ஏற்படுத்தலை. நான் வாழ்நாளில் பார்க்காத பிரமிப்பூட்டிய ஆள் என்றாள் டாலி (ஸ்ல்வதோர் டாலி) மட்டும் தான். இன்னும் ஒன்று ஓர் எழுத்தாளர் சொல்லி இருக்கார். ''படைப்பு எவ்வளவு உன்னதமானதோ அதை விட படைப்பாளி உன்னதமானவனாக இருக்க வேண்டும்'' அவன் தான் கலையைப் படைக்க முடியும்'' என்று இதை எல்லாம் நடைமுறையில் பார்த்து உள்வாங்கிக்கணும் என்று நினைக்கிறேன். இதில எனக்கு பெரிய உந்துதலாய் இருப்பது ஆதி ஒருவர் தான். திரும்பத் திரும்ப நினைக்க நினைச்சுப் பார்க்கிறேன். அவரை விட்டால் வேறு யாரையும் சொல்ல முடியல்லை. ஓர் ஓவியர் என்றதை விட ஓர் மனிதனாய் எனக்கு ஓர் உதாரணமாய் தெரியிறாரு. அவருடைய அந்தச் சத்தியமான ஈடுபாடு என்னைப் பாதிச்சது. அவருடைய நிறத்தை உள்வாங்கினேனே ஒழிய மற்ற சமாச்சாராங்களுடன் பெரிதாய் இயங்கியது கிடையாது. உன்னதமான ஓவியத்திற்கு ஓர் இலட்சணம் இருக்கிற மாதிரி ஓவியனுக்கும் ஓர் இலட்சணம் இருக்கு. அவன் தான் உன்னதங்களைப் பண்ண முடியும்.

- தொகுப்பு:
தா. சனாதனன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





திருக்கோயில் கவியுவன்

குரங்கு சப்பிய என் முகத்தை மறைப்பதற்காக நான் மறைந்து திரியத்தொடங்கி எத்தனை நாட்களென்று எனக்கே மறந்து போனது. விழும் மழைத்துளிகள் தெருவிளக்கொளியில் வெள்ளிக்கோர்வையாய் தோற்றம் காட்டிக்கொண்டிருந்த ஒரு முன்னிரவில் உடல் முழுவதும் தொப்பமாக நனைய வீதியில் நின்றவர்களின் வினோதப்பார்வைக்கு ஆளாகிக் கொண்டு நடந்து வந்ததுதான் கடைசிநாள். அப்போது அவர்கள் நான் நனைந்ததை வினோதமாகப் பார்த்தார்களா அல்லது குரங்கு சப்பிய என் முகத்தை வினோதமாகப் பார்த்தார்களா என்பது இன்றுவரை தெரியவில்லை. அது அவ்வளவு முக்கியமுமில்லை, எனினும் அன்றிலிருந்துதான் நான் மறைந்து திரியத் தொடங்கினேன் என்பதால், அது முக்கியத்துவம் பெறுவதும் தவிர்க்க முடியாததாகிறது. அது மட்டுமில்லை, அன்று நான் அணிந்திருந்த உடைகள் உட்கொண்ட உணவு, அலைந்து திரிந்த இடங்கள்... எல்லாமே முக்கியம் பெறுகின்றன. அன்று வரை சீழ்வடியும் என் மேனியைக் கொத்தவரும் காகங்களிடமும் இதர பறவைகளிடமுமிருந்தும் என்னைக் காப்பாற்றிக் கொள்ளக் குரங்கிடம் தான் நான் தஞ்சமாகியிருந்தேன். மாலையில் ஒரு குட்டித் தூக்கத்தின் பின், நாள் முழுவதும் ஒய்வு ஒழிச்சல் இல்ல.எது உழைத்துக் களைத்துத் திரும்பும் குரங்கின் வருகைக்காக காகங்களும் இதர பறவைகளும் அற்ற தனியிடத்தில் கால் வலிக்கக் காத்திருப்பேன். மரத்துக்கு மரம் தாவித்தாவிக் குரங்கு என்னை நெருங்க நெருங்க எனக்குள் சிலிர்க்கத் தொடங்கும். ஒரு நிமிடம் கூட நின்று கதைக்காமல் வந்த வேகத்திலேயே (கண் ஜாடை காட்டிவிட்டு) அது ஓடத்தொடங்கும். மந்திரித்து விட்டவன் போல, என் கால்கள் தொடரும். ஈரக்காற்றை வீசி இறுக்கமான எம் பொழுதுகளை தளர்த்தச்செய்யும் அந்த ஆளரவமற்ற புல் வெளிக்கு வரும் வரை எங்கள் ஓட்டம் நீளும். புல்வெளியின் எல்லையைக் கால்கள் தொட எனக்குள் புதியதோர் உலகம் விரியும். உலகைப் பிணைத்திருந்த தளைகளெல்லாம் அற உடலைப் பிரிந்து உயிர் தனியே பறக்கும்.

அதன்பின் வரும் கணங்களெல்லாம் எழில் கொஞ்சும் அப்புல்வெளியின் மறு எல்லையில் ஒளிரும் விளக்குள் தொங்க ஒற்றையாய் நிற்கும் மரத்தை இரசிப்பதில் கரையும். யார் அம்மரத்தில் அத்தனை ஒளிவிளக்குகளைத் தொங்கவிட்டார்களோ தெரியவில்லை.. ஒரு வெட்ட வெளியில் உடலெங்கும் ஒளிமுத்துக்களையுடைய உருவமொன்று ஆகாயத்தை நோக்கிக் கைகளை விரித்தது போய் ஒற்றையாய், ஜெகஜோதியாய் அது...

என்றோ ஒருநாள் நாம் இணைந்தபடி போய் அம்மரத்தை அடைய வேண்டுமென்பதுதான் என் ஆசையாக இருந்தது. (ஆசை என்பதை விட அதை எனது கனவு என்று கூடச் சொல்லலாம்.) இருந்தும் பாதிதூரம் கடப்பதற்குள்ளேயே பொழுது இருட்டிப் போவதால், நாங்கள் தினம் தொலைவில் நின்றபடியே மரத்தை இரசித்து விட்டு வந்து விடுவது தான் வழக்கமாயிற்று. அந்த இடத்தை எப்படிக் குரங்கு கண்டுபிடித்ததோ தெரியவில்லை. எவ்வளவு காலமாய் இங்கு வந்துபோகின்றதோ என்பதும், தனியே வந்து தனியே இரசிப்பதில் சலித்துப்போனதால்தான் என்னையும் இப்போது அழைத்துக் கொண்டு வருகிறதோ என்ப்தும் கூட? எது எப்படியென்றாலும், குரங்கின் சினேகம் எனக்குத் தேவைப்பட்டதென்பதும், அதனால், நான் மகிழ்வு கொண்டேன் என்பதும் உண்மை. யாவற்றையும் விட குரங்கைத்தான் அதிகம் நேசித்தேன், என்பதும் சத்தியமான உண்மை. எப்படி ஒரு முன்னிரவில் நான் குரங்கைக் கடைசியாய்ப் பிரிந்து வந்தேனோ, அப்படியே அதை முதன் முதல் சந்தித்ததும் கூட முன்னிரவொன்றில்தான் நிகழ்ந்தேறியது. அப்போதும் மழைத் தூறிக்கொண்டிருந்ததாய்த்தான் ஞாபகம். மரங்களிலும் கூடுகளிலும் உறங்கப்போன காகங்களும் இதரபறவைகளும் திடீரென எழுந்து பறந்து வந்து, என்னைக் கொத்தி விடுமோ எனப் பயந்தபடியே தெருவில் நான் நின்றிருந்ததொரு முன்னிரவில்தான் திடுமென என் முன் வந்து குதித்தது குரங்கு. திடுமென அது இரவு நேரத்தில் குதித்ததில் நான் மிகவுமாய்ப் பயந்து போனேன்.

எடுத்த எடுப்பிலேயே

''ஏன் வாட்டமாயிருக்கிறாய்'' என்று கேட்டது குரங்கு.

''எனக்குப் பயமாக இருக்கின்றது'' என்றேன்.

''எதற்குப்பயப்படுகிறாய்''

''எதற்குப் பயப்படுவது என்பது தெரியாததால் பயமாய் இருக்கிறது''

''பயப்படாதே, யாரும் உன்னை எதுவும் செய்ய மாட்டார்கள். நான் எப்போதும் உன் கூடவே இருப்பேன்''

''இல்லை எனக்குப் பயமாய் இருக்கின்றது. நீ என்னைக் கடிப்பாய். காகங்களும் இதரபறவைகளும் எப்போதும் என்னைத் துரத்துவதுபோல் நீயும்....''

''இல்லையில்லை, நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன். எனக்கு உன்னை நன்றாகப் பிடித்திருக்கிறது. ஏனோ தெரியவில்லை. உனக்கருகில் இருப்பது கூட எனக்கு மிகவும் சந்தோசமாக இருக்கிறது. உன்னைப் போய் நான் கடிப்பேனா?''

''என் புண்கள் உனக்கு அருவருப்பாயில்லையா''

''இல்லை நான் அவைகளைப் பார்க்கவில்லை. அவைகளுக்கூடாக எப்போதும் கசிந்து கொண்டிருக்கும் உன் இயத்தைத்தான் பார்க்கிறேன். பாவம் கசிந்தும் உலர்ந்தும் அது எப்படியெல்லாம் உருமாறியிருக்கிறது பார்''

''உன்னை நம்பலாமா''

''நம்பு, ஒருத்தரையும் நம்பாமல் என்ன செய்யப் போகிறாய். வாழ்வைக் கடக்க நீ யாரையாவது நம்பித்தான் ஆக வேண்டும். என்னை நம்பு... என்னையாவது நம்பு''

அதன் பின் முதன்முதலாய் பீதியற்ற கண்களுடன் குரங்கை நோட்டமிட்டேன். மற்றக் குரங்குகளை விட அது பெருத்து, கண்கள் புடைத்து பார்வைக்கு அச்சம் தரக்கூடியதாய் தோற்றினாலும் அதன் கண்களில் ஒரு கனிவு தெரிந்தது. முறுவலுடன் பார்க்கும் பார்வையில் ஏதோ என்னை இழுத்தது. அதன் கண்களில் இருந்து புறப்படும் வசீகரத்தை மீறமுடியாமல் அதனுள் விழுந்து போனேன். மௌனத்தின் கவசத்தில் அதை நான் மேலும் மேலுமாய் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தபோது...

''என்ன யோசிக்கிறாய் இன்னும் நம்பிக்கை வரவில்லையா?'' எனக் குரங்குதான் மௌனத்தைக் கலைத்தது.

''சொல் நம்பிக்கை வரவில்லையா?''

''.......''

''சரி, உனக்கு இஷ்டமில்லாவிட்டால், விடு. நான் போகின்றேன்.''

''இல்லையில்லை, அப்படியில்லை, நான் வேறு ஒன்றை யோசித்துக்கொண்டிருந்தேன்.''

புறப்பட முற்பட்ட குரங்கை அவசரமாய் தடுத்து நிறுத்தினேன். குரங்கின் முகம் பிரகாசம் பெற்றது. புன்னகை மலர்ந்தது. அதனுள் கிளர்ந்த அளவற்ற சந்தோசத்தை அடக்கிக் கொண்டு,

''சரி இப்போது சொல், ஏன் உன்னைக் காகங்களும் இதர பறவைகளும் துரத்துகின்றன.'' என்றது.

''என் உடலெங்கும் சீழ்வடியும் புண்கள் இருப்பதாலும் அவை வெளியே தெரிவதாலும் என்னைத் துரத்துகின்றன''

''புண்கள் எப்படி வந்தது''

சிறுவயதில் நான் வளர்த்த கிளியொன்று என்னைக் கொத்திவிட்டுப் பறந்துபோனது. அன்றிலிருந்து ரெத்தம் கசிய அக்காயம் என்னில் தெரிய ஆரம்பித்ததில் இருந்து, எல்லாப் பறவைகளும் என்னைக் கொத்தத் தொடங்கி விட்டன. அவை கொத்தக் கொத்த புண்கள் அதிகமாயின. புண்கள் அதிகமாக அதிகமாக அவை மேலும் மேலும் கொத்தத் தொடங்கின, இப்படி....''

''உனக்கு மட்டுமா இப்படிப் புண்கள் இருக்கின்றன''

''தெரியாது. மற்றவர்களுக்கும் இருக்கலாம். அவர்கள் அதை மறைப்பதற்கு போர்வை வைத்துள்ளார்கள் என நினைக்கிறேன்''

''உன்னிடம் போர்வை இல்லையா''

''இல்லை''

''ஏன்''

''அப்பா அதைப் பறித்து விட்டார். சின்ன வயதிலேயே, மிகச்சின்ன வயதிலேயே என்னிடமிருந்து அதைப் பறித்து விட்டார்.''

''ஏன்''

'தெரியவில்லை. நான் வளர்த்த கிளி என்னைக் கொத்துமென்றும், அதனால், மற்றப் பறவைகளும் என்னைக் கொத்துமென்றும் முன்பே தெரிந்திருந்ததால், பறிக்காமல் விட்டிருப்பாரோ என்னவோ? அத்துடன், சின்ன வயதில் நான் மிக அழகாய் இருந்ததாகச் சொல்கிறார்கள், சிவந்த நிறத்தில் மெழுகுப் பொம்மைபோல் என் மேனி தழும்புகள் எதுவுமற்று பளிங்குபோல் இருந்ததாகச் சொன்னார்கள். அதனால் எனக்குப் போர்வை தேவையில்லையென்று அப்பா நினைத்துக் கொண்டாரோ தெரியவில்லை.''

''நீயே உனக்கொரு போர்வையை நெய்து கொள்ளக்கூடாதா?'' ''இல்லை அது முடியாது. மிகத் துயரமான இரவுகளில் ஊரே அடங்கிப் போனபின், எனக்கொரு போர்வையை நெய்து கொள்ளலாம் என எழுந்து யோசிக்கும்போதெல்லாம் அவர் வருகிறார். கண்களை உருட்டி போர்வை தேவையா, தேவையா என்பது போல் பார்க்கிறார். அவரை மீறி என்னால் எதுவுமே செய்ய முடியாமல் இருக்கின்றது.''

''அவரென்றால்''

''வேறு யார் என் அப்பாதான்''

''அப்படியா? இப்போது அவர் என்ன செய்கிறார்''

''அவர் இறந்து போய் பல வருடங்களாகி விட்டன''

''அம்மா''

''அவவும் கூட''

''அடக்கடவுளே உனக்குள் இவ்வளவு துயரங்களா'' என பரிதாபப்பட்டபடி என்னைத் தடவிக்கொடுத்தது குரங்கு. அன்றிலிருந்து எப்போதுமே என்னைத் தடவிக் கொண்டே இருந்தது. இதயத்தையும் கூட. மறுநாளிலிருந்து தினமும் என்னைப் புல்வெளிக்கு அழைத்துச் செல்லத் தொடங்கியது. எங்கோ காடுகளிலும், மலைகளிலும் அலைந்து திரிந்து மூலிகைகளைப் பறித்துக் கொண்டு வந்து என் புண்களில் சாறுபிழிந்து விட்டது. மீளாது போன என் சின்ன வயது நாட்களை எண்ணி நான் துயருறும் போதெல்லாம் என்முன் குதித்தும், தாவியும், குஸ்தியடித்தும் மகிழ்வூட்டியது.

யாவும் மறந்தேன். என்னை, என் புண்களை, துரத்தும் பறவைகளை, நெய்ய நினைத்த போர்வையை .... யாவற்றையும் மறந்தேன். எனக்கு எல்லாமே என் குரங்காகிப் போனது. குரங்கின் மகிழ்வே குறிக்கோளானது. ஒரு நாள் மிகவும் உணர்ச்சி வ்யமான நிலையில் குரங்கின் மடியில் படுத்தபடியே,

''என் இனிய குரங்கே நாம் என்றென்றைக்கும் இப்படியே இருக்க முடியும் என்றில்லை. ஓர் எல்லைக்கப்பால் நம் சினேகிதம் உனக்கோ, அல்லது எனக்கோ சலித்துப் போகலாம். அல்லது நீ உனக்குப் பிடித்த ஒருவருடனும், நான் எனக்குப் பிடித்த ஒருவருடனும் சினேகம் செய்து கொண்டு பிரிந்து போகலாம். அங்கனமாயின் நாம் ஒருவரை ஒருவர் வெறுத்துக்கொள்ளாது, நமக்குள் அடிபட்டுக் கொள்ளாது, ஒருவரை ஒருவர் காயப்படுத்திக் கொள்ளாது, பிரியவேண்டும். என்றையும் போலவே அன்றும் இங்கு வந்து இந்தப் புல்வெளியில் ஒருத்தர் மடியில் ஒருத்தர் படுத்தபடியே, நம் கனவு மரத்தை இரசித்தபடியே நிறையப் பேசிவிட்டு புன்னகைத்தபடி பிரிய வேண்டும். நம் நட்பின் பால் நான் உன்னிடம் கேட்பதெல்லாம் இது ஒன்றுதான்'' என்று தழதழத்த குரலில் சொன்னேன்.

குரங்கின் முகம் கறுத்துப்போனது. இயல்பாய் அதன் முகம் கறுப்பேதான் என்றாலும் இன்னும் கறுத்துப் போனதை என்னால் ஊகிக்க முடிந்தது. நீண்டதோர் பெருமூச்சை உதிர்த்து விட்டு நீண்ட நேரம் மௌனமாய் இருந்தது. குரங்கிற்கு நான் பேசியது பிடிக்கவில்லையென்பதை உணர்ந்து கொண்டு நானும் எதுவும் பேசாமல் நின்றேன். நீண்ட மௌனத்தின் பின் திடீரென்று.

''உனக்கு என்னில் நம்பிக்கையில்லை, அப்படித்தானே'' என்றது.

''யார் சொன்னது'' என்றேன்.

''யாரும் சொல்லத் தேவையில்லை. எனக்குத் தெரியும் உனக்கு என்னில் நம்பிக்கை இல்லை. நீ வளர்த்த கிளி உன்னைக்கொத்தி விட்டுப் பறந்து போனதில் இருந்து உனக்கு யார் மீதும் நம்பிக்கையில்லை. உன்னைத் திருத்தமுடியாது. யாராலும் திருத்த முடியாது. என்ன செய்தும் திருத்த முடியாது.''

குரங்கு வெகுவாய்க் கோபித்துக்கொண்டது. அதைச் சமாதானம் செய்ய நான் மிகுந்த சிரமப்படவேண்டியிருந்தது. முடிவில் ஒருவாறு தான் சமாதானமாய்ச் சொல்லிக்கொண்டு என்னிடம் விடைபெற்றுக் கொண்டது. அன்றிலிருந்து அதன் போக்குகள் மாற்றமாயிருந்தன. முன்போல் என்னுடன் அது மனம் விட்டுச் சிரித்துக் கதைக்கவில்லையென்று நினைக்கின்றேன். என்னுடன் கழிக்கும் நேரங்களையும் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைத்துக் கொள்ளத் தொடங்கிற்று. மூலிகைகள் கொண்டுவருவதும் சாறு பிழிந்து விடுவதும் மேனியைத் தடவி விடுவதும் எப்போதோ நிகழ்ந்து முடிந்தவையாய் ஆகின. ஒரு நாள் இது பற்றி நேரிடையாகவே குரங்கிடம் கேட்டபோது.

''என்னில் எந்த மாற்றமும் இல்லை. அது அவரவர் பார்ப்பதைப் பொறுத்தது.'' என்று எடுத்தெறிந்து பேசியது. என்னிலிருந்து குரங்கு வெகுதூரம் விலகிப் போய்விட்டதென்பதை அன்றுதான் உணர்ந்தேன். அதன்பின் நாங்கள் இணைந்தபடி எங்கும் →

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்றதேயில்லை. பின்னொரு நாள் நான் தனியே புல்வெளிக்குச் சென்றபோது, புதியதோர் துணையுடன் குரங்கைக் கண்டேன். குரங்கை அணுகி

''இதற்காக என்னை நீ வெறுத்திருக்கத் தேவையில்லை. முன்பே நான் சொன்னது போல் சினேகமாய்ப் பிரிந்திருக்கலாம்'' என்றேன்.

''என்னுடன் எதுவும் பேசாதே. நீ யாரோ நான் யாரோ, என்னை உனக்குத் தெரியாது என்றே நினைத்துக் கொள்'' மிக உக்கிரமாய் முகத்தை வைத்துக்கொண்டு குரங்கு பதில் சொல்லிவிட்டு தன் புதிய துணையுடன் அப்பால் போனது.

திரும்பி வரும் போது மழை விடாது பொழிந்து கொண்டிருந்தது. கன்னம் பிசுபிசுக்க துடைத்த போது கையெல்லாம் ரெத்தமாய் இருந்தது. ரெத்த மழையா? இல்லை. அது குரங்கு சப்பிய என் முகத்திலிருந்து கசிந்தவை என்பது அறைக்கு வந்து கண்ணாடியைப் பார்த்தபோதுதான் தெரிந்தது.

''இப்போதென்ன?''

மீண்டும் காகங்களும் இதரபறவைகளுமாகப் பயந்து கொண்டு, குரங்கு சப்பிய என் முகத்தை மறைத்தபடி இருண்ட குகையொன்றில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அப்பாவின் தொல்லையில்லாமல், இங்காவது கல்லாலான ஒரு கனமான போர்வையைச் செய்து கொள்வோம் என்று முற்படும் போதெல்லாம் இங்கும் அப்பா வருகிறார். முன்பு கண்களால் மட்டும் வேண்டாமென்று சொன்னவர் இப்போது உபதேசமும் செய்கிறார். நேற்றுக்கூட நள்ளிரவில் எழுந்து நான் கல்லில் நார் உரிக்க முனைந்த போது, ஆவேசமாய் வந்தார்.

''எத்தனை தரம் உன்னிடம் சொல்லுவது இந்த வேலையை விட்டு விடு என்று'' என்றார்.

''இல்லை. எனக்குப் போர்வை வேண்டும். இந்த இருண்ட குகைக்குள்ளே என்னால் தொடர்ந்தும் இருக்க முடியாது. நான் வெளியே போக வேண்டும். எனக்குப் போர்வை வேண்டும்'' என்றேன்.

''நீ தாராளமாக வெளியே போகலாம். போர்வையின்றியே நீ போகலாம். போர்வை வேண்டாம்.''

''இல்லை எனக்கு வேண்டும். மற்றவர்களிடம் உள்ளது போல் எனக்கும் போர்வை வேண்டும். இங்கே பாருங்கள் என்னில் எத்தனை புண்கள் புண்களைக் காப்பாற்ற குரங்கிடம் தஞ்சமாகி அது வேறு புண்கள். எல்லாம் உங்களால் தான் என் போர்வையை நீங்கள் பறித்தெடுத்ததால் தான்''

''இல்லை மகனே, நீ போர்வையையே நினைத்துக் கொண்டிருப்பதால் என்னைப் புரிகிறாயில்லை. உனக்குப் போர்வை தேவையில்லை என்பதை நீ ஒரு நாள் உணர்வாய்...''

''எப்போது''

''விரைவில்''

''விரைவிலென்றால் எப்போது? காகங்களும் இதரபறவைகளும் என்னைக் கொத்திக் கொத்தி என் ரெத்தமெல்லாம் உறிஞ்சியபின், மரணம் வந்து என் கழுத்தை இறுக்கும் கடைசி நிமிடத்திலா''

அப்பா புன்னகைத்தார். பிறகு;

''நீ மிகுந்த கோபத்திலிருக்கிறாய் என்றெண்ணுகிறேன். நான் பிறகு வருகிறேன்'' என்றபடி மறைந்து போனார்.

இனியும் முடியாது. இருண்ட இக்குகைக்குள்ளே தொடர்ந்தும் ஒளித்திருக்க என்னால் முடியாது. நான் போர்வை நெய்யப் போவதில்லை. நெய்து கொள்ள அப்பா விடப்போவதுமில்லை. போர்வையென்ன போர்வை? அது இன்றியே வெளியே போவோம். கொத்தவிரும்பும் பறவைகளெல்லாம் வந்து என்னைக் கொத்தட்டும். கொத்திக் கொத்தி கொஞ்சம் கொஞ்சமாக என்னைக் கொல்லட்டும். நான் வாழ்ந்துதான் என்ன ஆகப்போகிறது. யாருக்காக வாழ வேண்டும் நான் இறந்ததைப் பார்த்து அப்பாவும் குரங்கும் மற்றப்பறவைகளும் சந்தோசமடையட்டும்.

இதோ நீண்ட நாட்களின் பின் இருட்டுக் குகையைக் கடந்து வெளியே வருகிறேன். உச்சி வெயில் கண்கள் கூசுகின்றன. பறவைகள் எதனையும் காணவில்லை. நடக்கிறேன். இலக்கற்ற நடை. முற்புதர்களும், பற்றைகளும் குறுக்கிடுகின்றன. முட்கள் என் புண்களில் கொழுவி உயிர்போகும்படியாய் வலிக்கிறது. புண்கள் புதுப்பிக்கப்பட்டு ரெத்தம் கசிகிறது. ரெத்தவாடையை முகர்ந்தறிந்ததோ தெரியவில்லை, அதோ காகமொன்று என்னை நோக்கிப் பறந்து வருகின்றது. போர்வையைப் பறித்தெடுத்த அப்பாவைத் திட்டுகிறேன். போர்வை, போர்வை, போர்வை..... வாய் புலம்புகின்றது.

இதோ காகம் நெருங்கி விடுகிறது. தொடுதூரத்தில் நெருங்கி விடுகிறது. தலையில் ஏதோ அரிக்கிறது. சொறிவதற்காய் கையை உயர்த்துகிறேன். காகம் திடுக்கிட்டுப் போய் விலகிச்செல்கிறது. மரமொன்றில் இருந்து கொண்டு இயலாமையில் பார்க்கிறது.

போர்வை தேவையில்லையென்று அப்பா சொன்ன தின் காரணம் மெல்லப் புரிகிறது.

வானொலி

# நாடக விழா

## விமர்சனம் மீதான சில குறிப்புகள்

சித்திரபுத்திரனால் எழுதப்பட்டு ''மேடை நாடகமொன்றின்'' படத்துடன் ஜூன் 13 - ஜூன் 26 சரிநிகரில் வெளியான 'வானொலி நாடக விழா' விமர்சனம் கண்டோம். மகிழ்ச்சி. இத்தகைய பத்திரிகை விமர்சனமொன்றுக்கு வழிகோலிய நாடக விழாவொன்றைமிகுந்த சிரமத்தின் மத்தியில் நடாத்தி முடித்துள்ள எமக்கு, உண்மையில் இந்த விமர்சனம் ஆத்ம திருப்தியையே தருகின்றது. இருப்பினும், 'சித்திரபுத்திரன்' எழுதிய அத்தனையும் ''தலைவிதியைப்'' போல சரியாக நிர்ணயித்தது அல்ல. அவரது எழுத்தில் காணப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக எமது கருத்தினைத் தெரிவிக்க வேண்டியுள்ளது.

நாடகவிழா நாடகங்களில் இடம் பெற்ற ஏழு நாடகங்களது கதையமைப்பு, வசன அமைப்பு, பாத்திர அமைப்பு என்பவை தொடர்பாக அவர் கூறிய கருத்துக்களை மறுத்துரைக்க வரவில்லை. நாடகங்கள் போட்டிக்கென வந்தவை. நான்கு நடுவர்களால், அதுவும் வானொலி நாடகத்துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள நடுவர்களால் நன்கு பரிசீலிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டன. 4 நடுவர்களதும் புள்ளிகள் கூட்டப்பட்டு, அதன்பின்னரே பரிசுக்குரிய முதல் 5 நாடகங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன. 6ம், 7ம் இடங்கள் வழங்கப்படவில்லை. ஆனால் புள்ளி அடிப்படையில் 6ம், 7ம் நிலையில் இருந்த நாடகங்கள் ஒலிபரப்பிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

நடுவர்களின் பரிசீலனையின் பின்னர் முதல் 7இடங்களுக்குமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த நாடகங்களின் கதையம்சத்தை நாம் மாற்ற முடியாது. எனவே கதையம்சம் குறித்து விமர்சகர் கூறியுள்ள கருத்துக்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. விமர்சகருக்கு பிடித்தமான கதைகள் என்று குறிப்பிட்ட கதைகள் வானொலி, நேயர்கள் பெரும்பாலோருக்கு பிடிக்காத கதை என்பதையும்'' குறிபிட்டே ஆகவேண்டும் அனுப்பியிருந்த விமர்சனங்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

சரி கதையை விட்டு விட்டு தயாரிப்பு தொடர்பான விமர்சனங்களைப் பார்ப்போம். அதற்கு முன்னர் வானொலித்தயாரிப்பாளர் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் பற்றிக் கூறிவிடுவது பொருத்தமென்று நம்புகின்றோம். வானொலி நாடகக்கலைஞர் தெரிவிற்குத் தோற்றி அதில் சித்தியடைந்த கலைஞர்கள் மட்டுமே வானொலி நாடகத்தில் பங்குபற்ற முடியும் என்பதை சித்திரபுத்திரன் உட்பட அனைவரும் அறிவர். இந்த வானொலி நடிகர் தேர்விற்கு ஆர்வத்துடன் வந்து கலந்துகொண்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்கள் அனைவரும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் போது சோபிப்பதில்லை. என்பது வேறு விஷயம். இது தவிர பல்வேறு காரணங்களுக்காக இவர்கள் நாடகங்களில் கலந்து கொள்ள வருவது கிடையாது. காரணங்களோ பல. சிலர் இறந்து விட்டனர், சிலர் புலம்பெயர்ந்து விட்டனர். சிலர் பட்டியலில் பெயர் இருந்தால் போதுமென்ற எண்ணம் கொண்டவர்கள், சிலர் தமது முகவரி மாற்றம் பற்றி அறிவிக்காதவர்கள். ஒரு சிலர் நடிகர் தேர்வில் சிறப்பாகச் செய்திருந்தும் ஒலிப்பதிவிற்கு வரும்போது ஒழுங்காக நடிக்காதவர்கள். சிலர் திருமணமானதும் கணவர் அல்லது மனைவியின் வேண்டுகோளின் பேரில் நடிக்காதவர்கள். (கணவனுக்கு அல்லது மனைவிக்குப் பயந்து வந்து நடித்து விட்டுப் போகின்ற கலைஞர்களும் இருக்கிறார்கள்.)

காதலியாக நடித்ததற்கு அலுவலகத்தில் கூட வேலை செய்யும் நண்பிகள் கண்டித்ததற்காக நடிக்க வராதவர்களும் உள்ளனர். நாடக ஒலிப்பதிவிலிருந்து கிடைக்கும் சன்மான 100/= ரூபாவிற்கும் மேலதிகமாக சன்மானம் கிடைக்கும் ஒரு நிகழ்ச்சி வேலை வந்து விட்டால் - நாடக ஒலிப்பதிவிற்கு வராத கலைஞர்களும் உள்ளனர். நாடக ஒப்பந்தப்பத்திரம் தபாலில் வந்து சேரவில்லை என்று வராதவர்களும் உள்ளனர். வேறு வேலை காரணமாக வரமுடியாவிட்டால் தபால் திணைக்களத்தை குறைகூறுபவர்களும் உள்ளனர். இது தவிர தனது சுகவீனம், குடும்ப அங்கத்தவர் சுகவீனம், திருமண வீடு, மரண வீடு, என்பவை காரணமாக வராத கலைஞர்களும் உள்ளனர்.

இப்படி ஆயிரம் காரணங்கள்: இதைத்தவிர வானொலி நாடகத் தயாரிப்பிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியத்தைப் பற்றியும் கூறவேண்டியுள்ளது. அரை மணிநேர நாடகத் தயாரிப்பிற்கு மொத்தமாக 1050/= ரூபா மட்டுமே எம்மால் செலவிட முடியும். நாடகப்பிரதி எழுத்தாளருக்கு அதிகபட்சம் 450/= ரூபா. கலைஞர் சன்மானம் ஆகக்கூடியது 6 கலைஞர்களுக்கு ஆளுக்கு 100/= ரூபா. வீதம் 600/= ரூபா. மொத்தம் 1050/= ரூபா. தற்செயலாக ஒரு நாடகத்தில் 8 பாத்திரங்கள் வந்துவிட்டால் இரண்டு நடிகர்கள் இலவசமாக நடிக்க வேண்டும்.

அடுத்து நாடக ஒலிப்பதிவுக்கான கால அவகாசம் அரை மணிநேர நாடக ஒலிப்பதிவிற்கு 2 மணித்தியால கலையக நேரமும் ஒத்திகை நேரமும் கிடைக்கிறது. இந்த 4 மணி நேரத்தினுள் நாடகப்பிரதி இரு தடவைகள் ஒத்திகை பார்க்கப்பட்டு ஒலிப்பதிவு நடைபெறும். உண்மையில் பல்வேறு காரணங்களால் இந்த 4மணி நேரத்தையும் ஒழுங்காகப் பயன்படுத்த முடிவதில்லை. இவற்றுக்கும் பல காரணங்கள். ஒத்திகைக்கு கலைஞர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் வந்து சேர்வதில்லை. கலைஞர் ஒருவர் வருவாரா மாட்டாரா என்று தயாரிப்பாளர் நிலையத்தின் வாசலுக்கும் ஒத்திகைக் கூடத்திற்குமிடையில் ஒருவித அந்தரத்துடன் அலைவதை நீங்கள் நாடக ஒலிப்பதிவு நாட்களில் காணலாம். எப்படியும் இந்த இரண்டு மணி நேரத்தில் ஒரு மணி நேரம் உபயோகிக்கப்பட்டாலே பெருங்காரியம். இழந்த ஒரு மணி நேரத்திற்காக ஒலிப்பதிவு நேரத்தில் கொஞ்சநேரத்தை எடுத்துக் கொள்ளவேண்டியேற்படும். அவ்வாறான வேளைகளில் ஒலிப்பதிவு நேரம் குறைந்து விடும். மீண்டும் அந்தரப்படுவது தயாரிப்பாளரே. இதைத்தவிர கலையக வசதிகள், இயந்திரக்கோளாறுகள் என்று வேறு சிக்கல்களும் வருவதுண்டு.

இத்தகைய பல்வேறு சிக்கல்களின் மத்தியில் ஒரு நாடகம் தயாரிக்கப்படுவதை அரை மணி நேரமோ முக்கால் மணி நேரமோ நாடகத்தை உட்கார்ந்து கேட்கும் ஒருவர் அறிந்திருக்கமாட்டார்தான். இங்கு நாம் இவற்றை கூறுகின்றோமென்றால், எதற்கும் சாக்குபோக்குச் சொல்லவோ, அல்லது எமது செய்கைக்கு சப்பைக் கட்டுக்கட்டவோ அல்ல. இவை ஒரு வானொலி நாடகத்தயாரிப்பாளன் எதிர் நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் என்பதை நீங்கள் அறிந்திருக்கவேண்டும் என்பதற்காகவே.

இனி விமர்சனத்திற்கு வருவோம்: குருவிக்கூடு நாடக விமர்சனத்தில், எழில்வேந்தன் தனது தயாரிப்பில் தானே நடித்து மகிழ்ந்ததாக குறிப்பிட்டார். இதில் மகிழ்வதற்கு என்ன இருக்கிறதெனப் புரியவில்லை. உண்மையில் இந்தப் பாத்திரத்திற்காக அழைக்கப்பட்டிருந்த கலைஞர் ஒருவர் ஒலிப்பதிவிற்கு வராமல் கடைசி நேரம் வரை அவருக்காகக் காத்திருந்து கலையகத்திற்கு வாசலுக்கும் இடையே ஓடி ஓடி, களைத்துப்போய் ஒலிப்பதிவை இரத்துச்செய்து ஏனைய கலைஞர்களை ஏமாற்றக் கூடாது என்ற ஒரே நோக்கிற்காக நான் அப்பாத் திரத்தை நடிக்க வேண்டியிருந்தது. விமர்சகர் கூறுவது போல் மகிழ்வடைவதற்கல்ல. தயாரிப்பு, நடிப்பு என இரண்டு வேலைகளைப் பார்க்கும் ஒருவர் படும் அவஸ்தையை விமர்சகர் அறியாரோ நானறியேன். இதைத்தவிர சித்தானந்தன் (சித்தார்த்தன் அல்ல) நடிப்பை அவர் 'வாசித்ததாகக்' குறிப்பிட்டிருந்தார். கலைஞர்களை ஒவ்வொரு பாத்திரத்திற்கும் தெரிவு செய்யும் போது தயாரிப்பாளர் தனது கற்பனைப் பாத்திரத்திற்கு உயிர் கொடுக்கக் கூடிய கலைஞர்களை, அவரது முன்னைய அனுபவங்களைக்கொண்டு தெரிவு செய்கிறார். அந்த வகையில் சித்தானந்தன் அப்பாத்திரத்தை திறமையாகச் செய்தார் என்பதே சித்திரபுத்திரன் தவிர்ந்த ஏனையோரின் கருத்தாகும்.

இதைத்தவிர நாடக விமர்சகர் தனது விமர்சனத்தில் வேறு சில நடிகர்களின் நடிப்பையும் தாக்கியுள்ளார். கே.ரி. சிவகுருநாதன் அவர்கள் பழைய எழுத்தாளராக இருக்கலாம். ஆனால், நடிப்பில் புதிய கலைஞர் பட்டியலில் பெயர் இடம் பெற்றுள்ள கலைஞர். நாகராணியும் அண்மைக்காலங்களாக நடிப்பில் ஈடுபட்டு வருகின்ற ஒரு கலைஞர். புதிய கலைஞர்கள் நடிக்க வேண்டும் என்று ஆதங்கப்படும் இந்த விமர்சகர் இந்தப் புதிய கலைஞர்களில் என்ன பெரிய குறையைக் கண்டாரெனப் புரியவில்லை. இதைவிடுத்து தற்போது கலைஞர் பட்டியலில் பெயர்கள் இல்லாத நடராஜசிவம், மார்க்கண்டன் மற்றும் பரீஸுக்குப்புலம் பெயர்ந்த ராஜகோபால் போன்ற கலைஞர்களுக்காக இவர் குரல் எழுப்பியிருப்பதும் சற்று வியப்பாகவுள்ளது. கொழும்பிலிருந்து கொண்டே ஒரு கலைஞர் ஒலிப்பதிவிற்காக வருவது சிரமமாக இருக்கும் இவ்வேளையில், திருகோணமலையில் வசிக்கும் வேதநாயகம், மயில்வாகனம் போன்றோர் நடிக்காததையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கலைஞர்கள் திடீரென கைவிடும் பட்சத்தில் 6 நாடகப் பாத்திரங்களுக்கு மேல் ஒரு நாடகம் அமையும் பட்சத்தில் எவ்வித சன்மானமுமின்றி தமது நேரத்தையும் செலவிட்டு எமக்கு உதவும் வானொலி நிலையத்தில் நிரந்தரமாகப் பணியாற்றும் கலைஞர்களுக்கு ''தங்கள் குரலைத் தவிர ஏனையவர்களின் குரலைக் கேட்கச் சகிக்காத வானொலிக்காரர்கள்'' என சிறப்புப் பெயர் தந்த சித்திரபுத்திரனார் எதனை மனதில் வைத்துக்கொண்டு அப்படிக் கூறினாரோ தெரியவில்லை. ''தாங்களை வென்று ஜாம்பவான்கள் இல்லையென்ற முதுகில் தட்டிக் கொள்ளும் ஒரு சிலரின் ஆதிக்கத்தில்'' வானொலி நாடகம் இருப்பதாகக் கூறுகிறார் சித்திரபுத்திரனார். ஆனால், குண்டுச் சட்டிக்குள் குதிரையோடும் தயாரிப்பாளர்கள் என்று ஒரு எழுத்தாளர் எமது தயாரிப்பாளர்கள் பற்றிக் கூறிய விமர்சனத்தைக் கூடிய ஒலிபரப்பக்கூடிய துணிச்சலும், விமர்சனங்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய நடுநிலைமைக்கொள்கையும், ஒலிபரப்பின் எத்துறையாயினும் அவற்றைத் திறமையுடன் வழங்கக்கூடிய ஆற்றலுமுள்ள தயாரிப்பாளர்கள் - ஒரு குழுவாக இயங்கும் ஒரு சூழலே தமிழ்த் தேசிய சேவையில் உருவாகியுள்ளது. அது மட்டுமன்றி இங்கு பணிபுரியும் தயாரிப்பாளர்கள் வாய்ப்புக்களை வழங்குவதற்கு உறவினர்களோ நண்பர்களோ இல்லை. திறமையுள்ளவர்களைத் தேடிப்பிடித்து அவர்களை ஒலிபரப்பு நீரோட்டத்தில் சேர்த்துக்கொள்ளும் புதிய சூழலும் உருவாகியுள்ளது. நாடக விழா நாடகங்கள் 4 வெவ்வேறு தயாரிப்பாளர்கள் ஈடுபட்டனர். தயாரிப்புத் தொடர்பாக அவர்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டது. ஒரு நாடகத்தில் நடித்தவர்கள் இன்னொரு நாடகத்தில் நடிக்காமலிருக்குமாறு பார்த்துக் கொள்ளப்பட்டது. (கலைஞர்கள் ஏமாற்றிய சந்தர்ப்பங்களில் கைகொடுத்த ஒரு சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட நாடகங்களில் நடிக்க வேண்டி ஏற்பட்டது வேறு விஷயம்) நாடக விழா மட்டுமன்றி ஏனைய எமது நிகழ்ச்சிகள் தொடர்பான காத்திரமான விமர்சனங்களையும் நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

எஸ். எழில்வேந்தன்,
(இயல் நாடகக் கட்டுப்பாட்டாளருக்காக)
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன
தமிழ் தேசிய சேவை.

## வாழ்தல் எனும் மரணிப்பு

தண்டவாளத்தினூடு
சில்லுகள் அற்று
கரிய நிற ரயில்
நகர்வதாக
அரு கருகே
விறைத்து நிற்கும்
பாறைகளையும் கள்ளிச்
செடிகளையும் விழுங்கிச்
செல்வதாக
நான்
வீழ்ந்து வீழ்ந்து
நெடுஞ்சாண் கிடையாக
கிடக்கின்றேன்
எனைத் தடவிக்கொண்டு
ரயில் செல்வதாக
நிலாக்கால பனிக்
குளிர்ச்சியாய் எச்சில்
பதிய முத்தம் இட்டு
செல்வதாக
அழுத்தமான வெறுப்புடன்
வீடு செல்கின்றேன்
பக்கத்து வீட்டுக் கறுப்பு
நாய் குரைக்காமலும்
புன்முறுவலிக்காமலும்
எனைப் பார்த்து விட்டு
போகின்றது
பொலிஸ் நிலையங்களில்
தேடும் வேலையற்று
நான் கெதியில் வீடு
வந்ததற்காக அம்மா
மகிழ்கிறா. நான்
உள் செல்கிறேன் வெறுமையாக

அ. றஜீசன் 24.06.96

www.tamilarangam.net



உரை



## ஆண் தலைமை ஆட்சி என்றால் என்ன?

கமலா பாஸின்
தமிழில் புஸ்பா சிவகுமாரன்
வெளியீடு :சமூக விஞ்ஞானிகள் சங்கம் 425/15 திம்பிரிகஸ்யாய வீதி கொழும்பு-5
விலை 50/-

பெண்ணியம் தொடர்பாக இன்று பரவலாகப் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்றது. எனினும் இலங்கையில் தமிழ் மொழியில் இது தொடர்பாக மிகக் குறைந்தள விலேயே எழுதப்படு கின்றது. இதற்குக் காரணம் பெண்ணிலைச் சிந்த னைகள் ஓர் உயர் மட்ட குழாத் தோடு சம்பந்தப் பட்ட ஒன்றாகக் கணிக்கப்படுவதும், பண்பாட்டு அடர்த்தி கூடிய எம் சமூகங்கள் அதனை உள்வாங்கிக் கொள்வதில் தயக்கம் கொள்வது மாகும்.

எனினும், இது தொடர் பான வெளியீடுகள் பெண்ணியம் தொடர் பில் அக்கறைப்படும் பல்வேறு அமைப்புக்களால் வெளியிடப்பட்டு வருகின்றன. இருந்த போதிலும் இவை பரந்த வாசகர்களைச் சென்றடைவதில் தோற்றுப் போய்விடுகின்றன. மக்களை அதிகம் சென்றடையும் எம்நாட்டு நாளாந்தரிகளும், வாராந்தரிகளும் ஆகக்குறைந்தது இதுபற்றிய அறிமுகத் தினையாவது செய்தனவா என்றால் இல்லையென்றே சொல் லலாம். இவை இது பற்றிய ஒரு களத்தை ஏற்படுத்துவதில் தான் தவறிப் போயிருந்தன வென்றால், மக்களை அதை நெருங்காது செய்வதிலும் பாரிய தவறிழைத்து விடுகின்றன.

தினகரனில் வாராவாரம் பெண் பிரமுகர்களைப் பேட்டி காணும் 'ஸாகரி' என்பவர் தன்னை அடையாளப்படுத் தவோ என னவோ பெண்ணிலை வாதம் பற்றிச் சில கேள்விகளை யார் யாரிடமோ எல்லாம் கேட்டு விடுகிறார். அவர்களும் வாய்க்கு வந்ததுபோல எதையெதை எல்லாமோ சொல்லி வாசகர்களுக்கு அருவருப்பைத் தந்து அதிலிருந்து தூரமாக்கியே விடுகி றார்கள். இன்னொரு உதாரணத்துக்கு அ. தங்கேஸ்வரி தினகரனில் முன்பொருமுறை எழுதியிருந்த - இதற்கு மறுப்பும் எழுதப்பட்டது- கட்டுரையைக் குறிப்பிடலாம். இன்னும் சில அடையாளப்படுத்தப் பட்ட பெண்ணிலைவாதிகள் தம க்குக் கிடைக்கும் தேசிய இதழ் சந்தர்ப்பங்களை இச்சிந்தனையின் அடியை அறிமுகப்படுத்தப் பயன்படுத்துவதை விடுத்து பயனக் கட்டுரைகளாக எழுதிக் கொண்டிருக் கின்றனர்.

உலகளாவிய ரீதியில் பேசப்படுகின்ற ஒரு விடயம் இலங்கையர்களை குறிப்பாய்த் தமிழ் வாசகர்களைப் பொறுத்த வரை அந் நியமானது. இவ்வாறான புதிய சிந்தனைகளை முதலில் அறிமுகம் செய்த பிறகுதான் அது பற்றிய வாதப் பிரதிவாதங்களில் இறங்கலாம்.

இந்நிலை தற்போது ஓரளவு மாறிவருகிறது. இது தொடர்பாக சித்ரலேகா மௌனகுரு 'பெண்ணி லைச் சிந்தனைகள்' என்ற ஒரு நூலை வெளியிட் டிருந்தார். அது வாசகர்களால் எந்தளவுக்கு உள்வாங் கப்பட்டு, அது தொடர்பான வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தி யது என்பது தெரியவில்லை.

'பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனமும்' சிறுசிறு நூல்களை வெளியிட்டிருக்கிறது. பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் 'நிவேதினி' என்ற பெண்ணிலைச் சஞ்சி கையையும் வெளியிடுகிறது. இதன் விலை அதனை எந்தளவுக்கு வாசகர்களிடம் கொண்டு போய்ச் சேர்க்குமோ தெரியாது!


தற்போது சமூக விஞ்ஞா னிகள் சங்கம் பெண்ணியத்தின் அடிவேரை ஒரு நூலாக அறிமுகப் படுத்தியிருக்கிறது. "ஆண் தலைமை ஆட்சி என்றால் என்ன?" (What is Patriarchy?)என்ற கமலா பாஸின் என்பவரின் நூலின் தமிழாக்கம் அது. தமிழ்ப்படுத்தியிருப்பவர் புஸ்பா சிவகுமாரன். இந்நூலாசிரியர் "**பெண்ணிலைவாதம் தொடர்பான சில பிரச்சினைகளும் தென் ஆசியாவில் அதன் பொருத்தமு டைமையும்..**" என்ற மிகப் பிரபல்ய மான நூல் ஒன்றையும் வெளியிட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. எனினும், அது இன்னும் மொழிமாற்றம் செய்யப்பட வில்லை.

குறிப்பிட்ட இந்நூல் ஆண் தலைமை ஆட்சி முறைமையின் தோற்றப்பாட்டை பல்வேறு மேற் கோள்களுடனும், ஒப்பீடுகளுடனும் விளங்கப்படுத்துகிறது. கேள்வி பதில் அமைப்பிலேயே ஆக்கப்பட்டி ருக்கும் இந்நூல் பெண்ணியத்திற் கான தோற்றப்பாட்டின் தேவையை வரலாற்றுத் தகவுகளுடன் சுட்டு கிறது. ஆண் தலைமையுருவாக் கத்திற்கு ஏதுவாக அமைந்த காரணிகளையும் அவை எப்படிப் பெண்களைப் பின்தள்ளினவென்றும் நூல் விளக்கிச் செல்கிறது. பெண்ணி யம் தொடர்பான ஆழ்ந்த புலமையின் கீழ் இந்நூல் எழுதப் பட்டிருக்கிறது. பல பெண்ணிலைச் சிந்தனைவாதிகளின் -குறிப்பாக லறிஜுவீஊ நிஜஷிஜி என்பவரது மேற்கோள்கள் அதிகம் கையாளப் பட்டுள்ளன.

நூலாசிரியை தென் ஆசியா வைச் சேர்ந்தவரென்பதால் தென் ஆசியாவில் ஆண் தலைமை ஆட்சி முறையின் தோற்றம் பற்றியும் எழுதியுள்ளார்.

இந்நூல் பெண்ணியம் தொடர்பான ஆரம்ப நிலைகளை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த உகந்தது தமிழில் பெண்ணியம் தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் ஏற்புடைமைகள் தோன்றவும் இந் நூல் வழிவகுக்கலாம். எனினும் இது எந்தளவு வாசகர்களைச் சென்றடை யும் என்பது கேள்வியே! ஏனெனில், சமூக விஞ்ஞானிகள் சங்கம் மும்மொழிகளிலும் நல்ல பல நூல்களை வெளியிட்டு வருகிறது. (தமிழில் டாக்டர் மேரி ரட்னம், **பெண்கள் உரிமைகளை மனித உரிமைகளாக அங்கீகரித்தல்...** போன்ற இரண்டு நூல்களே இதுவரை வெளிவந்துள்ளன. இதோடு மூன்றாவது.) இவை தமிழ் மொழிநூல் பொது விற்பனை இடங்களில் அனேகமாய்க் கிடைப்ப தில்லை. தெரிந்த வட்டத்துக்குள் மட்டுமே சுருங்கிவிடுகிறது. இந்நூல் அத்தடையை மீறிப் பரந்த வாசகர் வட்டத்தைச் சென்றடைந்து சிந் தனைத் தேட்டங்களுக்கு வழி வகுக்கும் என எதிர்பார்க்கலாம்.

-நில்ஷா



## ஈழத்து வாழ்வும் வளமும்

(இரண்டாவது பதிப்பு)
பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
வெளியீடு : குமரன் பதிப்பகம்
இந்திய விலை:28/-

பேராசிரியர் கணபதிப் பிள்ளை எழுதிய 15 கட்டுரைகளின் தொகுப்பு ஈழத்து 'வாழ்வும் வளமும்' எனும் தலைப்பில் சிறு நூலாக 34 வருடங்களின் முன்னர் (1962) வெளிவந்தது. இது மீண்டும் மீள்பதிப்பாக 1996ல் வெளி வருகிறது. இதற்கு பேரா. சிவத்தம்பி முன்னுரை வழங்கியுள்ளார்.

இக்காலப் பகுதியிலேயே பிரதேசங்கள் பற்றிய சிறப்பாய்வுகள் பல வந்துள்ளவெனினும், ஏறத்தாழ 34 வருடங்களுக்குப் பின்னரும் இந் நூலைப் போன்று ஈழத்துதமிழரின் பண்பாட்டின் சகல அம்சங்களையும் இணைத்துத் தருகின்ற ஒரு தொகுதி வேறு இல்லை என்றே கூறல் வேண்டும்' என்கிறார், பேரா. சிவத்தம்பி முன்னுரையில். இது உண்மையில் ஏற்புடைய கருத் தென்றே கூறலாம்.

பேராசிரியர் கணபதிப் பிள்ளை 'ஈழத்தமிழர்' என்ற கருத்தாக்கம் குறித்து ஒரு அறிவார்ந்த தேடலில் ஈடுபட்ட தோடு அதனை கட்டமைக்கும் வகையிலும் உணர்த்தும் வகை யிலும் தனது சிந்தனைகளை விரித்துச் சென்றுள்ளார். இதற்கு இவர் எழுதிய எழுத்துக்களே சாட்சி.

தமிழ்ச் சூழலில் தேசியம் வாதம் குறித்து சிந்திப்பது, விவாதிப்பது முன்னரை விட இன்று மேன்மேலும் வரலாற்றுத் தேவை யாகியுள்ளது. இந்நிலையில் பேரா சிரியரின் படைப்புகள் இன்னும் விரித்து நோக்கப்படவேண்டும். மொழிவழித்தேசியம் ஒன்றை கட்ட மைக்க முற்பட்டுள்ளதை இவ்விடம் நாம் காணலாம். அதோடு ஈழத்தமிழர் வரலாறு குறித்த வரலாற் றெழுந்தியல் முறைமைக்கும் சில அடிப்படையான முயற்சிகளில் ஈடுபட்டவர். இதனை நிறைவு செய்வதில் பெரும் ஆர்வமும் கொண்டிருந்தார். 'சங்கிலி' எனும் நாடகத்திற்கு இவர் எழுதிய யாழ்ப்பாண இராச்சிய வரலாறும் எனும் ஒரு குறிப்பையும் இவர் விட்டுச் செல்கிறார். அதாவது ஓர் முழுமையான ஈழத்தமிழர் வரலாறு எழுதுவதே தனது நோக்கமென்றும் அதற்கு முதற்படியாக யாழ்ப்பாண வரலாற்றை கூறியுள்ளேன். இது போல் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களின் வரலாற்றையும் எழுதுவதே தனது நோக்கம் எனக் கூறி முடிக்கின்றார். இந்நோக்கம் முடிவு பெறாமலேயே போய்விட்டது.

ஈழத்தமிழர் பண்பாடு என்பது உயர்ந்தோர் பண்பாடாகவே கட்ட மைக்கப்படும் முறைமைக்கு மாறாக ஒதுக்கப்பட்டோரின் பண்பாட்டு செழுமைகளையும் வெளிக்கொணர இன்னும் பண்பாடு குறித்து தேட லையும், செல்வதனை நாம் இவரிடம் அவதானிக்கலாம்.

இந்த நூல் ஈழத்து வாழ் வையும், வளத்தையும் சொந்த நாட்டவர்க்கு உணர்த்துவதோடு பிற நாட்டவர்க்கும் எடுத்துக் காட்டும் வகையிலேயே நூலுருப் பெற்றது.

இன்று இதன் உணர்கை பன் மடங்கு அதிகரித்துள்ளது. இந்நிலை யில் மீளவும் இது வெளிவருவது வரலாற்றுத் தேவையின் நிமித்தம் என்றே கூறலாம்.

குறிப்பாக 80க்குப் பின்னர் தோன்றியுள்ள தலைமுறையினர் அறியாத பல விடயங்களை நோக்கி கவனத்தை குவிக்கவும், இன்னும் இன்னும் அறிவார்ந்த ரீதியில் சிந்திக்கவும் இந்நூல் அமையும் என்றே கூறலாம்.

இவ்வகையில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை குறித்த மீள் பார்வை ஒன்றை முன்வைக்க வேண்டிய தேவையும் இன்று ஏற்பட்டுள்ளது.

-மாலின்-



## மலையகமும் இலக்கியமும்

அந்தனி ஜீவா
வெளியீடு: மலையக வெளியீட்டகம்
விலை: 65/-

ஈழத்து தமிழிலக்கியத்தின் பரப்பினுள்'மலையக இலக்கியம்' தனித்துவமானது. செழுமை யானது. இந்த தனித்துவங்கள் இந்த மக்களது வாழ்வியல் அனுபவநிலைப்பட்ட ஒன்றாகும். இதனை 'மலையகமும் இலக்கியமும்' எனும் பொருள் கொள்ளலில் விரிந்து சிந்திப் பதற்காக அதனது அம்சங்களை கோடிட்டுக் காட்டும் வகையில் அந்தனிஜீவாவின் நூல் அமைந்துள்ளது. இது ஓர் அறிமுக முயற்சி தான்.

மலையகமும் இலக்கியமும் குறித்து சுமார் 78 பக்கங்களில் பதிவு செய்துள்ளார். வாய்மொழி இலக் கியம், கவிதை, சிறுகதை, நாவல், கலைகள், பிறமுயற்சிகள் என்ற ரீதியில் தனது தகவல்களை தொகு த்துச் செல்கின்றார்.

மலையக இலக்கியத் திற்கும் ஒரு வரலாறு உண்டு. அவர்களது அனுபவங்களும் முயற்சிகளும் ஏனைய தமிழ்த் தரப்பினரைச் சார்ந்தது போல் அல்ல. இதனால் இவர்களது அனுபவங்களும் படைப்பு முயற்சிகளும் பண்பாட்டு அம்சங்களும் ஒன்றும் தாழ்ந்ததும் அல்ல. ஏனையவர்களுக்கு இவர்கள் குறைந்தவர்களும் அல்ல.


இங்கு மலையகமும் இலக்கி யமும் எனும் தலைப்பில் நூல் அமைந்துள்ளது இலக்கியம் என்பது வெறும் இலக்கியம் என்று மட்டும் அறிந்து கொள்வதல்ல. 'இலக்கியம்' தான் தோன்றுகின்ற சமூகத்தின் வரலாற்றுடன் இணைந்தது. இலக் கிய வரலாறு என்பது இலக்கியத்தின் வரலாறு மாத்திரம் அன்று. அது இலக்கியமும் வரலாறும் இணைந்த ஒரு நிலையே ஆகும். இதனை அந்தனிஜீவா புரிந்து கொள்ள வேண்டும்.

மலையகம் இலக்கியம் குறித்து இன்னும் விரிந்து சென்று ஓர் ஆரோக்கியமான செழுமைமிக்க பாரம்பரியம் ஒன்றை இனங்கண்டு வளர்த்துச் செல்லும் வகையில் இனி ஆய்வுகள் அமைய வேண்டும்.

ஒரு சமூகம் தன்னைப்பற்றி அறிந்து கொள்ள, புரிந்து கொள்ள தன்னைப்பற்றி, தான் சம்பந்தப் பட்டவைபற்றி எழுதப்பட்ட பவனவ ற்றை தான் அறிந்திருக்கவேண்டும். புரிந்திருக்க வேண்டும். அந்த ரீதியில் ஜீவாவின் நூல்வரவும் குறிப்பிடத்தக்க ஒன்றே.

அந்தனிஜீவா மலையகத்தின் தகவல் வங்கி. இவர் போன்றோர் மலையக இலக்கியம் குறித்து இன்னும் துல்லியமான ஆய்வு நிலைப்பட்ட நூல்களை எழுதவேண்டும். இவரிடம் நாம் நிறைய எதிர்பார்க்கலாம். இதில் தவறில்லை.

-மாலின்-





**பூவரசு** (காலாண்டிதழ்)
37, 2ம்குறுக்கு வேலூர், கல்லடி மட்டக் களப்பு


சாருமதி, வாசுதேவன் ஆகி யோரை ஆசிரியர்களாகக் கொண்டு ஒரு கனதியான கலை இலக்கிய இதழாக வெளிவருகிறது. பூவரசு. இதுவரை ஜன - மா, ஏப் - ஜுன் என இரு இதழ்கள் வெளிவந்துள்ளன. நல்லதொரு நம்பிக் கையை எம்மில் ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.



**விழுதுகள் மண்ணைத் தொடும்** (கவிதைகள்)
முல்லை அமுதன்

காந்தளகம் வெளியீடாக 1992ல் வெளியிடப்பட்ட ஈழத்துக் கவிஞரின் கவிதைகளின் தொகுப்பு 96ல் அறிமுக த்திற்காய் மிகத் தாமதித்துக் கிடைத்தது துரதிர்ஷ்டம்தான். நித்ய கல்யாணி, புதிய அடிமைகள், விடியத்துடிக்கும் ராத் திரிகள், யுத்த காண்டம் என முன்னைய நூல்கள் பல தந்தும் பரவலாய் அறிமுக மற்றவராய் இருப்பதற்கு இவர் கவிதை கள்தான் காரணமோ?


இது
எங்கள் தேசம்
சுரண்டாதீர்கள்
நாளை -
இந்த மண்ணில்தான்
புதைய வேண்டிவரும்





**புயல் தொட்ட புஷ்பங்கள்**
(கவிதைகள்)
ஏ.எல் கால்தீன்
வெளியீடு : பழைய மாணவர் சங்கம் பள்ளிக்குடியிருப்பு ,
அக்கரைப்பற்று.

ஆரம்பக் நிலைக்கவிஞரின் எழுதிப் பழகியவரிகள் ஏ.எம்.ரஸ்மியின் அட்டைப்படத்தோடு வெளிவந்துள் ளது. இவர் கவிதையை இன்னுமின்னும் தேடலாம்; தேடவேண்டும்.




**பெண்கள் உரிமைகளை மனித உரிமைகளாக அங்கீகரித்தல்**
மனித உரிமைகள் பற்றிய ஓர் மீள பார்வை நோக்கி
மூலம் : சார்லொட் பஞ்ச்
தமிழில்: சித்திரலேகா மௌனகுரு
பெண்களுக்கெதிரான வன்முறை -அபிவிருத்தி ஓர் தடை
மூலம்' : ரொக்ஸானா காரியோ
தமிழில் :- கந்தையா சா'வேஸ் வரன்
வெளியீடு : சமூக விஞ்ஞானிகள் சங்கம்
425/15, திம்பிரிகஸ்யாய வீதி கொழும்பு -5.
விலை 50/-

மேற்கூறிய இரு கட்டுரைகள் அடங்கிய பெண்ணிய நூலொன்றை சமூக விஞ்ஞானிகள் சங்கம் வெளி யீட்டுள்ளது. பெண்கள் உரிமைகளும் மனித உரிமைகளே என்ற கோஷம் சர்வதேச அளவில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் வேளை இந்நூலும் வெளிவந்திருப்பது பயன்மிக்கதே.

-நில்ஷா-

www.tamilarangam.net





## 'பிரகடனம்' கவிதை பற்றிச் சில குறிப்புகள்

இரண்டாம் உலகப்போர்க் காலம்.

ஜப்பானிய இராணுவம் தென்கிழக்காசியா எங்கும் வியாபித்துத்தன் கொடூரத்தைக் காட்டிக்கொண்டிருந்தது.

இந்த இராணுவத்திற்கு இன்பமூட்டி மனவலிமையைத்தரக்கூடியவை எவைஎவையோ அவையெல்லாம்தேவைப்பட்டன.

இதற்காக இவர்கள் கொரியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான இளம்பெண்களை சமையல், துணிதுவைத்தல், மற்றும் சிறுசிறு பணிகள் செய்யும் வேலை தருவதாகக் கூறி அழைத்து வந்தனர். நகரங்கள் கிராமங்களிலிருந்து நாடு கடந்து தொழிலுக்காக இவர்கள் புறப்பட்டார்கள்.

எல்லாம் துறந்து வந்தபோதுதான் தொழிலின் 'சுயரூபம்' அவர்களுக்கு விளங்கியது. ஜப்பானிய இராணுவத்தின் இச்சை தீர்க்கும் இன்பப் பொருட்களான 'விபச்சாரிகளாக்குவதற்கே' தங்களைக் கூட்டிவந்ததை உணர்கிறார்கள்.

உணர்ந்தும் பயனில்லை. தொடர்ந்தும் திணிக்கப்பட்ட 'பணியைச்' செய்கிறார்கள். இவர்களில் சிலர் சித்திரவதைப்பட்டு இறந்தும் போயிருக்கின்றனர். சிலர் தப்பித்தும் இருக்கின்றனர்.

இந்தப் பெண்களையே **Comfort Women** (இன்பமூட்டும் / மகிழ்ச்சியூட்டும் பெண்கள்) என அடையாளப்படுத்துகின்றனர். இவர்களில் தற்போது வாழ்பவர்களை அணிதிரட்டி பெண்ணுரிமை மாநாடு ஒன்று பிலிப்பைன்ஸில் நடைபெற்றது. அதில் அவர்களால் எழுதப்பட்ட சில கவிதைகளும் தொகுக்கப்பட்டன. அதிலிருந்து ஒரு கவிதையே இதழ்97இல் ''பிரகடனம்'' என்ற தலைப்பில் வெளியானது. (மூலக்கவிதையின்தலைப்பு **Woman** என்பதாகும். எழுதியவரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஜப்பானிய இராணுவத்தினருக்கெதிராய் இன்பமூட்டும் பெண்களாய் இருந்தும் போராடியதால் ''மகிழ்ச்சியூட்டும் பெண்களின் கவிதைகள்'' என்ற நூலின் நேரடித்தலைப்பை விடுத்து 'போராளிப் பெண்களின் கவிதைகள்' என்ற நூலிலுள்ள கவிதையென்று குறிப்பிட்டேன்.)

இதுபற்றி மேலதிக தகவலொன்று; ஐம்பது வருடத்திற்கும் மேலாக மறைக்கப்பட்டு வந்த இந்தப் பாரிய பெண் அடக்குமுறை சர்வதேச மனித உரிமைகள் குறிப்பேடுகளின்கவனம் பெற்றது. அது சம்பந்தமான அறிக்கையும் பெறப்பட்டது. இந்த அறிக்கையை, இலங்கையரான கலாநிதி ராதிகா குமாரசுவாமி (பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய ஐ.நாவின் விஷேட அறிக்கையாளர்) பாதிக்கப்பட்ட பல பெண்களை அவர்களது நாடுகளிலேயே சந்தித்துப் பெற்றுச் சமர்ப்பித்திருக்கிறார்.

இவ்வாறு பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க ஜப்பான் தயாராகியுள்ளதாகவும் தெரியவருகிறது.

குறித்த இந்தப் பெண்களுக்கெதிரான வன்முறை சர்வதேச மனித உரிமை மீறலாகக் கணக்கிடப்பட்டதையிட்டு பல பெண்கள் அமைப்புக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன.

*எம்.கே.எம் ஷகீப்*

## சுய விமர்சனம் செய்வோம்

சரிநிகர் 96, மார்ச் 7ம்திகதிய இதழில் வெளியான 'மர்சூக்கின் கோபமிது' என்ற எனது கடிதத்தில் நான் என்ன எழுதியிருக்கிறேன் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத சிலர், அமைச்சர் அஷ்ரஃப் மீது கொண்ட கோபத்தில் சரிநிகர் வாயிலாக என்னை விமர்சித்துத் தொடர்ந்து எழுதுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. சரிநிகரில் அபூநிதால் என்ற பெயரில் எழுதுவது பத்திரிகையாளர் தான் என்பதாகவும், அந்தவகையில் அஷ்ரஃபை விமர்சிக்கின்ற உரிமை உங்களுக்கு உண்டு என்பதால் சொந்தப் பெயரில் விமர்சியுங்கள் என்றும் பத்திரிகையாளருக்குத்தான் எழுதியிருந்தேனே தவிர, அபூநிதால் விமர்சிக்கத் தெரியாதவர் என்று எழுதவில்லையே. வேண்டுமானால் சத்தியம் செய்து சொல்கிறேன். அபூநிதால் ஒரு சிறந்த விமர்சகர் தான். நான் மறுக்கவில்லை. அதற்காக அவருடைய விமர்சனக் கருத்துக்கள் அனைத்தும் முற்றும் சரியானவை என்று என்னால் கூறமுடியாது. அதேபோலவே அஷ்ரஃப் அவர்கள் முற்றுமே சரியானவர் என்றும் முஸ்லிம் காங்கிரசின் நடவடிக்கைகள் நூற்றுக்கு நூறுவீதம் சரியானவை என்றும் என்னால் வாதிட முடியாது.

இஸ்லாத்தை தனது வாழ்க்கை வழியாகக் கொண்டு அல்லாஹ்வையும், ரசூலையும் போற்றிப் புகழ்ந்து அரசியல் மேடைகளில் முழங்குகின்ற முஸ்லிம் காங்கிரஸ்தான் பதவிக்கு வர அடிப்படையாகவும் ஆதாரமாகவும் அமைந்த இஸ்லாத்தின் பெயரால் பாரியளவில் ஆத்மீகக் கூட்டங்கள் இல்லாவிட்டாலும் மிகச் சிறிய அளவிலாவது ஒரு மீலாத் விழாவையேனும் நடத்தியிருக்கிறதா என்று அபூநிதால் போன்றவர்கள் கேட்டால் என்னால் எதுவும் கூற முடியாது. அல்லது ஆட்சியின் அங்கமாக முஸ்லிம் காங்கிரஸ் வளர்ச்சியுற்று அதன் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்ற இவ்வேளையில் மருதமுனை மகன் என்ற வகையில் மருதமுனையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் முஸ்லிம் காங்கிரசின் ஆதரவாளருக்கு இளைக்கப்படுகின்ற துரோகங்களைப் பற்றி அல்லது பக்கச்சலுகைகளைப் பற்றி எவராவது குறைபட்டுக்கொண்டாலும் என்னால் எதுவுமே கூறமுடியாது. இவ்விடத்திலெல்லாம் நான் மௌனியாவதைத் தவிர வேறுவழியில்லை.

அதற்காக அஷ்ரஃப் அவர்கள் தேவையில்லை என்றோ அவரது செயற்பாடுகளை முற்றாக நிறுத்திக்கொண்டு இஸ்லாமிய சமூகத்தை விட்டு ஒதுங்கி விடவேண்டுமென்றோ யாராலும் கூற முடியாது. அஷ்ரஃப்க்குப் பதிலாக அவரைவிடவும் சிறப்பாக இஸ்லாமிய சமூகத்தின் தேவைகள், உரிமைகள் பற்றிக் கதைப்பதற்கும் சேவையாற்றுவதற்கும் இன்னொருவர் தோற்றம் பெறும்வரை அஷ்ரஃப் இருக்கவேண்டும். அதுவரை அவரால் விடப்படுகின்ற தவறுகளை எங்களுக்குள் சுட்டிக்காட்டி திருத்திக் கொள்வோம். தன்பல்லைக் குத்தி பிறருக்கு நாற்றம் கொடுக்கக்கூடாதென்ற பழமொழிக்கொப்ப நமது தவறுகளைப் பற்றி நமக்குள் நாமே சுயவிமர்சனம் செய்து திருந்திக்கொள்ள முயற்சி செய்யவேண்டுமே தவிர அவற்றை சர்வதேசமயப்படுத்தி எமக்குள் உள்ள வேற்றுமைகளை பிறர் அறியச் செய்ய வேண்டிய அவசியமில்லை என்பதுதான் எனது கருத்து.

**எம்.ஏ.எம். மர்சூக்**
**மருதமுனை**

## கிண்ணியா: பிரதேச சபையின் அலட்சியம்

கிண்ணியா மக்களையும், மண்ணையும் காப்பாற்றப் போவதாக, வளம்படுத்தப் போவதாக வாக்குறுதியளித்து 1994 மார்ச்சில் பதவிக்கு வந்த கிண்ணியா பிரதேச சபையானது மண்ணையும் மக்களையும் வளம்படுத்தாமல் ஏற்கெனவே பிரதேச சபைக்கிருந்த வளங்களையும் வருமானங்களையும் இழந்து செத்து மடிந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.

பிரதேச சபையினால் கட்டப்பட்டு பிரதேச சபைக்கே சொந்தமாக இருந்த பொதுக்கிணறுகள் உடைத்தெறியப்பட்டு தனிநபர்களால் அக்காணி சொந்தமாக்கப்பட்டுள்ளது. இதனைப் பொதுமக்கள் பொலிஸ் நிலையம்வரை கொண்டு சென்றனர். தவிசாளர் இக்கிணறுகள் தனிநபருக்குரியதென கடிதம் வழங்கியதால் தப்பித்துக் கொண்டார்கள்.

ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட மாடு வெட்டும் அறுவைச்சாலை இரவோடு இரவாக உடைத்தெறியப்பட்டுள்ளது. தற்போது எப்படியான மாடுகள் எங்கே வெட்டப்படுகின்றன என்பதை அறிய முடியாத மக்கள் இறைச்சி வாங்குவதைக் குறைத்துள்ளனர். இதனால், அடுத்த வருடத்துக்கான இறைச்சி சந்தையின் கேள்விக்கட்டளை மிகக் குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் தவிசாளருக்கும் மீன்வியாபாரிகளுக்குமிடையே ஏற்பட்ட கருத்து மோதல் காரணமாக வருடாந்தம் நான்கு இலட்சம் ரூபா வருமானத்தை தந்து கொண்டிருந்த மீன் சந்தையை 1996ல் குத்தகைக்கு எவரும் எடுக்கவில்லை.

சின்னக்கிண்ணியா மாஞ்சோலை வீதியில் பிரதேச சபைக்குச் சொந்தமாக இருந்த காணியை இரண்டு பக்கங்களிலும் குடியிருப்பவர்கள் சுவீகரித்துக்கொண்டு தென்னையும் வாழையும் நட்டுள்ளனர். இது விடயத்திலும் தவிசாளர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நீண்டகால பேரும் புகழும் கொண்ட கிராமக்கோடு மைதானமும், தோனாவில் அமைக்கப்பட்டுள்ள பொழுது போக்கு மைதானமும் கவனிப்பாரின்றிக் கிடக்கிறது.

*யூ. முகைதீன் பாவா,*
*பிரதேச சபை உறுப்பினர்*
*கிண்ணியா*

## நீங்கள் சிந்தித்தால் என்ன?

உங்கள் பத்திரிகையில் இதழ் 98 இன் இறுதிப் பக்கத்தில் ''ராஷிக்குழு எந்த எஸ்.டி.எப் முகாமிற்குள்ளும் சுதந்திரமாகச் சென்று வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது மட்டும்அல்ல, இன்னுமொரு படி மேலே சென்று புலிகள் என சந்தேகிப்போரை கைது செய்யவும், அவர்களை விசாரிக்கவும் கூட அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது, எனக் குறிப்பிட்டு இருந்தீர்கள்.

எனவே இவ்வளவு அதிகாரங்களை அரசு கொடுத்திருந்தும் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்கள் மேடையில் அரசுக்கு எதிராகப் பேசுகிறார் என்றால், நிச்சயமாக அவரது நேர்மையையும் துணிச்சலையும் பாராட்டாமல் இருக்கமுடியாது. இந்த அரசாங்கம் தாங்கள் குறிப்பிட்டது போல் இவ்வளவு அதிகாரங்களையும் ஈ.பி.ஆர்.எல்.எப். என்ற இயக்கத்திற்கு கொடுத்திருந்தும் அதன் தலைவர் அரசுக்கு எதிராகப் பேசுகின்றார் என்றால் அதற்கு என்ன காரணம் என நீங்கள் சிந்தித்துப் பார்த்தீர்களா?

*கே. செல்வகுமார்,*
*கொழும்பு*

## தடுத்தது நானல்ல படையினரே

'நீர்ப்பாசன புனரமைப்பில் இனச் சுத்திகரிப்பு என்ற தலைப்பில் சரிநிகர் இதழ் (ஜூன் 13 - ஜூன் 26 1996) எனது பெயரைச் சம்பந்தப்படுத்தி எனக்கும், எனது தொழிலுக்கும் மாசுப்படுத்தும் நோக்கோடு பிரசுரிக்கப்பட்ட விடயங்களுக்கு மறுப்புத் தெரிவிப்பதற்காக இம்மடலை வரைகின்றேன். மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய நீர்ப்பாசன புனருத்தாரன திட்டத்தின் (N.I.R.P.) கீழ் பின்வருமாறு திட்டங்கள் அனுமதிக்காகக் கொடுக்கப்பட்டன. (பிரதி இணக்கப்பட்டுள்ளது)

1. நீர்ப்பாசனத் திணைக்களம் (வ-கி மாகாணம் - 20திட்டங்கள்
2. நீர்ப்பாசனத் திணைக்களம் (மத்திய) 18திட்டங்கள்
3. கமநலச் சேவை - 04திட்டங்களில் ஆக மொத்தம் 42 திட்டங்கள்.

மாகாணசபை நீர்ப்பாசனத் திணைக்களத்தால் இத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்ட பொழுது சாதி, சமய, மொழி பேதங்களைக் கருத்திற்கொண்டு செயற்படவில்லை. எங்களது உத்தியோகத்தர்கள் சென்று வேலை செய்யக்கூடிய இடங்களாகவும், அரசாங்கப் படையினரால் அனுமதி பெறக்கூடிய இடங்களாகவும், எந்திரி.எல்.எம். இஸ்மாயில் சென்று பார்வையிடக்கூடிய இடங்களுமாகவே இவைகள் தெரிவு செய்யப்பட்டன. இருந்தும், அரசாங்கப் படையினர் பின்வருமாறு தான் அனுமதி வழங்கினர். (நிழற்படப் பிரதி இணைக்கப்பட்டுள்ளது)

1. நீர்ப்பாசனத் திணைக்களம் (வ-கி மாகாணம் - 09திட்டங்கள்
2. நீர்ப்பாசனத் திணைக்களம் (மத்திய) 07 திட்டங்கள் ஆக மொத்தம் 16 திட்டங்கள்

கமநலச் சேவைக்கு எதுவும் வழங்கவில்லையெனக் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கப் படையினர் என்ன ரீதியில் தெரிவு செய்தார்களென எங்களுக்குத் தெரியாது.

வடகிழக்கு மாகாண சபையைப் பொறுத்தமட்டில் நான் மட்டக்களப்பு பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக வேலை செய்கிறேன் எங்களது திணைக்களம் அனுப்பி வைத்த 20 குளங்களுக்கான திட்டங்களில் 9 திட்டங்களை மட்டும் தான் செய்ய முடியுமென பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர். நாங்கள் முன் அனுப்பிய பட்டியலில் மயிலன்கரைச்சக் குளமும் அனுமதிக்காகச் சேர்த்திருந்தோம். இருந்தும் பாதுகாப்புப் படையினரால், அனுமதித்து அனுப்பப்பட்ட பட்டியலில் மயிலன்கரைச்சக்குளம் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. கார்ணம் எங்களுக்குத் தெரியாது. தங்களது பட்டியலைத் தவிர வேறு எவையும் சிபாரிசு செய்யப்படவில்லையென அரச படைத் தலைமைத்துவம் அறிவித்துள்ளது.

நான் எனது பிரதேசத்தில் முடியுமான வரை வேலைகளைக் கூட்டிக்கொண்டு செல்கிறேனே தவிர தடையாக ஒரு போதும் இருந்ததில்லை. வேலை செய்யாமல் சுரண்டுபவர்களுக்கு நான் எதிராகவுள்ளேன். ஜனாப். அஹமட் ஹிஸாம் அவர்கள் என்னிடம் கேட்கிறார்கள். நானும் எனது குடும்பமும் முஸ்லிம் இனத்தோடு அந்நியோன்யமாக பழகுபவர்கள். எங்களுக்கு எந்த இனபேதமுமில்லை. இதில் அவர் என்னைச் சேர்ப்பதற்கு எந்த நியாயமுமில்லை. இனச்சுத்திகரிப்பு செய்யவேண்டிய அவசியமும் எனக்கில்லை. என்னை ஜனாப். அஹமட் ஹிஸாம் அவர்கள் வாழ்த்துக் கூறியதற்கு நன்றி! தமிழ் - முஸ்லிம் உறவுகள் நன்கு ஸ்திரப்பட வேண்டும். மயிலன்கரைச்சக்குளம் மீண்டும் இத்திட்டத்தில் சேர்ப்பதற்கு பாதுகாப்பு படையினரும் மக்கள் பிரதிநிதிகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் உதவ வேண்டும்.

*கே. வடிவேல்*
*பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்*
*மட்டக்களப்பு*

## ஒரு போதும் மறவோம்

சரிநிகர் பத்திரிகையின் நீண்ட நாளைய வாசகர்களில் நானும் ஒருவன் என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுகின்றேன். காரணம் ''சார்பு நிலை''ப் பத்திரிகைகளே ''பெரும் பான்மை''யான வாசகர்களை வசீகரிக்கின்ற நிலையில் 'சரிநிகர்' போன்ற மாற்றுக்கருத்துக்களுக்குக் களம் தருகின்ற பத்திரிகையின் வாசகன் என்பதனால், சரிநிகரின் இதழ் 98இல் (மே - 30 ஜூன் 1, 1996) இடம் பெற்ற வ.ஐ.ச. ஜெயபாலன் அவர்களின் ''தமிழர்களே! வடபகுதி முஸ்லிம்களை வரவேற்கத் தயாராகுங்கள்'' என்ற கட்டுரை என்னில் சில அலைகளை எழுப்பி விட்டமையினாலேயே இதழ் 100இல் வெளியான கட்டுரையை எழுதினேன்.

முதலில் வ.ஐ.ச. ஜெயபாலன்போன்ற மனித நேயம் மிக்க மனிதர்களைச் சந்திக்க நேர்கையில் ஒருவரையொருவர் சந்தேகக்கண் கொண்டும், இனத்துவ சிந்தனையின் கடூரத்தால் விரோதிகளாகவும் நோக்குகின்ற சூழ்நிலையில் மனிதம் சுமக்கின்ற பூமியாய் இன்னும் இலங்கை இருக்கின்றது என்ற நம்பிக்கை வலுவாகிறது என்பதை நினைக்கையில் சந்தோஷம்தான். ஜெயபாலன் அவர்களின் ''மனிதம்'' சஞ்சிகையில் பிரசுரமான கவிதைகளில் அவரைக் கண்டிருக்கிறேன். அதற்கு முன் என் சமூகத்தின் பிரச்சினையை, வரலாற்றை ஆரம்பநிலை மாணவனாக நின்று தேடிக்கற்கின்ற நான் வ.ஐ.ச. ஜெயபாலனின் 83ம் ஆண்டு வெளியான தேசிய இனப்பிரச்சினையும், முஸ்லிம் மக்களும்'' என்ற புத்தகம் மூலமே அவரை அறிந்துக்கொாண்டிருந்தேன். அண்மையில்தான் அவரைப் பற்றி ஓரளவு முழுமையாய் அறியவந்தேன். (மூன்றாவது மனிதன் மூலம்) அவரையும் அவர் போன்றோரையும் முஸ்லிம் சமூகம் ஒருபோதும் மறக்காது.

*எம்.எஸ்.எம் பாரிஸ்*
*கொழும்பு*

## ஏன் இந்த நிர்ப்பந்தம்?

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் சகல அரச அலுவலங்களிலும் மாதாந்த சம்பளம் காசாக வழங்கப்படுவது வழக்கம். செங்கலடி, களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை போன்ற இதர பகுதிகளிலும் அரசாங்க அலுவலகங்களில் சம்பளம் காசாகவே வழங்கப்படுகின்றது. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ பிரிகேடியர் காரியாலயத்தின் அருகாமையில் பாதுகாப்பான இடத்தில் அமைந்திருக்கும் எமது மாகாண நீர்ப்பாசன ஊழியர்களுக்கு மாத்திரம் மாதச் சம்பளம் காசோலையாக வழங்கப்படுகின்றது. ஏழை ஊழியர்கள் கமிசன் கொடுத்து காசோலையை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் எப்போது தீரும்?

***மட்டக்களப்பு மாகாண பிரதி நீர்ப்பாசன ஊழியர்கள்***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SARINIHAR
சரிநிகர்

# ரணிலும் தீர்வும்

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அரசாங்கத்தின் இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பிரேரணைகள் தொடர்பாக தனது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். இவற்றில் இரண்டு முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. 1. இலங்கையின் ஒற்றையாட்சித் தன்மையைப் பாதுகாத்துக் கொள்வது. 2. அரசியல் தீர்வு காண்பது தொடர்பான பொ.ஐ.முவின் நேர்மையான கடமைப்பாடு பற்றிய சந்தேகம். இதற்கு முன்பு பாராளுமன்ற தெரிவுக் குழுவில் ஐ.தே.கட்சியின் பிரதிநிதியான கே.என். சொக்ஸி அவர்கள் தன்னுடைய தனிப்பட்ட நிலைப்பாடாக ஒற்றையாட்சி முறையைப் பாதுகாக்க ஆலோசனை கூறியுள்ளார். சொக்ஸியினுடைய இந்தப் பிரேரணை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அவர்களின் வேண்டுகோளின் பேரில் முன் வைக்கப்பட்டது என்ற சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் பரவலாக எழுப்பப்படுகின்றன. சொக்ஸி அவர்களின் பிரேரணை முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பிரேரணைகள் தொடர்பாக அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் அவர்கள் காண்பிக்கின்ற ஆர்வம் இந்த சந்தேகத்தை வலுப்படுத்தக் கூடியதாக அமைகின்றது. இது உண்மையானால் இது விடயம் தொடர்பாக அரசாங்கத்தின் நேர்மையான நிலைப்பாடு பற்றிய பல கேள்விகள் எழுகின்றன. 17 வருட காலமாக ஐக்கிய தேசியக் கட்சி இன முரண்பாட்டைக் கையாண்ட விதம் குறித்துப் பாரிய விமர்சனங்களை முன் வைக்கின்ற இந்த அரசாங்கம், ஒற்றையாட்சித் தன்மையைச் சிங்கள இனவாத நோக்கங்களுக்காகப் பாதுகாக்க விளையும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் உடன்பாட்டை ஏற்படுத்தி அவ்வுடன்பாட்டுடனான அரசியல் தீர்வைத் தமிழ் மக்கள் மீது பலாத்காரமாகத் திணிக்க முயல்கின்றதா என்பதே பிரதான கேள்வியாகும். மறுபுறம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளப் பாரிய பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ள அமைச்சர் பீரிஸ் அவர்களின் முயற்சிக்கு எதிர் மாறாக ஆட்சித் தலைவி சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகப் பல்வேறு நெருக்கடிகளைத் தொடுத்து வருகின்ற நிலைமையானது இனப் பிரச்சினையின் தீர்வு தொடர்பாக அரசாங்கத்தினுள் நிலவுகின்ற முரண்பாட்டை மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது. ஜனாதிபதியோடு தீர்வுகள் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடாத்த மாட்டேன் என்றும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் எமது பங்களிப்பைச் செலுத்துவோம் என்றும் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கூறியுள்ள கூற்று கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அரசாங்கத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் நிலவுகின்ற இந்த இழுபறி நிலைமையானது இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதிய அனுபவமல்ல. கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களைப் பகடைக் காய்களாக்கி அவர்களது பிரச்சினையை தமது பேரினவாதப் பசிக்கு இரையாக்கிய நீண்ட வரலாற்றைக் கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இம்முறையும் தீர்வுக்கான முயற்சிகளை பாழடித்துவிட்டு ஒருவர் மீது மற்றவர் பழி சுமத்தி தப்பித்துக் கொள்ள முயல மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை காணக்கூடியதாக இல்லை. தாராள ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் நோக்கும் போது இவ்வினவாத பிரச்சினையின் தீர்வு தொடர்பாக வெற்றி அளிக்கக் கூடிய பங்களிப்பைச் செலுத்தவல்ல மூன்று தரப்பினர் உள்ளனர். 1) பதவியிலிருக்கின்ற அரசாங்கம் 2) பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாக விளங்குகின்ற ஐக்கிய தேசியக் கட்சி. 3) ஆயுதமேந்தி போர்க்களத்தில் இருக்கின்ற விடுதலைப் புலிகள் இந்த மூன்று தரப்பினரும் பங்கு பற்றுகின்ற பேச்சுவார்த்தை நடைமுறைகள் சாதகமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமேயானால் பின்வரும் அம்சங்கள் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். (1)மேற்கூறிய இந்த மூன்று தரப்பினரும் சமத்துவமான பங்காளிகளாக நம்பிக்கையுடன் இணைந்து செயற்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்குதல். (2)பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுகின்ற முயற்சியில் ஈடுபடுகின்ற இந்த முத்தரப்பினரில் எந்தவொரு தரப்பினருக்கும் எவ்வித தோல்வியும் ஏற்படாத சூழ்நிலையை உறுதி செய்கின்ற அதேநேரத்தில் இம்முயற்சியின் இறுதிவிளைவாக முத்தரப்பினருக்குமே பூரணத்துவமான வெற்றியை ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை உருவாக்குதல். (Win Win Win Situation) (3)இந்த வெற்றியின் சாதகத் தன்மையை முத்தரப்பினரும் சமமாகப் பகிர்ந்து கொள்ளக் கூடிய சூழ்நிலை. அரசு மேற்கொண்ட சமாதான முயற்சிகளின் தோல்விக்கான அடிப்படைக் காரணிகளையும் அரசாங்கத்திடமிருந்த பலவீனங்களையும் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து வாபஸ் பெறுவதற்கு வழிவகுத்த காரணிகளையும் முரண்பாடு, தீர்வு தொடர்பான வழிவகைகளின் (Democratic Conflict Resolution) அடிப்படையில் அலசி ஆராயாமல் புலிகளைப் பழி வாங்கும் நோக்கில் ஆவேசமான யுத்தத்தில் ஈடுபட்டு முழுத்தமிழ் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இந்த யுத்த முனைப்புகளை முன்னெடுத்து செல்வதன் மூலம் தீர்வை அடைய முடியாது. ஐ.தே.கட்சி மீதான குரோதங்களை அடிப்படையாகக் கொண்டு அக்கட்சி மேற்கொண்ட ஊழல் நடவடிக்கைகளையும் அதிகார துஷ்பிரயோகங்களையும் தொடர்ந்தும் அம்பலப்படுத்தி அக்கட்சியுடன் முரண்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு இந்நாட்டின் சமூகங்களையும்,பொருளாதாரத்தையும் மனித வாழ்வையும் பாரிய அழிவுக்கு இட்டுச் செல்லுகின்ற இந்த யுத்தத்திற்கு மாற்றீடான அரசியற் தீர்வை அடைதற்கு தவிர்க்க முடியாத தேவையான ஐ.தே.கவின் ஆதரவைப் பெற்றக் கொள்ள முடியாது. தமது கட்சி கொண்டுள்ள பேரினவாதக் கருத்தியலை பாதுகாத்துக் கொள்கின்ற அதேவேளை இன முரண்பாட்டிற்கும் தீர்வைக் கண்டுவிடலாம் என்ற ஐ.தே.கவின் நிலைப்பாடு ஒரு போதும் வெற்றியடையப் போவதில்லை. மறுபுறம் இப்பிரச்சினைக்கான தீர்வை இனம் காணாமல் அரசாங்கக் கட்சியுடன் இருக்கின்ற அரசியல் போட்டா போட்டிகளை தீர்த்துக் கொள்வதற்கு இப்பிரச்சினையை பயன்படுத்த முயலுகின்ற ஐ.தே, கவின் முயற்சியானது, இப்பிரச்சினையின் தீர்வுக்குத் தடையாக அமைவதோடு பாரிய விபரீதங்களுக்கு நாட்டையே இட்டுச் செல்ல வழி வகுக்கும். தமிழ் மக்களின் துன்ப துயரங்களையும் தென்னிலங்கையில் இனமுரண்பாட்டிற்கான சமஷ்டி முறையிலான தீர்வை நோக்கி சாதகமாக வளர்ந்து வருகின்ற மக்கள் ஆதரவுகளையும் இனப் பிரச்சினையை ஜனநாயக ரீதியில் தீர்ப்பது தொடர்பாக தமது எதிர்பார்ப்புக்களினதும்,கோரிக்கைகளினதும் வரையறைகளை இனம் கண்டு முன்வைக்க வேண்டியதன் அவசியத்தையும் முழுமையாகப் புறக்கணித்து அதிதீவிர நிலைப்பாட்டிலிருந்து பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முயலுகின்ற விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள், பேச்சுவார்த்தை மூலமான தீர்வைக் காண்தற்கு தடையாகவே அமையும். இத்தகைய பின்னணியில் இப்பிரச்சினைக்கு தீர்வு என்பது காணக்கூடிய தொலைதூரத்தில் இருக்கின்றதா என்ற சந்தேகம் எழத்தான் செய்கின்றது. பேச்சுவார்த்தை மூலமான தீர்வை யதார்த்தமாக ஆக்கிக் கொள்ள வேண்டுமானால் இந்த மேற்கூறிய முத்தரப்பினரதும் நிலைப்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதும் அவர்கள் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தைகளை நடாத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவதும் தவிர்க்க முடியாததாகும். இவர்களுக்கிடையில் நிலவுகின்ற சந்தேகங்களையும், அவநம்பிக்கைகளையும் தேசிய முயற்சிகளின் மூலமாக போக்க முடியாது என்பது நிரூபிக்கப்பட்ட விடயமாகும். எனவே முரண்பாட்டு தீர்வுக்கான நிபுணத்துவங்களையும், நிறுவக ரீதியான தகுதிகளையும் கொண்ட முத்தரப்பினரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒரு சர்வதேச தரப்பின் ஈடுபாடு தவிர்க்கப்பட முடியாத தொன்றாகும்.

காரைதீவு:

# போய்ச்சேருங்கள் புலிகளிடம் என்கிறார் படையதிகாரி!

மட்டக்களப்பு நகரம் முன்னைய காலங்களைப்போல பதட்டமும் அச்சமும் நிறைந்த சூழ்நிலைக்குள் படிப்படியாக தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கடந்த ஞாயிறு (7ம் திகதி) இரவு திடீரென நகரம் படையினரால் முற்றாக தடை செய்யப்பட்டிருந்தது.

நகரின் பிரதான நுழைவாயிலான கோட்டை முனைப்பாலம், புதிய பாலம், சுமைதாங்கிப் பாலம் என்பனவும் கோவிந்தன் வீதி ஆகியனவும் பொதுமக்கள் உள்ளே வரமுடியாதபடியும் வெளியேற முடியாதபடியும் படையினரால் தடுக்கப்பட்டது.

இரவு 7.30 இலிருந்து 10 மணிவரை நடந்த இச்சம்பவம் பொதுமக்களை வீடுகளுக்குள் அச்சத்துடன் முடங்க வைத்தது. கடைகள் எல்லாம் திடீரென இழுத்து மூடப்பட்டன. வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வீதிகளில் கிடக்க நேரிட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் மட்டக்களப்பு இராணுவ இணைப்பதிகாரியிடம் முறையிட்டதற்குப் பின்னர் இரவு பத்து மணிக்குத்தான் பொதுமக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். படையினரின் விசமத்தனமான இந்நடவடிக்கைகள் எந்த நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றது என்பது யாருக்குமே விளங்கவில்லை.

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைச் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் பொ.செல்வராசாவின் கோட்டைக்கல்லாறு வீட்டில் முச்சக்கர வண்டி ஒன்றில் வந்த இளைஞர்களினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதலினால் பொ.செல்வராசா எம்.பியின் மெய்ப்பாதுகாவலரான ஒரு பொலிஸ்காரர் காயம் அடைந்துள்ளார். வீட்டின் அருகில் நின்ற மற்றும் ஒரு இளைஞர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகங்களினால் வீடு சேதமடைந்துள்ளது. பொ.செல்வராசா எம்.பிக்கும் சிறிது காயம் ஏற்பட்டதாகவும் தெரிய வருகிறது. இவ்வளவு நாட்களும் எந்தவித அச்சுறுத்தலும் இன்றி இருந்த எம்.பியின் மீது மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கை எல்லோருக்கும் ஓர் சந்தேகத்தை உண்டு பண்ணியுள்ளது.

சந்திரிகா அரசின் வேண்டுதலின் பேரில் வடகிழக்கு தமிழர்கள் மத்தியில் ஓர் கசப்புணர்வை உண்டு பண்ண கிழக்கில் தனிக் கட்சி ஒன்றை உருவாக்க அமைச்சர் அஷ்ரஃப் கிழக்கின் முக்கிய அரசியல்வாதிகள், முக்கியஸ்தர்கள் மத்தியில் தீவிர வேட்டையில் இறங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஜோசப் பரராஜசிங்கத்திற்கு எதிரானவர்களை ஒன்று திரட்டுவதிலும் அஷ்ரஃப் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கிழக்கின் தனிக்கட்சி நடவடிக்கைகளுக்கு பொ.செல்வராசா எம்.பியின் ஆதரவு கோரப்பட்டதாகவும் அவருடன் நெருங்கிய சிலர் தகவல் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு பொதுஜன முன்னணியின் பிரதம அமைப்பாளர் கணேஷமூர்த்தியின் தம்பி உதயகுமார் சனியன்று போரதீவில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள பொதுஜன முன்னணியின் அனைத்து அமைப்பாளர்களும் ராஜினாமா செய்ய வேண்டும் என புலிகள் விடுத்த வேண்டுகோளை அடுத்து கணேஷமூர்த்தி கொழும்பில் தங்கி இருந்து செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

கடந்த கால இன வன்முறைகளினால் கிழக்கில் முஸ்லீம் ஊர்காவல் படையினரால் வீடுகள், கடைகள் , கோயில்கள் , பள்ளிக்கூடம், வைத்தியசாலை என முற்றாக நிர்மூலமாக்கப்பட்ட கிராமம் காரைதீவு ஆகும்.

இக்கிராமம் கடந்த ஆறு வருடங்களாக விசேட அதிரடிப்படையினரின் முழுக்கட்டுப்பாட்டிற்குள் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இங்கு சிவில் நிர்வாகம் என்பது விசேட அதிரடிப்படை முகாமில் இருந்து பிறப்பிக்கப்படும் இராணுவ கட்டுப்பாடுகளின் அடாவடித்தனங்களாகவே ஆறு வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அண்மையில் இக்கிராமத்திற்குள் புலிகள் இயக்க உறுப்பினர்கள் நிதி வசூலிக்க வந்ததாக கேள்விப்பட்டதைத் தொடர்ந்து ஊர்ப் பொதுமக்களை அழைத்து முகாம் பொறுப்பதிகாரி மேலும் புதிய கட்டுப்பாடுகள் பலவற்றை பொதுமக்கள் மீது திணித்துள்ளார். இரவு 8 மணிக்குப்பின்னர் வீதிகளில் இறங்கக் கூடாது, அயலில் உள்ள தமிழ்க்கிராமங்களுக்கு செல்லக்கூடாது. புலிகளுடன் எந்த வித உறவுகளையும் மேற்கொள்ளக்கூடாது. இக்கட்டுப்பாடுகளுக்குள் வாழ விரும்பாதவர்கள் வீடு வாசல்களை விட்டுவிட்டு உடனடியாக கொக்கட்டிச்சோலைக்குச் சென்று புலிகளுடன் சேருங்கள் என்று கண்டிப்பான உத்தரவு இட்டிருக்கிறார்.

*மட்டக்களப்பிலிருந்து*
*குருஷேத்திரன்.*

# உதவி வழங்கும் நாடுகள் உதவி வழங்காது?

பொ.ஐ.மு. அரசாங்கம் உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து யாழ்குடாநாட்டில் புனருத்தாரணப் பணியில் ஈடுபடுவதற்காக 247 கோடி அமெரிக்க டொலர்களை நன்கொடையாக பெற்றுக்கொள்ளும் முயற்சியில் இறங்கியதும், யாழ்ப்பாணப் பாதுகாப்பு நிலை தொடர்பாக இன்னமும், ஐயமான நிலையே நிலவுவதால், இந்நாடுகள் உதவிகளை வழங்குவதில் தயக்கம் காட்டி வருவதும் தெரிந்ததே.

யாழ் குடாநாட்டில் பாதுகாப்பு பிரச்சினை எதுவும் இல்லை. அங்கு சுமுகமான நிலையே நிலவுகிறது என்று காட்டுவதன் மூலம் இத்தொகையைப் பெற்றுக்கொள்ள அரச [illegible]ில் பெருமுயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கம், உதவி வழங்கும் நாட்டுப் பிரதிநிதிகள், யாழ் மக்கள் ஆகியோரின் முக்கூட்டின் கண்காணிப்பில் இப்பணம் செலவு செய்யப்படுவதை விரும்பும் இந்த நாடுகள் அதற்கான பாதுகாப்பு நிலை, தரைமார்க்க பயணத்திற்கான ஒழுங்கு என்பன குறித்து தயக்கம் காட்டுவது ஒன்றும் வியப்பானதல்ல. ஏற்கெனவே இவ்வாறான பெரும் பொருட் செலவில் செய்யப்பட்ட முயற்சிகள் அனைத்தும் யுத்த நிலை காரணமாக வீண் விரயமாகின. அல்லது புனருத்தாரணத்திற்காக பெறப்பட்ட உதவித்தொகை அரசாங்கத்தின் வரவு செலவு பற்றாக்குறைக்கு போட்டுக்கட்டப்பட்டன என்பது அந்த நாடுகள் அறியாத ஒன்றல்ல. ஆனாலும், இந்த நிலைமை பற்றிய உண்மைகளை மூடிமறைக்க விரும்பும் அரசாங்கம் இதைப்பற்றி எழுதும் பத்திரிகைகளைக்கூட மிரட்டி வருகிறது. அண்மையில் இந்நிலைமை தொடர்பாக (ஜுன் 23) சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை ஒன்று தொடர்பாக அதன் ஆசிரியர் அரசாங்க உயர் மட்டத்தினரினால் பலத்த கண்டனத்திற்கும், தொலைபேசி மிரட்டலுக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தார்.

ஆனால் சென்ற வாரம் யாழ் நகரில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவம் அரசாங்கத்தின் மூடிமறைப்புக்களை எல்லாம் மீறி அங்குள்ள உண்மை நிலையை வெளிப்படுத்தியுள்ளது. இது பற்றி அவர்களது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டு அரசாங்கத்தின் தேசிய அக்கறை பற்றி கேள்வி எழுப்பியுள்ளார். இச்சம்பவத்தை அவசர அவசரமாக அமெரிக்கா கண்டனம் செய்ததும் கூட இலங்கை அரசாங்கம் அதன் கையாளான உலக வங்கியின் தாளத்திற்குள் ஆடத்தயாராக இருப்பதனால் இலங்கை அரசாங்கத்தை பாதுகாக்கும் கடப்பாடு அதற்கு ஏற்பட்டிருப்பதன் காரணத்தினாலாகும் என்கின்றார்கள் அரசியல் விமர்சகர்கள்.

வடக்கு கிழக்கு நிலையை காரணம் காட்டி எடுக்கப்படும் பணம் உண்மையில் செலவழிக்கப்படுவது தெற்கிலேயே என்பது ஊரறிந்த இரகசியம். இதைத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களே சுட்டிக்காட்டி உள்ளார்கள். அரசாங்கத்திடம் குடாநாட்டில் புனருத்தாரணம் செய்ய சரியான திட்டம் இல்லாதிருப்பதும் அங்குள்ள பாதுகாப்பு நிலைமை நம்பிக்கை ஊட்டப்படாமல் இருப்பதும் தெற்கின் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க அரசாங்கம் திணறுவதையும் உதவி வழங்கும் நாடுகள் நன்கறியும். இதன் காரணமாக இந்த 247 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொடுக்கப்பட்டால் அவை தெற்கிலேயே பயன்படுத்தப்படும் என உதவி வழங்கும் நாடுகள் அபிப்பிராயப்படுகின்றன.

இந்த நிலையில் ஜனாதிபதியின் நிலை மிகவும் நெருக்கடியான ஒன்றாக உள்ளது.

இதன் காரணமாக நிதி உதவி கோரி விரைவிலேயே இந்த நாடுகளை நோக்கி புறப்படக்கூடும் என்ற செய்திகள் இப்போது வெளியாகியுள்ளன.

# அரச ஆதரவாளர் கைது!

மின்சார வேலை நிறுத்தத்தை ஒட்டி அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள மின்சார அதிகாரியான ரீ.எச்.டீ.ஜே. செனவிரத்ன எதுவித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாது தொடர்ந்தும் 4ஆம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவ்வாறு தொடர்ந்து தடுத்து வைக்காது அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அதன் மீது உடனடியாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யுமாறு அரசிடம் கோரியுள்ள மின்சார சபைத் தொழிற்சங்க கூட்டு முன்னணி, அவர் பொ.ஐ.மு. முன்னணியின் பிரபல ஆதரவாளர் எனவும் இராணுவம் வட பகுதியின் நெடுந்தீவைக் கைப்பற்றிய சந்தர்ப்பத்தில்தாமாகவே முன்வந்து அங்கு மின்சாரம் வழங்க அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஒருவரேயன்றி, நாசகாரரல்ல எனவும், தற்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் உத்தியோகபூர்வ குடியிருப்பின் பாதுகாப்பு மின் வேலையைக் கண்காணிக்கும் பொறுப்பும் அவரிடமே இருந்ததெனவும், அவர் தற்போதைய அரசிற்கு நம்பிக்கையான ஒருவராக செயற்பட்டுள்ளதாகவும்மின்சார ஊழியர் சங்கம் கூறுகிறது.

இது தொடர்பாக அரசாங்கத்திற்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யவும் மின்சார ஊழியர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

*யுக்திய-19960707*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்